Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර் நவ. 05-11, 2000

வாரமலர்

தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY புதிய 381

கூட்டாட்சி நிலைக்குமா?

தமிழ் அமைச்சு சவால்களைச் சமாளிக்குமா?

மாங்கள விலாஸ் திகில் தொடர் ஆரம்பம்

முரசம்

மீண்டும் தலைக்குனிவு!

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

பண்டாரவளையில்
புனர்வாழ்வு முகாமில்
வைக்கப்பட்டிருந்த,
சரணடைந்த
புலி உறுப்பினர்களில்
25 பேருக்கு மேற்பட்டோர்
சிங்களக் காடையர்களால்
தாக்கிக் கொல்லப்பட்ட சம்பவம்
அதிர்ச்சியூட்டுவதாய் உள்ளது.

இது 1983 யூலைக்
கலவரத்தின்போது,
53 தமிழ் அரசியற் கைதிகள்
வெலிக்கடைச் சிறைச்சாலையில்
வைத்துப் படுகொலை
செய்யப்பட்ட சம்பவத்தை
ஞாபகப்படுத்துகிறது.
இந்த அரசாங்கம் தன்னை
இனவாதத்திற்கு ஒருபோதும்
இடமளிக்காத அரசாங்கமாக
வெளிக்காட்டிவரும் பிரசாரத்தை
இந்தச் சம்பவம்
கேள்விக்கிடமானதாக ஆக்கியுள்ளது.

இதனை வெறும்
சந்தர்ப்பவசத்தால் நடந்த
சம்பவமாக எடுத்துக்கொள்ள முடியாது.
தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றத்தில்
நிறைவேற்ற விளைந்த வேளையில்
பல்வேறு தரப்பினராலும்
உசுப்பிவிடப்பட்ட
சிங்கள இனவாதம்,
பின்னர் தேர்தல் பிரசாரங்களில்
ஒரு கட்சியை மற்றொரு கட்சி
வீழ்த்தும் குறிக்கோளுடன்
முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது,
எதிர்க்கட்சியை அம்பலப்படுத்த
ஆளுங்கட்சி கையாண்ட
பிரசார உத்தியில்
புலிகளுடன் எதிர்க்கட்சிக்கு
இரகசியக் கூட்டு உண்டுடென்று
சாதிப்பதே முதன்மையானதாக இருந்தது.

அத்தோடு,
தீர்வுத்திட்டத்திற்கு எதிராக
உசுப்பிவிடப்பட்ட புத்த பிக்குகளை
திருப்திப்படுத்தும் வகையில்
ஆளுங்கட்சியின்
இன்னொரு தரப்பினாடாக
பௌத்தத்தை முதமைப்படுத்தும்
நம்பிக்கை உறுதி மொழிகள்
வழங்கப்பட்டு வந்தன.
இவற்றுக்கு அப்பால்
சிஹல உறுமய போன்ற
இனவாதக் கட்சிகள்
தேர்தலைப்பயன்படுத்தி
இனவாதப் பிரசாரத்தை
மும்முரமாக நடத்தியிருந்தன.

அதேவேளை,
ஓர் ஆசனத்திலிருந்து
பத்து ஆசனங்கள் வரை
அதிகரித்த அளவு
பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை
ஜே.வி.பி.யினர் ஈட்டிக்கொள்ளவும்
துணைபுரிந்தது.
தீர்வுத்திட்டம் தொடர்பாக
அவர்கள் வெளிப்படுத்திய
இனவாதப் பிரசாரமே.
தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை
பிரிக்க முனைவதாகக் கூறி
தமிழ் பேசும் மக்களுக்கான
அதிகாரப் பகிர்வைத் தடுப்பதற்கே
இவர்கள் முனைந்தனர்.
இந்தவாறு
பல்வேறு சக்திகளாலும்
மிரட்சிக்குள்ளாக்கப்பட்ட
சிங்கள சமூகத்தின்
அச்சத்தின் வசப்பட்ட
ஆத்திர உணர்வாக
இந்தச் சம்பவம்
நிகழ்ந்தேறியுள்ளது.

கடுமையான
காவலுக்கு மத்தியில்,
பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த
புனர்வாழ்வழிக்கப்பட்ட கைதிகளை
வெளியேயிருந்த கிராமவாசிகள்
தாக்கிக் கொல்லும்வரை
பாதுகாப்பு அதிகாரிகள்
பூப்பறித்துக் கொண்டிருந்தார்களா?
அவர்களின் உடந்தையின்றி
இத்தகைய சம்பவம்
நடைபெற்றிருக்க முடியுமா?
முகாமுக்குள் நிகழ்ந்த
கைகலப்புப் பற்றிய விடயம்
சிறை நிர்வாகத்தால்
கையாளப்படாமல்
பொதுமக்களைத் தூண்டிவிடும்
வதந்தியாக்கப்பட்டது
எவ்வாறு என்ற கேள்விகளுடன்
மீண்டும்,
மனித நாகரிகத்தின் முன்னால்
தலை குனிந்து நிற்கும்
இலங்கை அரசு
என்ன பதில் சொல்லப்போகிறது?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

ஆன்மீகம்

தெய்வத்தை எங்கு வழிபடுவது?



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவர் சீடர்களுக்கு உபதேசம் செய்து கொண்டு இருக்கும் போது ஒரு சீடன், "சுவாமி கடவுளை வழிபட கோயிலுக்குத்தான் போக வேண்டுமா? நாம் வீட்டிலே இருந்தபடியே தெய்வங்களை வழிபடலாமே. எதற்கு நாம் கோயிலுக்குப் போக வேண்டும்?" என்றான். அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் "உன் கேள்விக்கு சிறிது நேரம் கழித்து பதில் சொல்கிறேன்!" என்று சொல்லி சீடர்களுக்கு உபதேசம் செய்து கொண்டு இருந்தார். சிறிது நேரத்தின் பின் அந்தச் சீடனை அழைத்து "குடிக்க தண்ணீர் கொண்டு வா!" என்றார். சீடன் ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க ஸ்ரீ ராமகிருஷ்ணர் "நான் உன்னிடம் தண்ணீர் கேட்டேன். நீ செம்பில் கொண்டு வந்துள்ளாயே!" என்றார். "சுவாமி, தண்ணீர் கையில் கொண்டு வந்தால் ஒழுகிப் போய்விடுமே என்பதால்தான் செம்பில் கொண்டு வந்தேன்!" என்றான். உடனே ஸ்ரீ ராமகிருஷ்ணர் "மனம் தான் கோயில், அதனால் வீட்டில் இருந்து மனதைக் கட்டுப்படுத்தி கடவுளை எவ்வளவு நேரம் வழிபட்டாலும், கையில் தண்ணீர் ஒழுகுவது போல் மனம் திடீர் என்று சூழ்நிலை காரணமாக சிதைந்துவிடும். அமைதியான, பொதுவான தலங்களில் சென்று தெய்வங்களை வழிபடும் போது மனம் ஒரு நிலைப் படுத்தப்படுகிறது. அதனால் மனம் சுத்தமாகிறது. மனிதனுக்குத் தெளிவும் கிடைக்கிறது!" என்றார்.

ரீ.குணவர்த்தன-களுவாஞ்சிக்குடி.

அனாதைகளை ஆதரிப்பதின் சிறப்பு என்ன?

"ஒருவர் தாய் தந்தையில்லாத ஓர் அனாதைப் பிள்ளையின் தலை மீது தடவி அன்புடன் ஆசி கூறினால், அவர் கையின் கீழ் எவ்வளவு உரோமங்கள் இருக்கின்றதோ அந்த உரோமங்கள் ஒவ்வொன்றுக்கும் பகரமாக அநேக நன்மைகள் அவருக்குக் கிடைக்கின்றன," என்று நபிகள் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

"யார் ஒருவர் அனாதையான ஆண் அல்லது பெண் குழந்தையை வளர்த்து ஆதரிக்கின்றார்களே அவரும் நானும் சுவர்க்கத்தில் இருப்போம்," என்று கூறி நபியவர்கள் தம் இரு விரல்களையும் (நடு விரலையும் சுட்டு விரலையும்) சேர்த்துக் காட்டினார்கள்.

(மிஷ்காத்)

நாமும் அனாதைகளை ஆதரித்து இத்தகைய நன்மைகளை பெற்றுக் கொள்ள முயல்வோமாக.

ஆமீன்.

அப்துல் ராசீக் இறத்தோட்டை.

பின்னிட்டுப் பாராதே!

"கலப்பையின் மேல் தன் கையைவைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய இராச்சியத்திற்குத் தகுதி உள்ளவன் அல்ல," என்றார்

(லூக்-9:62)

ஒரு கமக்காரன் கலப்பையைப்பிடித்து வயல் உழும்போது, எருதுகளை நோக்கிப் பாராமல், பின்னோக்கிப்பார்த்தால், எருதுகள் வயலைவிட்டு வெளியேறி இருந்தால், அவனால் வயலை உழமுடியாது. அவ்விதமே இயேசுவின் பின்னே செல்ல காலடிவைத்த நாம், எங்களுடைய பழைய பாவ வாழ்க்கையைப் பின்னிட்டுப்பார்த்து, பாவத்தில் விழுந்தால் தேவ இராச்சியத்திற்குள் பிரவேசிக்க முடியாது. (1 இரா. 19-21)

"திரும்பவும் பழைய வாழ்க்கைக்கு வர எலிசா எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்தான். அவ்விதமே தேவன் எலிசாவை இரட்டிப்பான தேவ ஆவியால் நிரப்பி, அவனுக்கூடாக பெரிய அற்புதங்களை நடத்தினார். இன்று இயேசு எங்களையும் பழைய பாவ வாழ்க்கையை விட்டு இயேசுவின்பின்னே நடக்க அழைக்கிறார். நீங்களும் ஆயத்தமா?

மங்களவதி-மாகொல.

கவிதைப் போட்டி இல.381



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 11.11.2000

கவிதைப் போட்டி இல.381
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியப்பை வைத்த கவிதைகள்

கவிதைப் போட்டி இல.378

பரிசுக்குரிய கவிதை

மீளா நித்திரை

தூளியிற் சுகமாய்த் தூங்கிய குழவி
வெடித்த குண்டால் வீசப்பட்டு
ஒடிந்த மரத்தில் மீளா நித்திரை!

அ.சந்தியாகோ-கண்டி.

தொட்டில்

வன்னிக் குழந்தைகளுக்கு
இயற்கை அளித்த
தொட்டில்!

எஸ்.பி.கணேஷ்-தாண்டியடி.

இது தான் விதியா?

போர் மண்ணில் பிறந்தாய்!
பெற்றோரை இழந்தாய்..
இடம் பெயர்ந்தாய்....
இங்கு வந்தாய்....!
மரக்கிளையில் உறங்குகிறாய்!
இது தான் உன்விதி என்று
எழுதிவிட்டான் அவன்!

தவா.கே.குமார்-நீர்கொழும்பு.

தூக்கம்

சமாதானத்தைத் தேடுகையில்
இப்பச்சிளங் குழந்தைக்கு
சமாதானம் கிடைத்து
விட்டதென்றுநினைத்து
நிம்மதித் தூக்கமா?
இல்லை
சமாதானத்தைத் தேடுகையில் வந்த
சோர்வுத் தூக்கமா?

பாத்திமா சுல்ஃபிகா -அக்குறணை.

பொறாமை

பஞ்சு மெத்தையில்
புரண்டு புரண்டு படுத்தாலும்
தூங்காத பல விழிகள்,
மிஞ்சு நீ அஞ்சாமல்
பட்டமரம் தனில்
துயில் கொள்வதைப் பார்த்து
பொறாமை கொள்ளுவதைப்
பாராயோ.....!

எ.ஃப்.நிஸ்வானா ஷரீப்தீன்-கல்லொழுவை.

வாரிசு!

சந்தேகமில்லை....
சந்தனக் கட்டையில்
சயனிப்பது
வீரப்பனின் வாரிசுதான்!

பு.ஜதுர்ஷனன்-தம்பிலுவில்-02.

நாட்டம்

குரங்கிலிருந்து
வந்தான்
மனிதன் என்பார்...
அதனால்;
மரத்தை அவனும்
மறக்கவில்லை,
அடிக்கடி அதனை
நாடுகிறான்!

ர்.ஜே.ஏ.ஜான்-மூதூர்-02.

தூவி

காது வைத்தேன் கேட்கிறது;
இதற்குள்ளும் போர் முழக்கம்தான்!
பரவாயில்லை பழக்கப்பட்ட தாலாட்டுதான்
மடியென்ன..? மரக்கிளை என்ன...?
எதுவும் எனக்குத் தூளிதான்.
இதுவும் இதமான தூக்கம்தான்!

பூ.பிரதீபன்-திருகோணமலை.

தூக்கம்!

தூளியிலே
தூங்க வேண்டிய
சின்ன முத்து
போர் செய்த கொடுமையால்
மரக்கட்டையில் தூங்குது
வன்னி முத்து!

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.

எங்கே மகிழ்ச்சி!

இரக்கமற்ற ஈனர்கள் வாழும்
இடத்தில் வாழ்வதை விட
அன்புள்ளம் கொண்ட மிருகங்கள்
மத்தியில் துயில் கொள்வதில்
எவ்வளவு மகிழ்ச்சி!

ஜோசப் அருள்சாமி-ராஜவெல.

உறக்கம்

மகனே - நீ
மஞ்சத்திலும் நெஞ்சத்திலும்
உறங்க வேண்டியவன்;
மரத்துபோன மனிதர்களால்
மரத்திலா உறங்குகிறாய்....?

செ.கிறேஸ் கமலினி-சீனக்குடா.

உலகிற்கு தெரியட்டும்

பல்லியா, ஓணானா
பயப்பட வேண்டாம் ஐயா....!
இது மானிடம்....
பொருளாதார தடைக்கு
இதுவும் ஓர் உதாரணம்!

என்.தக்ஷாஜினி-மன்னார்.

பயிற்சி

மரத்தைச்சுற்றிப்படரும்
தமிழனல்ல;
தலை நகரில் மழை பெய்தால்
தப்புவதற்கும் தங்குவதற்கும்
வழி தேடும்-
இலங்கையன் நான்!

கு.ஸ்ரீராகவராஜன்-மீசாலை.

வாசக(ர்)சாலை

தினமுரசு ஆசிரியருக்கு,

பத்திரிகை சுதந்திரம் பிறழாமல் அரசியல் கட்டுரைகளை நீதியான முறையில் பிரசுரிப்பதில் தினமுரசே முன்னிலையில் நிற்கின்றது.

இன்னும் 'கவிதைகள்', 'சிறுகதைகள்', என்பவற்றுடன் இராஜகுமாரனின் 'மன்னாதி மன்னன்' கதையும் சூப்பர்.

எஸ்.பாமா மெய்யநாதன்-முறுத்தலாவ.

என் உயிரில் கலந்த முரசே!

நான் உன்னை ஒவ்வொருவாரமும் எதிர்ப்பார்த்து தவம் கிடக்கின்றேன். நீ ஒவ்வொரு வாரமும் சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் என்னை மிக்க கவர்ந்துள்ளன. அதிலும்-'நில்-கவனி-முன்னேறு', 'பாப்பாமுரசு', 'ஸ்போட்ஸ்', 'மோனிக்கா என் மோனிக்கா', அத்தனையும் என்னைக் கவர்ந்துள்ளன. எனவே இன்னும் உன் பணி தொடர என் கோடானு கோடி வாழ்த்துக்கள்.

ஏ.எம்.அஸ்ரஃப் -காத்தான்குடி-03.

என்றென்றும் அன்பின் தினமுரசே!

நீ வாராவாரம் சுமந்து வரும் அம்சங்களில் 'பாப்பாமுரசு', 'சிந்தியா பதில்கள்', போன்ற ஆக்கங்கள் அனைத்தும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. உமது சேவை மென்மேலும் வளர தீபாவளி வாழ்த்தோடு உன்னையும் அன்பாக வாழ்துகிறேன்.

சந்திரகாந்தன்-மட்டக்களப்பு.

முகப்பு முதல் கடைசிவரை அனைவரையும் வியக்க வைக்கும் முரசே. 'கவிதை,' 'அரசியல்', 'பாப்பாமுரசு', 'சிறுகதை', 'சினிமா', 'தொடர்கதை', என பல அம்சங்களை எங்களுக்கு தந்த வண்ணமுள்ள உனது சேவையை தொடர என்றென்றும் வாழ்த்துக்கள்.

எங்களின் வாக்கு தினமுரசிற்கே!.

த.பிரசானந்தன்-நாவலப்பிடிய.

தேர்தல் தந்த பாடம்

தேர்தல் அலை ஆர்ப்பரித்து ஓய்ந்துள்ளது. நடந்து முடிந்த இந்த பாராளுமன்ற தேர்தலை நோக்கும்போது மக்கள் முன்னரை விட விழிப்படைந்து விட்டனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. அரசியல் கட்சிகள் பிரசாரக் கூட்டத்தில் எவ்வளவு வாக்குறுதிகளை அள்ளி வீசினாலும், பொது மக்கள் அதற்கு மயங்காது தங்கள் தீர்க்கமான முடிவை எடுத்து காட்டியுள்ளனர். சிலர் தூக்கி எறியப்பட்டிருப்பதும் புதியவர்கள் வெற்றி பெற்றிருப்பதும் இதற்கு சான்று பகர்கிறது.

எந்த ஒரு பெரும்பான்மைக் கட்சியும் சிறுபான்மையினக் கட்சியின் உதவியின்றி தனித்து ஆட்சி அமைப்பது இயலாது என்பதை தினமுரசு முன் கூட்டியே எதிர்வு கூறியது. இம்முறையும் பொய்க்கவில்லை. இது இனி வரும் காலங்களில் சிறுபான்மை இனக் கட்சிகளின் முக்கியத்துவத்தையே எடுத்துக் காட்டுகிறது.

அ.சுதர்சன்-கல்லடி.

என் மூச்சிற்கு உயிரான முரசே!

நீ அணிந்திருக்கும் விடயங்கள் எல்லாவற்றையும் சுமந்து எங்களுக்கு புத்துணர்வு தரும் முரசிற்கு வணக்கம். எல்லாவற்றையும் புயல் போல் அசத்துகிறீர். அதிலும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அலசுவது இராஜதந்திரி', 'தகவல் பெட்டி', 'சினிமாப்பகுதி', 'தேன் கிண்ணம்', 'பாப்பா முரசு', 'இலக்கிய நயம்', 'சிந்தியா பதில்கள்', 'ஸ்போர்ட்ஸ்', அனைத்தும் இனிமை. நீ சூட்டுக்கு சூடாக சுவைக்கும் நற்சுவையாகவும் சுவாரசியமாகவும் மென்மேலும் வளர வாழ்த்துக்கள்.

பி.டிக்ஷன்-பொகவந்தலாவ.

என் அன்பின் (நண்பன்) முரசே!

வாரம் ஒரு முறை நம் கரங்களில் சிங்கார நடை போட்டு நாட்டு நடப்புச் செய்திகளை சுடச் சுடத் தருகிறாய். நீ சுமந்து வரும் அத்தனை பகுதிகளும் பிரமாதம் (நண்பா)! குறை கூறுவதற்கு ஒன்றும் இல்லை!

நீ வாழ்க!
நீ வளர்க!
உன் சேவை தொடர்க!
நலமுடன்
என்று கூறி விடை பெறும்.

என்.எம்.நிஸாம்- காத்தான்குடி-02.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266

என் இதயத்தில் இடம் பிடித்த இனிய முரசே!

நீ வாரம் ஒரு முறை கொண்டு வரும் அத்தனை அம்சங்களும் மிகவும் சுவையானவை. திரு.அற்புதன் அவர்களின் மறைவிற்கு பின்பும் அரசியல் அந்தரங்கங்களை ஆராய்ந்து வெளிப்படுத்தும் உனக்கு மிகவும் நன்றி. சிந்தியாவின் கேள்வி பதில் மிகவும் சுவையானது. 'நில்-கவனி-முன்னேறு', எனும் பகுதி வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கிறது. சினிமாவில் நல்ல விடயங்கள் இருந்தாலும், அதிகம் இருப்பது ஊழல்கள் தான். அதை எடுத்துக் காட்டும் உனக்கு நான் நன்றி சொல்ல மிகவும் கடமைப்பட்டுள்ளேன். சிரிக்கச் சிந்திக்க என்ற பகுதி சிரிப்பதை விட அதிகமாக சிந்திக்கத்தான் வைக்கிறது. உன் பணி தொடர்ந்து எதிர்காலத்தில் வரும் சமுதாயத்திற்கு நல்லதொரு வழிகாட்டியாக இருக்கும் என்ற உறுதியுடன் இருக்கிறேன்.

பு.வேணி-திருகோணமலை.

அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

விசுவரூபமெடுக்கும் பிரச்சனைகளை வேரறுக்க உடனெடுக்கப்படவேண்டிய மூன்று வழிகள்?

இன்று நாட்டில் ஏற்பட்டு வரும் நெருக்கடிமிக்க சூழ்நிலையை எவ்வகையிலும் தடுத்து நிறுத்தி அமைதியான நிலையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு உடன் யுத்த நிறுத்தமும் சமரசப் பேச்சுக்களுடன் புதிய அரசியல் யாப்பு அமுலாக்கலும் ஒன்றன்பின் ஒன்றாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இதுவே இந்நாட்டு சகலதரப்பு மக்களின் சார்பாக விடுக்கப்படும் வேண்டுகோளாகும்.

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலைகளின் பின்னணியில் திட்டமிட்ட சதியொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது தெட்டத் தெளிவாக விளங்குகிறது. இச்சம்பவத்தை உன்னிப்பாக அவதானிக்கும் எவரும், இது தற்செயலாக இடம்பெற்ற ஒன்றாக இருக்க முடியாது என்பதனை ஒப்புக் கொள்வார்கள்.

இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையினருக்குரிய உரிமைகளை வழங்குவதற்கேற்ற புதிய அரசியல் யாப்பினை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டதைத் தொடர்ந்து நாட்டின் பேரினவாதச் சக்திகள் பல ஒன்றன்பின் ஒன்றாகத் தலையெடுத்தன. இத்தகைய சக்திகளில் சில பாராளுமன்ற தேர்தலில் குதித்து படுதோல்வியடைந்தன. இதனைத் தொடர்ந்து சிறுபான்மையின மக்களை முழுமையாகத் தீர்த்துக் கட்டிவிட திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றனவோ என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது.

அரசாங்கம் நவீன பல ஆயுதங்களை இறக்குமதி செய்து பல்லாயிரக் கணக்கில் புதிய துருப்புக்களையும் சேர்த்து வடபுலத்தில் யுத்தத்தை மேலும் வலுப்படுத்தி வருகிறது.

இதேவேளை, விடுதலைப் புலிகளும் கடற்பிராந்தியத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுக் காவல்களையும் மீறி; பிற நாடுகளிலிருந்து புதுப்புது ஆயுதங்களைத் தருவித்து படையினருக்கெதிரான எதிர்த் தாக்குதல்களையும் நடத்திவருகின்றனர்.

தொடரும் யுத்தத்தினால் நாட்டின் இயற்கை வளங்கள் பயன்படுத்தப்படாத நிலையில் முற்றுமுழுதாக சேதமாக்கப்படும் நிலையும் உருவாகியுள்ளது. அத்துடன் பெறுமளவிலான உயிரிழப்புகள் அதிகரிப்பதுடன் ஏராளமான பொருட் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட ஆயுதங்களும் தளபாடங்களும் இழக்கப்பட்டு வருகின்றன. உயிரிழந்த படையினரின் உறவினர்களுக்கு நட்டஈடு வழங்கு வதற்கும் காயமடைந்தவர்களின் சிகிச்சைக்கும் ஏராளமான பணம் செலவிடப்பட வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

பதினோராவது பாராளுமன்றத்தில் முன்னெப்போதையையும் விட, அமைச்சரவையில் இடம் பெறுவோர் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ அதேயளவில் உதவியமைச்சர்களும் நியமனம் பெறுகின்றனர். புதிய அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டுள்ளமையினால், அவற்றுக்கான புதுப் புது இடங்கள் ஏற்பாடு செய்ய வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. இவ்வமைச்சுக்களில் பணிபுரிவோரின் தொகையும் அதிகமாக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக அமைச்சர்களையும் உதவி அமைச்சர்களையும், ஏன்-பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாதுகாப்பதற்கான வழிமுறைகளையும் தேடியாக வேண்டி இருக்கிறது.

இதே காலகட்டத்தில் எண்ணெய் வள நாடுகள் பெற்றோலியப் பொருட்களின் விலையை மென்மேலும் அதிகரிக்க நாட்டம் கொண்டுள்ளன. நாட்டில் உற்பத்தி குறைந்து வருகிறது. இதனால் வருமானமும் குறைந்து வருகிறது. ஆனால் பொருட்களின் விலையோ ஆகாய மட்டத்திற்கு அதிகரித்துக் கொண்டே வருகின்றன. எனவே நாட்டின் பொருளாதார நிலை மிக மோசமடைந்து வருவதற்கான சூழ்நிலைகளே தென்படுகின்றன.

பொதுமக்களைப் பொறுத்தவரையில், சுற்றுச் சூழலை சிறிதளவேனும் கவனத்திலெடுத்துக் கொள்ளாமல், தங்களுடைய சுயதேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலை உருவாகும்போது தங்கள் வெறுப்புணர்ச்சிகளையே வெளிக்காட்ட முற்படுவார்கள்.

இந்த இடையூறுகளெல்லாம் ஒன்று திரண்டு ஒரு பெரும் பூகம்பமாக உருவெடுப்பதற்கு முன்னர் தீர்க்கதரிசனத்துடன் இந்நாட்டின் அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், வர்த்தக பெருமக்கள் ஆகிய அனைவரும் கருத்தொருமித்து காரியத்தில் இறங்க வேண்டிய கட்டாயம் இன்று ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு சில அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப் பட்டிருக்கிறது.

பல வருடங்களாக இந்த நாட்டை குட்டிச் சுவராக்கிச் சீரழித்துவரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் யுத்தத்துக்குச் செலவாகும் பணத்தை மீதப்படுத்தி மக்களுக்கேற்ற மேம்பாட்டுத் திட்டங்களில் பணத்தைச் செலவிடலாம். உயிரிழப்புக்களையும், உடமை இழப்புக்களையும் இதனால் தவிர்க்க முடியும். யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து, பிறநாட்டு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் புதிய அரசியல் யாப்பை அமுல் படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யலாம்.

இத்தகைய முறைகளைக் கையாண்டால் மட்டுமே இந்நாட்டின் எதிர்காலத்தை படுகுழியில் தள்ளிவிட முனையும் பேரினவாதிகளின் பேயாட்டத்தைத் தவிர்க்கலாம்.

இதேபோன்ற அறிவுறுத்தல்களை கடந்த பல வருடங்களாக பலதரப்பினரும் விடுத்து வந்திருக்கின்றனர். ஆனால் இதற்கு இதுவரை எவரும் செவி சாய்த்ததாகத் தெரியவில்லை. ஆனால் இன்றையச் சூழ்நிலை மிகப்பாரிய அச்சுறுத்தலாக விசுவரூபம் எடுத்து வருகிறது.

எனவே இந்தக் கட்டத்திலாவது இந்நாட்டின் பொது மக்கள் சார்பில் விடுக்கப்படும் இவ்வேண்டுகளுக்கு அரசாங்கம் செவிசாய்த்தேயாக வேண்டிய நிலை உருவாகி இருக்கிறது.

புலிகளின் நடமாட்டமுண்டா? மட்டக்களப்பில் வீடுவீடாகத் தேடுதல்

மட்டக்களப்பின் புறநகர்ப் பகுதிகளில் பொலிஸார் வீடு வீடாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஏற்கெனவே பொலிஸாரிடம் பதிவு செய்துள்ள குடியிருப்பாளர்களின் பட்டியலைப் பார்வையிட்டுச் சோதனை நடத்துகின்றனர். தற்காலிகமாக யாரும் தங்கியிருக்கிறார்களா, அல்லது யாரும் வந்து செல்கிறார்களா என்ற விவரங்களும் கேட்கப்படுகின்றன.

முன்பின் தெரியாத புதியவர்களின் நடமாட்டம் காணப்பட்டால், அல்லது நிதி கேட்டு அச்சுறுத்தல்கள் அல்லது கடிதங்கள் அனுப்பப்பட்டால் அது பற்றி தமக்கு உடனடியாகத் தெரியப்படுத்துமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

சமயோசிதமான வழிகளைக் கையாண்டு புலிகள் தமது காரியங்களைச் சாதித்து விடுகின்றனர். இதனால் அப்பாவிப் பொது மக்களே அவ்வப்போது நெருக்கடிக்குள்ளாகிறார்கள், என்று பொதுமக்கள் தரப்பில் பேசப்படுகிறது.

பல ஆண்டு காலமாக சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகளையும், காவலரண்களையும் நிறுவியிருந்த போதும் பாதுகாப்புத் தரப்பினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு புலிகள் தமது நடவடிக்கைகளைச் செய்து முடிக்கின்றனர்.

நித்திரையின்போது ஷெல் விழுந்தது! மனைவி பலி-கணவன் காயம்!

இராப் பொழுதில் நித்திரையிலிருக்கும் போது திடீரென வீட்டுக்குள் ஷெல் வந்து வீழ்ந்து வெடித்துச் சிதறியது. இதனால் வீட்டில் நித்திரையிலிருந்த மனைவி கொல்லப்பட்டார். கணவர் கடும் காயங்களுக்குள்ளானார். கொல்லப்பட்டவர் சவத்சலா தேவி (25) என்றும் காயப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவரது கணவர் தசபேசன் (27) என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

போலியோ வைரஸ் நோயைத் தடுக்க சொட்டு மருந்து வழங்குவதற்காகக் கடைப்பிடிக்கப்படும் போர் நிறுத்த அமைதி நாட்களிலேயே மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது. மட்டக்களப்பு-களுவாஞ்சிக்குடியில் கடந்த வார இறுதியில் இச்சம்பவம் நிகழ்ந்தது. யுத்த நிறுத்தம் என்று ஒரு நாளையாவது நிம்மதியாகக் கழிக்க எண்ணும் மக்களுக்கு இத்தகைய சம்பவங்கள் பெரும் கவலையை ஏற்படுத்துகின்றன.

திருமலைநகரில் துயரவெள்ளம்!

(திருமலை நிருபர்)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் கொலையான சின்னத்துரை மோகனதாஸின் உடல் திங்கள் இரவு திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டது. புதன் காலை பத்து மணிக்கு நல்லடக்கம் செய்யப்படுகிறது.

23.06.82ல் பிறந்த இவர், விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குச் சென்றார் என்ற சந்தேகத்தின் பேரில் பாதுகாப்புப்படை தேடியதற்கிணங்க 14.07.2000 அன்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்கக் குழுவினரிடம் பெற்றோராலேயே ஒப்படைக் கப்பட்டார். அங்கிருந்து புனர்வாழ்வு முகாமிற்கு மாற்றப்பட்டார்.

தாயார் இராசம்மா இவரை கடந்த 20ம் திகதி புனர்வாழ்வு முகாமில் சென்று சந்திருக்கிறார். 23ம் திகதி வரை மகனுடன் முகாமிலேயே இருந்திருக்கிறார். தாயார் விடைபெறும் போது மோகனதாஸ் "அம்மா நான் விடுதலையாகும்வரை உயிருடன் இருக்கமாட்டேன். சரஸ்வதி பூசையன்று எங்களைக் கொல்லதிட்டமிட்டார்கள். தப்பிவிட்டோம்!" என்று அழுதிருக்கிறார். தாயார் ஆறுதல் கூறிவிட்டு வந்திருக்கிறார்.

இவர் குடும்பத்தில் நான்காவது பிள்ளை. தந்தையார் கூலி வேலை செய்பவர். வந்தாறுமூலையிலிருந்து 9 வருடங்களுக்கு முன்னர் திருகோணமலைக்கு இடம் பெயர்ந்து வந்தவர்.

இதற்கிடையில் புனர்வாழ்வு முகாமில் படுகொலை செய்யப்பட்ட மற்றுமொரு திருகோணமலை இளைஞரான 17 வயதான புஷ்பராஜா காண்டீபனின் சடலம் ஞாயிறன்று நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர் வல்வெட்டித்துறையிலிருந்து பெற்றாருடன் இடம்பெயர்ந்து நான்கு வருடங்களுக்கு முன்னர் திருமலைக்கு இடம் பெயர்ந்தவர். மூன்று மாதங்களுக்கு முன்னர் இவர் நண்பர்களுடன் நின்றபோது கைது செய்யப்பட்டு, நிலாவெளி பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டார். பின்னர் புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பப்பட்டார்.

அடுத்த ஆண்டு மே மாதம் 8ம் திகதியன்று தான் வீடுவிக்கப்படவிருப்பதாகவும், அப்போது தன்னை வந்து அழைத்துச் செல்லுமாறும் காண்டீபன் தனது பெற்றாருக்கு 20ம் திகதியன்று கடிதம் எழுதியிருந்தார். அவருடைய கடிதம் பெற்றாரிடம் வந்து சேருமுன்னரே அவருடைய பிரேதம் அவர்களிடம் வந்து சேர்ந்துள்ளது. இதனால் நகரம் துயரக் கடலில் மூழ்கியது.

மற்றுமொருவருடைய சடலமும் திருகோணமலைக்குக் கொண்டு வர இருப்பதாகத் தெரிகிறது.

இப்படுகொலைகளைக் கண்டித்து திருகோணமலையில் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்ட போதும் மக்களனைவரும் ஒத்துழைத்ததாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளனர்.

திருமலைத் தெருக்களில் நெருக்கடிகள் அதிகரிப்பு

(திருமலை நிருபர்)

சமுதாயப் பொறுப்பின்மை காரணமாக திருக்கோணமலையில் நாராயணசாமி ராகவன் என்ற பத்து வயதுப் பாலகனின் உயிர் நடுத்தெருவில் கொடூரமாகப் பிரிந்திருக்கிறது. அக்டோபர் 24ம் திகதி மாலையில் வித்தியாலய வீதியில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த அந்தப் பாலகன் லொறியொன்றினால் மோதுண்டு இரத்த வெள்ளத்தின் மத்தியில் ஸ்தலத்திலேயே பலியாகியிருக்கிறான்.

விபத்துக்கான காரணம் லொறியா, பாலகனின் சைக்கிள் பயணமா என்ற சட்ட ரீதியான விளக்கங்களைவிட, தெருக்களில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் கற்களும் மணல்களும்தான் காரணம் என்று விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்ட நூற்றுக் கணக்கானோருக்குச் சட்டென்று விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

பிறர் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, தான் வாழ்ந்தால் போதும் என்ற கபட எண்ணம் திருக்கோணமலை நகரவாசிகளுக்கு அதிகரித்திருப்பதே அண்மைக் காலங்களில் விபத்துக்கள் திகழக் காரணமாக இருக்கிறது. போக்குவரத்துத் தேவைபற்றிக் கவலைப் படாமல் கழிவுப் பொருட்களை வீதிகளில் குவிப்பதும் கட்டடங்கள் இடிக்கும் கற்கள், மணலை தெருவோரத்தில் கொட்டுவதும் இங்கு சாதாரணச் செய்கையாகி விட்டது. புதிய வீடு கட்டத் தொடங்குபவர்கள் வீடுகட்டி முடியும் வரை மாதக் கணக்கில் கல், மண் என்பவற்றைத் தெருக்களிலேயே விட்டு வைக்கிறார்கள். சில கெட்டிக்காரர்கள் தெருக்களையே கலவை போடும் இடமாக எவ்விதக் கூச்சமும் இன்றி வாரக்கணக்கில் பயன்படுத்துகிறார்கள்.

பாதசாரிகளுக்கும் கைக்கிளோட்டிகளுக்கும் அதிக இடைஞ்சலைத் தரும் இந்தச் செய்கைகள் பற்றி, நகரசபை நிர்வாகமோ, போக்குவரத்துப் பொலிஸாரோ கண்டு கொள்வதில்லை. இதனால் வீதிகளில் கல் மண் என்பவற்றைக் குவித்து வைப்பது சரியான செயல் என்று கருதுமளவுக்கு மனோநிலை வளர்ந்து விட்டது.

விபத்து நடந்த வித்தியாலயம் வீதி ஒரு குறுகலான வீதி எனினும் இரண்டு பெரிய கல்லூரிகள் இருப்பதாலும், நகரமத்தியில் வீதி அமைந்திருப்பதாலும் எந்நேரமும் போக்குவரத்து அதிகமாகவே காணப்படும். அதுமல்லாமல் காலை தொடக்கம் மாலை வரை தெருத்தூங்கி வாலிபர்களும் ஆங்காங்கே குழுமி நிற்பர்.

இவ்வளவு இருந்தும் பாலகனுக்கு நடந்த விபத்துப் பற்றி சாட்சி சொல்ல ஒருவர் கூட முன் வரவில்லை என்பது திருக்கோணமலை நகரவாசிகளின் அப்பட்டமான சுய நலத்தையே காட்டுகிறது.

"இவர்களிடம் பொது நலம் கொஞ்சமேனும் இருந்திருந்தால் திருக்கோணமலையைச் சிங்களக் கட்சிகளுக்குத் தாரைவார்த்திருப்பார்களா?" என்று தெரிவித்தார் ஒரு முதியவர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு இருப்பிடமும் உதவிகளும்

(திருமலை நிருபர்)

கடந்த 23ம் திகதி திருக்கோணமலைக் கடற்படைத் தளம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குட்பட்டதையடுத்து கிண்ணியாவுக்கு அருகிலுள்ள கடற்கரையோரக் கிராமங்களான கரடிப்புலவ், சின்னப் பிள்ளைச்சேனை ஆகிய கிராமத்து மக்கள் நாச்சிக்குடாவுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

250 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 1000 பேர் கொண்ட தமிழ்-முஸ்லிம் மக்கள் நாச்சிக்குடா முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் 61 குடும்பங்களைச் சேர்ந்த 240 சிங்கள மக்கள் நாச்சிக்குடா சிங்களப் பாடசாலையிலும் தங்கியுள்ளனர்.

செவ்வாயன்று இவர்களைப் பார்வையிட்ட செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் திருக்கோணமலை அலுவலகத்தினர் பாய், சவர்க்காரம் போன்ற உணவு அல்லாத பயன்பாட்டுப் பொருட்களை வழங்கியதுடன் கூரைத் தகடுகளையும் வழங்கித் தற்காலிகக் கூரைகள் அமைத்துக் கொள்ளவும் உதவியிருக்கிறார்கள்.

இவர்களுக்காக செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினர் இடம் பெயர் மருத்துவ சேவையொன்றை நடத்தி நோய் தவிர்ப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் நான்கு தற்காலிகக் கழிப்பறைகளையும் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இச் செய்தி எழுதும் வரை இம்மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இந்தியாவுடன் இலங்கையின் தொடர்புகள் கண்டியில்தான் ஆரம்பமாயின

(கண்டி நிருபர்)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு கொழும்பை விடவும் கண்டியுடனேயே முதன் முதலாக ஏற்பட்டதாக கண்டி சிரேஷ்ட ஊடகவியலாளர் திரு.எல்பீ. சேனரத்ன தெரிவித்தார்.

கண்டி நகரில் கடமைபுரியும் தமிழ் சிங்கள, ஆங்கில ஊடகங்களின் நிருபர்களை அழைத்து கண்டியில் உள்ள உதவி இந்தியத் தூதுவர் திரு. கே.மல்ஹோத்ரா சந்திப்பு ஒன்றை மேற்கொண்டார். இந்தச் சந்திப்பு உதவித் தூதுவரின் வாசஸ்தலத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. அங்கு பல்துறை ஊடகவியலாளர்களுடனும் தூதுவர் மனம் விட்டுப் பேசினார்.

அங்கு திரு. சேனரத்ன தொடர்ந்து பேசுகையில், "தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு 9 வயதில் சிறுவனாக வந்த கண்ணுச்சாமி என அழைக்கப்பட்ட கண்டி மன்னன் ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் வருகையுடனும் ஆட்சியுடனும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவையும் தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டார். சிங்கள நங்கையைத் திருமணம் செய்ததன் மூலம் இந்த நட்பும் விசுவாசமும் ஏற்படலாயிற்று. இந்த தொடர்பு கொழும்புடனான தொடர்பை விடவும் பழமையானதாகும்," என்று அவர் தொடர்ந்து, "இந்த நட்பு நீடிக்க வேண்டும்!" என்றார்.

உதவித் தூதுவர் மல்ஹோத்ரா இதற்குப் பதிலளித்துப் பேசுகையில், "இந்திய-இலங்கை நல்லுறவு மிகவும் தொன்மையானது. இரு நாடுகளுக்குமிடையே கலை, கலாசார, பண்பாட்டுத் தொடர்புகள் இரண்டறக் கலந்தவை. இந்தத் தொடர்புகள் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான சமூக, பொருளாதார, கலாசார துறைகளில் ஏற்பட்டுவரும் பரிவர்த்தனை தொடர்ந்து நீடிக்க உழைப்போமாக," என்றார்.

ஊடகவியலாளருக்கு மகாநாயக்கர் விதித்த தடை!

(கண்டி நிருபர்)

தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று அஸ்கிரிய பௌத்த பீடத்தின் மகாநாயக்கர் தெரிவிக்காத கூற்று ஒன்றை திரிபு படுத்தி வெளியிட்டதால் ஆத்திரம் அடைந்த மகாநாயக்கர், சகல செய்தியாளர்களுக்கும் கதவடைப்புச் செய்து விட்டார். பிரதி பாதுகாப்பு அமைச்சராக யாரை நியமிக்கப் போகிறார்கள் என மகாநாயக்கரை வழிபடச் சென்ற உல்லாசப் பயணத்துறை, விளையாட்டு அமைச்சர் திரு.லக்ஷ்மன் கிரியெல்லவிடம் மகாநாயக்கர் பிரஸ்தாபித்த வேளையில், அந்த விவகாரத்தை திரிபுபடுத்தி தொலைக்காட்சி நிறுவனம் செய்தி ஒன்றை வெளியிட்டது. இதனை அன்றையத் தினமே தொலைக்காட்சியில் பார்த்த வேளையில் மகாநாயக்கருக்கு கோபம் வாரிப் போட்டது. இதனால் அவர் மனமுடைந்த நிலையில் இருந்த வேளையில் பொது நிருவாக அமைச்சர் ரிச்சட் பத்திரன மகாநாயக்கரை மறுநாள் சந்தித்த போது தனது மன உலைச்சல்களை அவர் அமைச்சர் பத்திரனவிடம் தெரிவித்தார். இதன் பின்னர் "எந்த ஓர் ஊடகவியலாளரையும் இனிமேல் நான் சந்திக்க மாட்டேன்!" எனவும் அங்கு பாதுகாப்புப் பணியில் இருக்கும் பொலிஸாரிடம் செய்தியாளர்களை உள்ளே அனுப்ப வேண்டாம் எனவும் கண்டிப்பான உத்தரவைப் போட்டுவிட்டார். இந்த நடவடிக்கையால் அதிருப்தியுற்ற கண்டி சுதந்திர செய்தியாளர் சங்கத்தின் தலைவர் திரு. ஜே.ஏ.எல். ஜயசிங்க இதன் பின்னர் அஸ்கிரிய மகாநாயக்கர் தொடர் பான செய்திகளைப் பெற செய்தியாளர்கள் அங்கு செல்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

மத்திய மாகாண சபைப் பதவிகள்?

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபையில் இருந்து ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் எம்பீக்களானதையடுத்து வெற்றிடமாக ஏற்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கும் உறுப்பினர் பதவிக்கும் பலர் கருத்து முரண்பாடுகளைக் கொண்டுள்ளனர்.

திரு. கெஹெலிய ரம்புக்வெல்ல வகித்த எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு முன்னாள் அமைச்சர் திருமதி. ரேணுகா ஹேரத்தை நியமிக்கலாம் எனவும், சபையில் அங்கம் வகிக்கும் அவரது கணவர் ரணவீர இதன் பொருட்டு உறுப்பினர் பதவியை விட்டுக் கொடுக்கத் தயார் எனவும் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளையில் முன்னாள் மாகாண அமைச்சர் வஸந்த அலுவிகாரையை இதன் பொருட்டு நியமிக்கலாம் என பலரது அபிப்பிராயம் ஆகும். முன்னாள் முதலமைச்சர் திரு. டபிள்யூ.பீ.பீ.திஸாநாயக்க இது பற்றித் தெரிவிக்கையில்: "மாகாண சபையில் மரபு முறையாக நானே எதிர்க்கட்சித் தலைவர் பதவியை உருவாக்கினேன்!" என உரிமைக் குரல் எழுப்பியுள்ளார். இந்த நெருக்கடியால் ஐ.தே.கட்சி உறுப்பினர்களுக்கு மத்தியில் பலத்த சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

3வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி சர்மிளா அன்ரனிற்றோ

07.11.2000

செல்வி சர்மிளா தனது மூன்றாவது பிறந்த தினத்தை 07.11.2000 அன்று அவுஸ்திரேலியாவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார். பேபி சர்மிளாவை, அன்பு அப்பா, அம்மா மற்றும் தம்பி, தங்கச்சி, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலைகளும் கற்று, சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:அப்பா, அவுஸ்திரேலியா.

1வது பிறந்தநாள் வாழ்த்து

05 11 2000

செல்வி பாலசுப்பிரமணியம் சுரேக்கா

அச்சுவேலி, கந்தர்மடத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம்-சிறிறஜனி தம்பதிகளின் செல்வப் புதல்வி சுரேக்கா 05.11.2000 அன்று ஞாயிற்றுக்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை கனடாவில் உள்ள ONTARIO SCARBOROUGH வில் அமைந்துள்ள தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார்.

சுரேக்காவை அன்பு அம்மா, அப்பா, அனுகேஷ் அண்ணா, இலங்கையில் வசிக்கும் உற்றார் உறவினர்கள், கனடாவில் வசிக்கும் உற்றார் உறவினர்கள், சுவிஸ்சில் வசிக்கும் உற்றார் உறவினர்கள், மற்றும் நண்பர்கள் அனைவரும் அந்தப்பரம் பொருள் கந்தவேளின் கருணை கொண்டு காலத்தை வென்றிட வாழ்த்துகின்றார்கள்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Celltel Digital GSM (Celluler) மிக குறைந்த விலையில் உள்ளது. செல்லிடப்பேசிகளுக்கு, உடனடியாக அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்:

A.C.M.அன்வர் 072-284706

STUDY IN SWITZERLAND

The School of International Hotel and Tourism Management, Kanton Luzern, Central Switzerland இனால் மின்வரும் ஹோட்டல் முகாமைத்துவ கற்கை நெறிகளிற்காக மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

Certificate (1 year)

- வருடந்தோறும் 5 மாதங்கள் ஊதியத்துடன் கூடிய பயிற்சி
- மாதாந்தம் Stf 2000 (Approx Rs.85,000/=) ஊக்க ஊதியம்
- UK / USA யில் மேற்படிப்பிற்கான வசதிகள்.
- Visa ஒழுங்குகள் College னால் செய்து கொடுக்கப்படும்.

தகமைகள் : O/L or A/L சித்தியுடன்,சிறந்த ஆங்கில அறிவு வேண்டும்.

படிப்பு முடித்தபின் ஜேர்மன்,பிரான்ஸ், இத்தாலி, ஒஸ்ரியா ஆகியநாடுகளில் வேலைவாய்ப்பு பெறுவதற்கான வாய்ப்பு.

077-767818, 074-512591

Scholars Information Center,
Room No, 101, Hotel Ceylon Inns,
501, Galle Road, Colombo - 6.

தற்பொழுது எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட மாணவர்கள் Switzerland ல் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றனர்.

S.K.Ads, Colombo

வணிகக் கல்வி
A/L 2001, 20002
BUSINESS STUDIES
ஆசிரியர்: எஸ். முகுந்தன் B. Com Studies uni, Jaf
வெள்ளவத்தை - சங்கம் | கொட்டாஞ்சேனை - பிறில்லியன்ற்

உலகப் புகழ்பெற்ற
எக்ஸ் ஒயில்
TRADE MARK

- காய்ச்சல்
- தலைவலி
- ஜலதோஷம்
- இருமல்
- முக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை

ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

SINGHA HOLDINGS (PVT) LTD
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984

தங்களின் வாழ்க்கையின் கஷ்டங்கள், காதல் தோல்வி, வேலை வாய்ப்பு, கல்யாணத் தடை, பரீட்சைத் தோல்வி, வாகன அனுமதிப்பத்திரம், குடும்பப் பிரச்சனை, கணவன்-மனைவி கருத்துவேறுபாடு ஆகியவற்றை நிவர்த்தி செய்ய என்னை அணுகவும். பிரச்சனை நிவர்த்தியாகியபின் பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

சந்திக்கும் நேரம்: காலை 10.00 இருந்து மாலை 8.00 மணிவரை

விலாசம் :
MR. ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.
தொலைபேசி-0142552036

மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD,NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

கவலை வேண்டாம்

உங்கள் சங்கடம் எதுவாயினும் உடன் வெற்றி காண்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம்; தொழில் விருத்தி; பாலியல் குறைபாடுகள்; திருமண-பிரயாணத்தடங்கல்; முதலானவற்றை விசேடமாய் தீர்வுகாணும்; மட்டுநகர்-மலையாள மணிமாந்திரீகச் சித்தர் "கலாநிதி-சக்தி சரவணா" உங்களை நிச்சயம் வெற்றி பெற வைப்பார். மற்றும், எண்சோதிடம், நினைத்தகாரியம், ஜாதகபலன் முதலான சோதிட அருள் வாக்கும் பெற்று பூரண பலன் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேட தூரித சேவை உண்டு. (வியாழன் விடுமுறை) நேரில் காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

தொடர்பு: "DR.SHAKTHY SARAVANA"
48/12 : SRI VIMALASARA ROAD,
KALUBOWILA; DEHIWALA. SRI LANKA. T.P 723646
வியாழன் விடுமுறை.

மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமூதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மறறும் ஆஸ்மா, தலைமிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை. இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

கொழும்பில் நவம்பர் 20 முதல் 28 திகதி வரை
(செல்டெல் இலக்கம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-722841, 074-715546 செல்டெல்: 072-664867

கல்முனையில் நவம்பர் 04, 05 திகதிகளில்
T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

வவுனியாவில் நவம்பர் 11, 12 திகதிகளில்
(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road,
Batticaloa. SRI LANKA.

மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா, காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்கமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங்களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.
Tel-466620, 466820 தேவைகளுக்கு:-

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்: No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

நுவரெலியாவில்: 33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya. 052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

மரண அறிவித்தல்



திரு. திருச்செல்வம்

மண்ணில் 24.08.1935 | விண்ணில் 15.10.2000

இளவாலை போயிட்டியைப் பிறப்பிடமாகவும் Canada Mississauga வில் வசித்து வந்தவருமாகிய திருச்செல்வம் அவர்கள் 15.10.2000 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பி, தங்கரத்தினத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் பொன்பேத்தின் அன்பு மருமகனும் ராசகிளியின் ஆருயிர் கணவரும் ஸ்ரலின் விஜி, ஜோன்சன் நெல்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்பு யூக்கிறேசியா, சுபத்ரா, சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், வினோ, டாறியா, சுவன்யா, கிஷோர், பிரியங்கா, சுஜீவன், ஷங்கரி, பிறண்டன், ஆகியோரின் அன்புப் பேரனும்.

வின்சன்ட் (இலங்கை) றோஸ் மலர் (இலங்கை), எட்வின்யோசப் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற செல்வரட்ணம், அன்னம்மா (இலங்கை), அழகு ராணி, காலஞ்சென்ற கீதபொன்கலன், இராசசிங்கம் (இலங்கை), புஸ்பராசா, அன்னக்கிளி (ஜெர்மனி) ஆகியோரின் மைத்துனரும், நவமணி மலர், அல்ஸ்ரன், புனிதம் ஆகியோரின் உடன் பிறவா 'சகோதரரும்' ஆவார்.

இவரது ஆன்ம இளைப்பாற்றுக்காக Canada, Mississauga St.Franus Xavier ஆலயத்திலும், இளவாலை போயிட்டி புனித லூர்து அன்னை ஆலயத்திலும், கொழும்பு Farm Road, அமலமரிதியாகிகள் மரியன்னை ஆலயத்திலும், ஜேர்மன் St. Joseph ஆலயத்திலும் 21.10.2000 சனிக்கிழமையன்று இரங்கல் பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பிரிவால் துயருறும் : மனைவி பிள்ளைகள் சகோதரர்கள்

தகவல்: எஸ்.வின்சன்ட் (அண்ணன்)

கூட்டாட்சி நிலைக்குமா?

தமிழ் அமைச்சு சவால்களைச் சமாளிக்குமா?

முதன் முதலாக இலங்கையில் ஒரு தமிழ்-சிங்கள-முஸ்லிம் முக்கூட்டு அரசாங்கம் இம்முறைதான் அமைக்கப்பட்டுள்ளது. அதாவது பெரும்பான்மை சிங்களக் கட்சியொன்று வடக்குக் கிழக்குத் தமிழ்த் தலைமையொன்றுடனும் முஸ்லிம் தலைமை ஒன்றுடனும் கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்கும் நிலைமை உருவாகியுள்ளமை ஒரு புதிய பரிமாணமே. அத்தோடு மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தலைமையும் இக் கூட்டரசில் அங்கம் வகிப்பதால், இலங்கையின் சகல சிறுபான்மை இனங்களும் இனக் குழுக்களும் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசாங்கமாகவும் இது அமைகிறது.

இவ்வகையில் பார்க்கப்போனால் இந்த அரசாங்கம் ஒரு பல்லின சமூகத்தை அடையாளப்படுத்தும், திருப்திகரமான, நியாயபூர்வமான அரசாங்கம்போல வெளித்தோன்றலாம். ஆனால் அவ்வாறு உண்மையிலேயே சகல சமூகங்களையும் சமமாகப் பேணுகின்ற அரசாங்கமாக இவ்வரசாங்கம் அமையுமா என்பதே கேள்வி.

இதை இரண்டு வகையான காரணிகள் நிர்ணயிக்கின்றன. ஒன்று அகக் காரணி. மற்றையது புறக் காரணி. அகக்காரணியானது இந்த அரசாங்கத்தின் தன்மை, அதன் சேர்மானத்தின் உறுதி, அதில் அங்கம் வகிக்கும் தரப்புகளுடைய ஆளுமை, அவற்றுக்கிடையே ஒருமித்த செயற்பாட்டுக்கான புரிந்துணர்வு என்பனவாக அமைகின்றது. புறக்காரணியாக இங்குள்ள இனப் பிரச்சனையின் நிலை, யுத்தத்தின் உக்கிரத் தன்மை, அதனால் வளர்ந்துள்ள அவநம்பிக்கைகள், வெளி நாட்டு சக்திகளின் ஈடுபாடு போன்றவை அமைகின்றன.

இந்த அரசாங்கத்தின் சேர்மானமானது முவின மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதானது வெளி நாடுகளுக்கு இவ்வரசாங்கம் பற்றிய ஒரு உடனடி நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்திருக்கலாம். குறிப்பாக, 1966ற்குப் பின் முதன் முதலாக வடக்குக் கிழக்குத் தமிழ்த் தலைமையொன்று அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதும் அதற்கு தமிழ் விவகாரங்களைக் கையாளக்கூடிய சக்திவாய்ந்த அமைச்சு ஒன்று வழங்கப்பட்டிருப்பதும் வெளி நாடுகளுக்கு திருப்திகரமானதாகத் தோன்றலாம். ஆனால் இதன் மூலம் இனப்பிரச்சனை தீருமா? யுத்தம் ஓயுமா? சமாதானம் நிலவுமா? என்ற விடயங்கள் ஐயத்துக்குரியவை.

அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதன் மூலமும் தமிழ் விவகாரங்களைக் கையாளக் கூடிய, வடக்கின் புனர்நிர்மாண புனர்வாழ்வு விடயங்களை மேற்கொள்ளக் கூடிய பிரத்தியேக அமைச்சு ஒன்றைத் தமிழ்த் தரப்பினர் பெற்றுள்ளதன் மூலமும் சில நடைமுறை விடயங்களை ஓரளவுக்கு சீர் செய்ய முயற்சிக்கலாமென்பது உண்மையேயாகிலும் அடிப்படையான பிரச்சனைகளை எந்தளவு தூரம் தீர்க்க முடியும் என்பது எதிர்காலத்தின் மொத்த அரசியலைப் பொறுத்ததேயன்றி இந்த ஏற்பாடுகளில் தங்கியுள்ள விடயமல்ல.

இந்த அரசாங்கமானது அகரீதியாக எதிர்நோக்கும் சவால்கள் பல உள்ளன. முதலில் இந்த அரசாங்கம் ஒரு முவினக் கூட்டு அரசாங்கமாக வெளிப்படுகின்றமை அதற்கு ஒரு நற்தோற்றத்தைக் கொடுக்கின்ற அதே வேளையில் அதுவே அதன் இயங்கு தன்மைக்கு நெருக்கடியானதாகவும் அமைந்துள்ளது. இந்த அரசாங்கத்தை கட்டியமைப்பதற்கு எடுத்துக்கொண்ட காலமும் சிரமமுமே இதற்கான ஓர் அடையாளமாக அமைந்துவிட்டது.

கடந்த அரசாங்கத்தை அமைப்பதில் ஓர் ஆசனமே போதாததாக இருந்து அதனை மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகர் மூலம் நிரப்பிக் கொண்டனர். பின்னர் தொண்டமானும் முஸ்லிம் காங்கிரசும் இணைந்து கொண்டதால் அரசாங்கம் தொத்துப்பறி நிலையிலிருந்து விடுபட்டு உறுதிப்பட்டது.

ஆனால் இப்போது பொதுஜன ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்த ஆசனங்கள் மொத்தம் 107. இந்நிலையில் அதற்கு ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மையான 113 ஆசனங்களை ஈட்டுவதற்கு மேலும் 6 ஆசனங்கள் குறைந்த பட்சத் தேவையாக இருந்தது.

ஈ.பி.டி.பி.யிடம் யாழ். மாவட்டத்தில் பெற்ற 4 ஆசனங்களும் அம்யாறையில் சுயேச்சைக் குழுவில் ஒன்றாகப் போட்டியிட்டு வென்ற 1 ஆசனமுமாக மொத்தம் 5 ஆசனங்கள் இருந்தன. எனவே ஈ.பி.டி.பி.யுடன் மட்டும் கூட்டமைத்து அரசாங்கம் அமைக்க முடியாத நிலையில் முஸ்லிம் காங்கிரஸின் உதவியும் அத்தியாவசியமாக அமைந்துள்ளது.

இதனால் தமிழ், முஸ்லிம் தரப்புக்களுடன் கூட்டமைக்க வேண்டிய தேவை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஒரு நிர்ப்பந்தமாகவே அமைந்துள்ளது. இவ்விரு நெருக்கடிகளையும் சமாளித்துக்கொண்டு, தற்போது உருவாகியுள்ள இந்த முவினக் கூட்டரசாங்கத்தை ஸ்திரமானதாக்குவது எப்படி என்ற சவாலை அரசாங்கம் உடனடியாக எதிர்நோக்குகிறது.

இதில் அரசாங்கத்துக்கு இருக்கும் சங்கடம் யாதெனில், கடந்த அரசாங்கத்தை அமைப்பதில் ஆரம்பத்தில் ஒரு ஆசனமே பற்றாக்குறையாக இருந்து அதை மலையக மக்கள் முன்னணி மூலம் நிரப்பிக்கொண்டாலும், பின்னர் மலையகமக்கள் முன்னணியோ, வேறெவருமோ பேரம்பேச முடியாதபடி வேறு கட்சிகள் அதனோடு இணைத்துக் கொள்ள முடிந்திருந்தது. ஆனால் இப்போது அது சாத்தியமா என்பது கேள்விக்குரியதாகியுள்ளது.

ஏனெனில் இந்த அரசாங்கத்தை அமைப்பதில் கூட்டமைத்துள்ள இரு கட்சிகளான ஈ.பி.டி.பி., முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளில் எந்தவொரு கட்சியாவது பிணக்குறுமாயின் ஆட்சி களையும் அபாயம் உள்ளது. இவற்றுக்கு மாற்றாக வேறு கட்சிகளை ஏற்பாடு செய்வது சாத்தியக் குறைவானதாக உள்ளது.

சென்ற தடவை மலையக மக்கள் முன்னணிக்கு மாற்றாக தொண்டமானையும் அவரது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் பின்னர் ஏற்பாடு செய்து கொள்ள அரசாங்கத்தால் முடிந்திருந்தது. ஆனால் இம்முறை இ.தொ.கா. தனித்த ஒரு கட்சியாக இல்லாது பொதுஜன ஐக்கிய முன்னணியின் பட்டியலில் போட்டியிட்டே வெற்றியீட்டியுள்ளது. அது தனித்துப் போட்டியிட்ட இடங்களில் தோல்வியடைந்துள்ளது. ஆதலால் பொ.ஜ.மு. ஈட்டிய 107 ஆசனங்களுக்குள் இ.தொ.கா.வும் அமைந்து விடுவதால் அதனைப்பயன் படுத்தி ஈ.பி.டி.பி., முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு மாற்றீடாக அமைத்துக்கொள்ள முடியாது.

இக் கட்சிகளுக்கு மாற்றீடு அமைக்க வேண்டுமானால் அது இக் கூட்டுக்கு வெளியேயுள்ள ஏதாவது கட்சிகளை உள்வாங்குவதால் மட்டுமே முடியும். அப்படியாக உள்ள கட்சிகள் ஜே.வி.பி.(10), தமிழர் விடுதலைக் கூட்டணி(5), டெலோ(3), அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்(1), சிஹல உறுமய(1) ஆகியவையே.

இவற்றிலிருந்து அரசாங்கத்தின் பக்கம் சாரக்கூடிய கட்சிகளாக எதுவுமே இல்லை. ஜே.வி.பி. அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்த்து வரும் கட்சி. தமிழர் விடுதலைக் கூட்டணியால் சேர முடியாது. காரணம் அது அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வருவதுடன் தன்னை அரசாங்கத்தை எதிர்க்கும் கட்சியாக வெளிப்படுத்தியே தேர்தலில் நின்றது. அத்தோடு அக் கட்சியிலும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் புலிகளுக்கு எதிராகச் செயற்பட முன்வர மாட்டார்கள். புலிகளுக்கெதிரான போரொன்றை நடத்திக் கொண்டிருக்கும் நிலையில், அரசாங்கத்தில் பங்குபற்ற கூட்டணியினரால் முன்வர முடியாது. அதற்கு கூட்டணிக்குள்ளேயே எதிர்ப்பு கிளம்பும், குறிப்பாக கிழக்கு மாகாண உறுப்பினர்கள் மத்தியிலிருந்து.

இதேபோல்தான் ரெலோ மற்றும் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவற்றின் நிலையும் என்பதுடன் இக் கட்சிகளுக்குள்ள பாராளுமன்ற உறுப்பினர் தொகை, ஈ.பி.டி.பி.யையோ முஸ்லிம் காங்கிரசையோ ஈடுகட்டப் போதுமானதுமல்ல.

சிஹல உறுமயவுக்கு உள்ள ஒரு ஆசனத்தை ஈர்த்துக் கொள்வதாலும் அரசாங்கத்துக்குப் பயனில்லை. அது இக் கட்சிகளை ஈடுகட்டப் போதுமானதாக இல்லையென்பது மட்டுமல்ல, அதன் அதிதீவிர இனவாதத்துக்கு அரசாங்கம் எடுபடவும் முடியாது.

ஆக, வெளியிலுள்ள கட்சிகள் எதுவும் அரசாங்கத்தை ஸ்திரப் படுத்தவோ, அல்லது கூட்டுக் கட்சிகளுக்கு மாற்றீடாகவோ அமைய வாய்ப்பில்லாத நிலையில் அரசாங்கம் தன்னை ஸ்திரமாக்கவும், கூட்டுக் கட்சிகளில் தங்கியில்லாத நிலைக்குச் செல்லவும் இரண்டு வழிவகைகளே உள்ளன.

ஒன்று, எதிர்க் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கமொன்றை உருவாக்குவது. மற்றையது எதிர்க் கட்சியிலிருந்து கடந்த தடவை முயற்சித்ததைப்போல், ஒரு பகுதியினரை அரசாங்கத்தின் பக்கம் கட்சிதாவ வைப்பது.

தேசிய அரசாங்கம் அமைக்கும் பேச்சுவார்த்தைகள் அண்மையில் மும்முரமாக நிகழ்ந்தன. ஆனால் அதற்கான சாத்தியப்பாடுகள் எதுவும் இதுவரை ஏற்படவில்லை. தேசிய அரசாங்கமென்பது அத்துணை சுலபமாதல்ல. இதுவரை எதிரும் புதிருமான எதிர்க்கட்சி அரசியல் கலாசாரத்துக்குப் பழக்கப்பட்ட எம்பிரதான கட்சிகளால் தேசிய அரசாங்கமொன்றை இணக்கத்துடன் நடாத்துவது மிகச் சிரமமானது. பரமவைரியான எதிர்க்கட்சியுடன் இணக்கம் கண்டு அரசாங்கம் அமைப்பதைவிட தற்போது கூட்டமைத்துள்ள கட்சிகளோடு ஆளும் கட்சி இணக்கமாகச் செயற்படுவது சுலபமானது.

மேலும் தேசிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக முக்கியமாக இணக்கம் தெரிவிக்க வேண்டிய ஜனாதிபதியிடமிருந்தும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்தும் எந்தவித சமிக்ஞையும் வெளிப்படவில்லை. ஆக, இந்த முயற்சி இதனை வலியுறுத்தும் சில மத பீடங்களைச் சமாதானப் படுத்தும் ஒரு சாட்டுப்போக்கான முயற்சியாகவே தென்படுகிறதேயன்றி அக்கறையுடனான ஒரு முயற்சியாக முன்னெடுக்கப்படவில்லை.

அதனால் தேசிய அரசாங்கமென்பது சாத்தியமாகப் போவதில்லையென்ற நிலையில் அரசாங்கத்துக்கு இருக்கும் அடுத்த வழி ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஒரு பகுதியினரைத் தம் பக்கம் கவர்ந்திழுப்பது ஒன்றுதான்.

ஆனால் அது இப்போது உடனடிச் சாத்தியமானதாகத் தென்படவில்லை. ஏனெனில் கடந்த தடவை இவ்வாறான முயற்சியொன்றில் பெருமளவு இக்கட்டுக்குள்ளான அனுபவம் ஐ.தே.க.வுக்கு உண்டு. அதிலிருந்து கட்சி தாவக்கூடியவர்கள் பலர் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குத் தாவி வந்தும் விட்டனர். அதனால் இத் தேர்தலில் ஐ.தே.க. அதிக கட்சிப் பற்றுள்ளவர்களையே முன்னிறுத்தியிருக்கும். அவர்களைக் கட்சி மாற வைப்பது கடினமானதாக இருக்கும்.

அத்தோடு கட்சி மாறுவதானாலும் கட்சி தாவல் சட்டமூலத்தை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். அதற்கு முன்றில் இரண்டு பாராளுமன்றப் பெரும்பான்மை தேவை. எனவே அச் சட்டத்தை நிறைவேற்றுவதானால், அதற்கு ஐ.தே.க.வுக்குள் இருந்து கணிசமான ஆதரவு தேவை. அத்தகைய பெருந்தொகையானவர்களை மாற்றியெடுக்கக்கூடிய சாத்தியம் தற்போது ஆளும் கட்சிக்கு இல்லை.

அதனால் தற்போதைக்கு அரசாங்கம் மேலும் வலுவாவதற்கான எல்லா வழிகளும் அடைக்கப்பட்டுள்ளன. உள்ளதைக் கொண்டு சமாளிப்பதே அதனால் அதிக பட்சம் சாத்தியமானதாக இருக்கும். இந்நிலையில் அரசாங்கத்தில் இணைந்துள்ள சிறுபான்மைக் கட்சிகளை ஈடுகட்டி அரசாங்கத்தைக் கொண்டு நடத்துவதே அதன் முன் இருக்கும் ஒரே வழி.

அதனால் பாராளுமன்றத்தில் தனது பக்கத்துக்கான வாக்குகளைச் சற்று அதிகரிக்க அரசாங்கம் ஒரு தந்திரமான வழியைக் கையாண்டது. அதாவது எதிர்க் கட்சி உறுப்பினரான அநுரா பண்டாரநாயக்காவை சபாநாயகராகத் தெரிவு செய்ய முன்வந்தது. இதன்மூலம் சபாநாயகர் வாக்களிப்பில் கலந்து கொள்ள முடியாததாகையால் எதிர்க்கட்சியில் ஒரு வாக்கு குறைவுறும். அத்தோடு காலப்போக்கில் அநுராவைத் திரும்பவும் அவரது தாய்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஈர்க்க முடியுமானால் அவருடன் மேலும் சிலரை அரசாங்கத்தின் பக்கம் சாய்க்க முடியுமென்ற நப்பாசையும் கலந்திருக்கக் கூடும். அண்மையில் சிறீமாவோ பண்டாரநாயக்காவின் மரணம் அநுராவை மிகவும் பாதித்திருந்தது. சிறீமாவோ கடைசித்தருணத்தில் வாக்களிக்கச் சென்றபோது தனது வாக்கை 'மகனுக்கே' (அநுராவுக்கே) போடும்படி சொன்னதாகவும் கூறப்படுகிறது. வாக்களித்துவிட்டு திரும்புகையில் அவர் மரணித்தார். புத்திர பாசத்தால் தான் வளர்த்த கட்சிக்கு எதிராகவே வாக்களிக்க நேர்ந்துவிட்ட மனத்தாக்கத்துடன் அவரது மரணம் சம்பவித்திருக்கலாமென்ற எண்ணம் அநுராவை உறுத்துவதாக அமைந்திருந்தது. இந்த உணர்வுநிலை மீண்டும் குடும்ப உறவுகளை புதுப்பிக்கக் கூடும் என்ற நம்பிக்கையும் இம் முயற்சியில் கலந்துள்ளது.

இதுதவிர வேறெந்த மார்க்கமும் அரசாங்கத்துக்குத் தென்படாத இந் நிலையில் அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள சிறுபான்மைக் கட்சிகளுக்கு அதிக பிடிமானம் ஏற்பட்டுள்ளது. இதில் முதன் முதலாக அமைந்துள்ள தமிழ் அமைச்சுக்கு நல்ல வாய்ப்புகள் உள்ள அதே சமயத்தில் சவால்களும் உள்ளன.

இந்தத் தமிழ் அமைச்சு, தமிழ் மக்கள் தொடர்பான விடயங்கள் யாவற்றுக்கும் பொறுப்பாக அமைவதால் தமிழ் மக்களில் பலதரப்பட்ட விடயங்களை கையாளக்கூடியதாக இருக்கும். அத்தோடு வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு என்பனவும் அதன் கீழ் வருவதால் அங்கு பெருமளவிலான அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு வேலைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஆனால் அக்கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்ததை நியாயப்படுத்தும் வகையில் அது தமிழ் மக்களுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொடுக்க என்ன முயற்சிகளை மேற்கொள்ளப்போகிறது என்பது ஒரு பிரதானமான கேள்வியாக அவர்கள் முன் நிற்கும்.

அடுத்ததாக யுத்தத்தின்போது தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய அனர்த்தங்கள குறித்து எவ்வித நடவடிக்கைகளில் இறங்கப் போகிறது என்பதும் அதனையிட்டு எதிர்பார்க்கப்படும் விடயமாக இருக்கும்.

இதைவிட ஏனைய தமிழ் கட்சிகள் அரசாங்கத்தின் மீது முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை மேவி அரசாங்கத்துக்குத் தான் கைகொடுக்க வேண்டிய தேவையை அது நியாயப்படுத்த வேண்டியிருக்கும்.

தாம் அரசாங்கத்துக்குக் கைகொடுப்பதால், அரசாங்கத்தை தமது செல்வாக்குக் குட்படுத்தி சாதகமாக வழி நடத்தலாம் என்ற நம்பிக்கையே ஏற்படுத்தக்கூடியதாக அது செயற்பட வேண்டியிருக்கும். மாறாக அரசாங்கத்தால் தாம் வழிநடத்தப்படுபவர்களாகி விடவில்லை என்பதை நிலைநாட்ட வேண்டியிருக்கும்.

இவற்றை விட ஏற்கனவே மந்தக்கதியில் இயங்கும் அரசாங்கத்தின் செயற் திட்டங்களைப்போலல்லாமல் இந்த அமைச்சின் செயற்திட்டங்களை துரித கதியில் செயற்படுத்தக்கூடிய வழிவகைகளை அது அமைத்துக் கொள்ள வேண்டியிருக்கும். இதற்கான நிதி ஒதுக்கீடுகளைத் தங்கு தடையின்றிப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக அது இருக்க வேண்டியிருக்கும்.

எனினும் மொத்தத்தில் ஒன்றில் இவர்கள் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வொன்றை ஈட்ட வழிசமைக்க வேண்டும். அல்லது புலிகளுக்கு மாற்றான வேறொரு தீர்வை சரியென நிரூபித்து அதனைப் பெற்றுக் கொடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

பங்குபற்றா அரசியல் வழிமுறையிலிருந்து (Non Participant Politics) பங்குபற்றும் அரசியல் வழிமுறைக்கு (Participant Politics) துணிந்து கால்வைத்துள்ள நிலையில் தொண்டமானையும் அஷ்ரப்பையும் போல் தமது வழிமுறையைத் தாம் சார்ந்த மக்களால் ஏற்கச் செய்ய டக்ளஸ் தேவானந்தாவால் முடியுமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

நரன்

செய்திச் சிதறல்

பண்டாரவளை பிந்துனுவெவ புனர் வாழ்வு முகாமில் நடைபெற்ற படுகொலைகளுக்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக மலையகமெங்கணும் மட்டுமல்லாமல் வடகிழக்கிலும் பரவலாக துக்க அனுஷ்டானங்கள் கடையடைப்பு ஹர்த்தால் போன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட பிரதேசத்திலுள்ள மக்கள் அனைவரும் எந்தவிதமான பாகுபாடுமில்லாமல் இந்தத் துக்க தின அனுஷ்டானங்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பிந்துனுவெவ படுகொலை தொடர்பாக மலையகத்தின் பல இடங்களில் வன்முறைகள் இடம் பெற்று வருகின்றன. கடையெரிப்பு, வாகன உடைப்பு, தீவைப்பு போன்ற செயற்பாடுகளால் எங்கும் பதற்ற நிலை காணப்படுகிறது. அசம்பாவிதங்கள் இடம்பெற்ற பகுதிகளுக்கு மேலதிகப் பொலிசாரும் இராணுவமும் அனுப்பப்பட்டு அமைதியை நிலை நாட்ட அரசாங்கம் முயற்சிகளையெடுத்து வருகிறது. பல பகுதிகளில் உத்தியோகப்பற்றற்ற முறையில் ஊரடங்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் ஆங்காங்கே பல அசம்பாவிதங்கள் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் கிடைக்கின்றன.

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் 1993ம் ஆண்டு நிறுவப்பட்டது. அன்று தொடக்கம் இங்கு 1700 இளைஞர்கள் புனர்வாழ்வு பெற்று வெளியேறியுள்ளதாக இளைஞர் விவகார அமைச்சு தெரிவிக்கிறது. இப்போது நடைபெற்றுள்ள இந்த அநாகரிகமான செயல் நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக அமைந்து விட்டது. இந்த முகாமில் வாழ்ந்த தமிழ் இளைஞர்கள் பிந்துனுவெவ கிராம மக்களுடன் நல்ல முறையில் உறவுகளை வைத்திருந்ததாகவும் வெளியிலுள்ள சில தீயசக்திகள்தான் வெளியிலிருந்து சில குண்டர்களை ஏவி விட்டு இத்தகைய துரதிஷ்டவசமான நிலையினை உருவாக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஊர்வலங்களுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தும் அத்தடையை மீறி ஊர்வலங்களையும் பொதுக் கூட்டத்தையும் ஏற்பாடு செய்திருந்தார் என்ற குற்றச் சாட்டின் பெயரில் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தனது இல்லத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகிறார். ஜனாதிபதியின் உத்தரவின் பெயரிலேயே திரு. சந்திரசேகரன் கைது செய்யப்பட்டார் என்று தெரியவருகிறது.

கொழும்பிலுள்ள கடைகளையும் அடைத்து, பிந்துனுவெவ முகாம் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக, திங்கட்கிழமை ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அன்று மதியத்திற்கு மேல் பொலிஸார் கடைகளைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க, புறக்கோட்டை செட்டி தெருவில் அடைக்கப்பட்டிருந்த கடைகள் திறக்கப்பட்டன. இருப்பினும் மக்கள் நடமாட்டம் குறைந்தே காணப்பட்டிருந்தது. இதே வேளை கொழும்பில் எதுவித அசம்பாவிதமும் ஏற்படாதிருப்பதற்காக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

எல்லைப்புற சிங்களக் கிராமங்களை விடுதலைப் புலிகள் தாக்கி சேதம் விளைவிக்கக்கூடிய நிலை உருவாக்கலாம் என்ற சந்தேகம் எழுந்தமையினால் அப் பகுதியிலுள்ள கிராமங்களில் ஆயுதப்படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்புப்பலப் படுத்தப்பட்டுள்ளது. உள்ளூர் பொலிஸார் கிராம மக்களைக் கொண்ட விழிப்புக் குழுக்களையும் அமைத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

அண்டை மண்டலத்தில்....

நானே எல்லாம் – ஜெயலலிதா பிரகடனம்

ஆண்டுக்கணக்கில் சிறைத் தண்டனை கிடைக்கலாம். தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பையும் இழக்கலாம். ஆனாலும் தான் எப்படியாவது மீண்டும் முதல்வராகிவிடலாமென்ற கனவிலிருந்து ஜெயலலிதா இன்னமும் மீளவில்லை. அது மட்டுமல்ல, "அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களில் அ.இ.அ.தி.மு.க.விற்கு தனிப்பெரும் பான்மை கிடைக்கும், அதுவே ஆட்சி அமைக்கும், அந்த இலக்கினை அடைய ஒத்துழைக்கத் தயாராகவிருக்கும் கட்சிகளுடன்தான் கூட்டணி" என்று இப்போது கட்சியின் பொதுக்குழு அறிவித்திருக்கிறது.

இந்த தடாலடி அறிவிப்பின் விளைவாக தமிழ் மாநில காங்கிரசுடன் கூட்டணி தொடருமா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பின்றி எப்படி அ.இ.அ.தி.மு.க. வெற்றி பெறமுடியும் என்று ஜெயலலிதா நம்புகிறார் என்பது விளங்கவில்லை. இல்லை, தன் தொண்டர்களை உற்சாகப் படுத்த வேண்டி அப்படி நம்புவதுபோல நடிக்கிறாரா என்றும் தெரியவில்லை.

டான்சி தீர்ப்பினால் மனமுடைந்து போன ஜெயலலிதாவும் அவரது உடன் பிறவா சகோதரியும் ஓரிரு நாட்கள் எல்லா நிகழ்ச்சிகளையும் ரத்து செய்துவிட்டு வீட்டிற்குள்ளேயே முடங்கிக்கிடந்தனர். தென்மாவட்ட சுற்றுப்பயணமும், பொதுக்குழுக்கூட்டமும் ஒத்திப்போடப்பட்டன.

மிகவும் கரிசனத்துடன் திராவிடர் கழகத் தலைவர் வீரமணி, இந்திய கம்யூனிஸ்ட் இன்னும் ஒரு சில உதிரிக்கட்சிகளின் தலைவர்களை அழைத்துக் கொண்டு போயஸ் தோட்டத்திற்குச் சென்று, சமூக நீதி காத்த வீராங்கனைக்கு ஆறுதல் சொன்னார்.

"தீர்ப்பினால் துவண்டுவிடக்கூடாது, தேர்தலில் கருணாநிதியைத் தோற்கடிப்பதே தமிழ்ச் சமுதாயத்தின் முன் உள்ள தலையாய பணி, அந்த மாபெரும் கடமையை நிறைவேற்ற உங்களால் தான் முடியும்" என்பன போன்ற அறிவுரைகளை பணிவுடன் வழங்கி, நீங்கள் எதற்கும் கலங்கவேண்டாம்; "நாங்கள் உங்கள் பின்னால் அணிவகுத்து நிற்கிறோம்" என்று வாக்குறுதி அளித்துவிட்டு வீரமணி திரும்பியதாக செய்திகள்.

சட்ட வல்லுநர்களை கலந்தாலோசித்து, தான் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புக்கள் முற்றிலுமாக அருகிவிடவில்லை என்று நம்பி, அதே நேரம் அடுத்த தேர்தல்கள் தனக்கு ஜீவ மரணப்போராட்டம் என்பதையும் உணர்ந்து, மீண்டும் சுறுசுறுப்பாக செயல்படத் துவங்கினார் ஜெயலலிதா.

தமிழகம் கண்ட அரசியல் தலைவர்களிலேயே மிகமோசமான, மக்கள் விரோத தலைவர் ஜெயலலிதா என்றாலும் கூட அவரது போர்க்குணத்தை பாராட்டாமல் இருக்கமுடியாது. கடுமையான பின்னடைவுகளை சந்திக்கும் போது நிச்சயமாக அவர் வீறு கொண்டு எழுகிறார்; சளைக்காமல் போரிடுகிறார்.

1989 சட்ட மன்றத் தேர்தலிகளில் தனித்துப் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிய ஜெயலலிதா ஒருகட்டத்தில் ஏதோ மன உளைச்சல் காரணமாக அரசியலை விட்டே விலக முடிவு செய்து, சட்டமன்ற உறுப்பிர் பதவியை ராஜினாமா செய்வதாக கடிதமே எழுத, சசிகலா நடராஜன் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டுபோய் தன் வீட்டில் வைத்துக் கொண்டார்.

அதுபற்றி அறிந்த அன்றைய கருணாநிதி அரசு, நடராஜன் வீட்டில் அதிரடி சோதனை செய்து, கடிதத்தைக் கைப்பற்றி பத்திரிகைகளுக்கு வெளியிட்டது. தானாகவே ஓடியிருக்க வேண்டியவர், கருணாநிதியின் கீழ்மையான தந்திரங்களைக் கண்டு கொதித்தெழுந்தார். அப்போதுதான் சட்டமன்றத்திலேயே அவர் தாக்கப்பட்டார். தி.மு.க. வினர் அவரை துகிலுரியவும் முயற்சித்தனர்.

அந்த அனுபவம் அவருக்கு பெரும் அதிர்ச்சியினை அளித்தாலும், கருணாநிதியை முறியடிக்க திருப்பித் தாக்குவதே சிறந்த வழி என்றுணர்ந்து, காங்கிரசுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டு. ஒரு வழியாக 1991ல் ஆட்சியைக் கைப்பற்றினார் ஜெயலலிதா. நந்நதவனத்தில் ஓர் ஆண்டியின் கதையாக எல்லாவற்றையும் போட்டுடைத்து, 1996ஆம் ஆண்டு தேர்தல்களில் படுதோல்வியை சந்தித்தபின், என்ன செய்வதென்று திகைத்தார். அரசியல் வாழ்வு அஸ்தமித்துவிட்டது போன்றே அப்போது அவருக்குத் தோன்றியிருக்கவேண்டும்.

ஒரு கட்டத்தில் "வழக்குகள் தொடர வேண்டாம். நான் அரசியலிலிருந்தே விலகி விடுகிறேன்" என்று கருப்பையா மூப்பனாருக்கு அவர் தூது அனுப்பியதாகக்கூட தகவல் உண்டு. கருணாநிதியும் மூப்பனாரும் அப்போது என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. வழக்குகள் போட்டு சிறையில் தள்ளினால் தான் அ.இ.அ.தி.மு.க.வை அழிக்கலாம் என்று கணித்தோ என்னவோ, மேலும், மேலும் அவருக்கு தொந்தரவு கொடுத்து வந்தார்கள். மறுபடி ஜெயலலிதா தான் கௌரவமாக பிழைத்திருப்பதிற்கே கடுமையாக போராடவேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டார்.

வை.கோ.,ராமதாஸ் என்று தன்னை வசைபாடியவர்களோடெல்லாம் உறவு ஏற்படுத்திக் கொண்டு, பின்னர் யாருமே எதிர்பாராவண்ணம் பாரதீய ஜனதாவுடன் கூட்டு சேர்ந்து, 1998ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் பெரும் வெற்றி பெற்று, தன் மக்கள் சக்தியை நிரூபித்தார்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு சட்டமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்றபோது, பல இடங்களில் அ.இ.அ.தி.மு.க. வினர் ஜெயலலிதா புகைப்படத்தைக்கூட பயன்படுத்தாமல், எம்.ஜி.ஆர். கட்சி என்று சொல்லியே வாக்கு சேகரித்தார்கள். அந்த அளவு நிலைகுலைந்து போயிருந்தனர் அவர்கள்.

அப்படிப்பட்ட அவல நிலையிலிருந்து உயிர்த்தெழுந்து, இன்று மீண்டும் அவரால் ஆர்ப்பரிக்க முடிகிறதென்றால், அதற்குக் காரணம் அவருடைய விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும்தான். இன்று கருணாநிதி தமிழகத்தை தன்னிரு அருமைச் செல்வங்களுக்கு தாரை வார்த்துக் கொடுக்கமுடியவில்லை, எழுபதுகளில் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடியவர், ஏறத்தாழ ஒரு யதேச்சாதிகார ஆட்சியினையே நடத்தியவர், இன்று வளைந்து கொடுத்துப் போகிறார், பொதுமக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கிறார் என்றால், இதற்கெல்லாம் காரணம் ஜெயலலிதா பற்றி அவருக்கிருக்கும் அச்சம் தான். எந்த நேரம் என்ன செய்து அவர் ஆட்சியைக் கைப்பற்றிவிடுவாரோ என்று கணந்தோறும் நடுங்கிக் கொண்டுதானிருக்கிறார் கருணாநிதி.

கடந்தவாரம் நடந்து முடிந்த பொதுக்குழுக்கூட்டத்தில் அ.இ.அ.தி.மு.க. அடுத்த தேர்தல்களில் வெற்றிபெற்றுவிடும் என்ற பிரமையினை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எல்லோரும் அம்மா, அம்மாவென்று துதி பாடி, ஜெயலலிதாவின் தலைமைக்கு சவால் கிடையாது என்று மீண்டும் நிரூபிக்கப்பட்டது.

டான்சி தீர்ப்பு அநீதியானதென்றும், அரசின் தூண்டுதலின் பேரிலேயே அப்படி ஒரு தீர்ப்பினை நீதிபதி எழுதினாரென்றும், மேல் முறையீட்டில் ஜெயலலிதா போட்டியிட அனுமதிபெற்று விடுவார் என்றும் விளக்கினார் முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் பி.எச்.பாண்டியன்.

ஒருகாலத்தில் வரைமுறையின்றி ஜெயலலிதாவை வசைபாடி வந்த பாண்டியன் இப்போது பிழைப்பிற்காக வார்த்தைக்கு வார்த்தை அவரை "புரட்சித் தலைவி, மகோன்னதத் தலைவி" என்று புகழ்ந்து தள்ளுகிறார்.

இவர் தேவலாம் என்று செய்துவிட்டார் மற்றுமொரு முன்னாள் அட்டைக்கத்தி வீரர், காளிமுத்து. இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலிருந்து அரசியலில் முழ்கித்திளைத்து, பின்னர் எம்.ஜி.ஆரின் நம்பிக்கைக்குரியவர்களில் ஒருவராகி, அவரது ஆட்சிக்காலத்தில் தொடர்ந்து மாநில உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர், ஜெயலலிதாவின் கடும் விமர்சகர்களில் ஒருவராகவும் இருந்தவர்தான் காளிமுத்து.

இப்போது அ.இ.அ.தி.மு.க.வின் அவைத்தலைவர் அவர். எந்தவித அதிகாரமும் கிடையாது, முக்கிய நிகழ்ச்சிகளில் ஜெயலலிதா அருகில் அமரலாம் என்ற பெருமைதான் மிச்சம். நெடுஞ்செழியன் மறைவிற்குப் பிறகு அவைத் தலைவராக நியமிக்கப்பட்ட காளிமுத்து, அந்தப் பொறுப்பில் கலந்து கொண்ட முதல் பொதுக்குழு கூட்டம் கடந்த வாரம் நடந்தது தான். மேடைக்கு வந்தவுடன் தலைவியின் காலைத் தொட்டு வணங்கி ஞானஸ்நானம் பெற்றார் அவர்.

ஏறத்தாழ ஒன்பது ஆண்டுகள் அமைச்சராயிருந்தும் அதிகமாக சொத்து சேர்க்கவில்லையாம் காளிமுத்து, இரண்டு மூன்று மனைவிகள் வேறு. அவருக்கிருக்கும் பண நெருக்கடியின் காரணமாகவே ஜெயலலிதாவிடம் சரணடைந்து விட்டார் என்று கூறப்படுகிறது. வயதிலும் சரி, அரசியலிலும் சரி தன்னைவிட மூத்தவர் காளிமுத்து தன் காலில் விழலாமா என்ற கூச்சம் கூட ஜெயலலிதாவிற்கு இருந்ததாக தெரியவில்லை. புகைப்படங்களில் அவரது முகத்தில் பெருமை பொங்குவது தெளிவாகத் தெரிகிறது. யாருக்கும் வெட்கமில்லை அவ்வளவு தான்.

இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் சசிகலா பொதுக்குழு உறுப்பினராகியிருப்பது தான். முதல்வரிசையிலிருந்து நிகழ்ச்சிகளை கவனித்துக் கொண்டிருந்தார். விரைவில் அவருக்கு முக்கிய பொறுப்பு அளிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

டாக்டர் புரட்சித் தலைவி தலைமையில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சி அமைப்பதும், பாண்டிச்சேரியிலும் கழக ஆட்சி அமைப்பதுமே அ.இ.அ.தி.மு.க. வின் லட்சியங்கள் என்று பொதுக்குழு பிரகடனம் செய்தது.

அவர் தேர்தலில் நிற்கமுடியுமா என்பதே சந்தேகம். நின்றாலும், அ.இ.அ.தி.மு.க. அணிக்கு வெற்றி கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதம் ஏதும் கிடையாது. ஆயினும் இப்போதே ஜெயலலிதா குதிக்கிறார், "நான் தான் முதலமைச்சர்" என்று. அதுமட்டுமல்ல கூட்டணி அரசும் கிடையாது என்றும் அறிவிக்கிறார்.

த.மா.கா முறுக்கிக் கொண்டால் என்ன செய்வார்? மூப்பனாருக்கு பெரும் இழப்பொன்றுமில்லை. தேர்தலில் தோல்வியுற்றால் கட்சியைக் கலைத்துவிட்டு காங்கிரசுடன் ஐக்கியமாகிவிடுவார்.

ஆனால் ஜெயலலிதா நிலை அப்படியில்லையே. மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் அவரை ஒரு வழி செய்து விடுவார்களே. அந்தக் கவலை இருந்தால் அவர் இப்படியெல்லாம் நடந்து கொள்வாரா என்ன!

அவரது பலவீனமே அவரது வரம்பு கடந்த பேச்சும், அகங்காரமும் தான். பொதுக்குழுவில் ஜெயலலிதா பகிரங்கமாகவே எச்சரித்தார்-"மீண்டும் எம்.ஜி.ஆர். ஆட்சி அமையும், அப்போது கருணாநிதிக்கு மன்னிப்பே கிடையாது, பத்தாண்டுகள், பதினான்காண்டுகள் சிறையென்றெல்லாம் இங்கே பேசினார்கள். அதெல்லாம் போதாது. சிறையில் தான் அவர் இனி தன் ஆயுட்காலம் முழுமையினையும் கழிக்க வேண்டும்!"

கானகன்

ஒரு சில மாதங்களுக்கு முன் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் "கருணாநிதியின் குடும்பத்தையே இருக்குமிடம் தெரியாமல் அழித்துவிடுவேன்" என்று சூளுரைத்தார். அதோடு நில்லாமல், கருணாநிதியை சரமாரியாகத் தாக்கி, "சாகப்போகிற காலத்தில் உனக்கேன்யா இந்த அரசியல்?" என்ற ரீதியில், தனது அடிவருடி ஒருவரை கவிதை எழுதச் செய்து, அதை தன் படைப்பாக பத்திரிகைகளுக்கும் அனுப்பிவைத்தார் ஜெயலலிதா. அநாகரீகத்தின் உச்சக்கட்டம் அந்தக் கவிதை. இத்தகைய வெறிக்கூச்சல் மக்களுக்கு மிகவும் அருவருப்பாகப்படும் என்ற சிந்தனையே அவருக்கு இல்லை. இப்படி வாய்க்கு வந்தபடி பேசித்தான் தன் பெயரைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார் அவா.

எம்.ஜி.ஆருக்கு மிக நெருங்கியவர் என்ற ஒரே காரணத்தினாலேயே அ.இ.அ.தி.மு.க.வினர் மத்தியில் செல்வாக்கினைப் பெற்று, இன்று தமிழக அரசியலையே அசிங்கப்படுத்திவருகிறார். தமிழ்நாட்டு மக்களின் தலையெழுத்து இவரைவிட்டால் கருணாநிதியென்ற நிலையிருப்பதுதான்.

கனடாவில் தமிழ்க்குழுக்களுக்கிடையில் தலையெடுக்கும் மோதல்கள்!

ஒரு நாள் நள்ளிரவு கடந்து ஒரு மணியளவில் புதிய ரக 'ஹொண்டா சிவிக்' மோட்டார் ஒன்று கனடாவின் ரொரண்டோ வீதியோன்றில் கன வேகமாகச் சென்று கொண்டிருந்தது. இந்த வண்டி சென்று கொண்டிருந்த முறை, வீதிப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு சந்தேகத்தைக் கிளப்பியது. ஹொண்டாவைப் பின் தொடர்ந்து பொலிஸ் வண்டி துரத்திச் சென்றது. மற்றுமொரு பொலிஸ் வண்டியும், முன்னர் சென்ற பொலிஸாரின் உதவிக்கு பின் தொடர்ந்தது.

சென் கிளேயர் சாலைக்கு வடக்கே வெஸ்டான் தெருவில் பின்னதாகச் சென்ற பொலிஸ் வண்டி ஹொண்டா வண்டியுடன் மோதியது. இதில் ஹொண்டாவில் பயணம் செய்த ஒருவர் மாண்டார். இரு பொலிஸார் உட்பட மற்றும் ஐவர் இந்த இடிபாட்டில் காயமடைந்தனர்.

28 வயதான வண்டிச் சாரதியும் 19 வயதான மற்றுமொருவரும் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மற்றும் இரு பயணிகளும், இரு பொலிஸாரும் சிறு காயங்களுக்காக மருத்துவ உதவி பெற்றனர்.

கனடாவில் மீண்டும் தமிழ்க் குழுக்களுக்கிடையிலான மோதல்கள் அதிகரித்து வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அங்குள்ள தமிழர்களின் குழுக்களுக்கிடையிலான மோதல்களைக் கண்காணிப்பதற்கான விசேட புலனாய்வுத் துறையொன்று இயங்கி வருகிறது.

ஒன்றுடனொன்று மோதிச் சிதறிக் கிடக்கும் ஹொண்டா சிவிக் மற்றும் பொலிஸ் வண்டி ஆகியவற்றையும், உயிரிழந்தவரின் சடலம் துணியால் மூடிக் கிடப்பதையும் படத்தில் காணலாம்.

ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் ஒரு கடையில் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்த மூன்று வாடிக்கையாளர்களை வெளியிலிருந்து வந்த ஆறுபேர் கொண்ட குழுவொன்று கடையின் ஜன்னல்களை உடைத்து உட்சென்று அந்த வாடிக்கையாளர்கள் மூவரையும் வெளியே துரத்தியது.

அவர்களில் ஒருவரைப் பிடித்து முகமுடியணிந்திருந்த அந்தக் குழுவினர் அடித்து அவருடைய மண்டையை உடைத்தனர். மணிக்கட்டு எலும்பு ஒன்றும் தாக்கி உடைக்கப்பட்டது. அவருடைய உடம்பெங்கும் காயங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அதே தினத்தன்று, இச் சம்பவம் நடந்த இரண்டரை மணி நேரத்தில் விக்டோரியா பார்க் அருகில் 20 வயதுடைய ஒரு நபரை, தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளாத மூவர், கடத்திச் சென்று உலோகப் பொல்லுகளாலும் தடிகளாலும் அடித்து, பயமுறுத்தி துரத்தி விட்டனர்.

இத்தகைய செயல்களுக்கெல்லாம் அங்கு வாழும் போட்டித் தமிழ்க் குழுக்கள் தான் காரணமென்று கூறப்படுகிறது.

இந்நகரில் பல்வேறு சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் 99 சதவீதமான தமிழ்மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் சட்ட விரோதமான நடவடிக்கைகளிலீடுபட்டு வருகின்றனர் என்று பொலிஸ் அதிகாரியான ரொக்கி கிளேவ்லண்ட் தெரிவித்தார்.

பண்டாரவளையில் படுபாதகம்!

இலங்கையில் இனப்பிரச்சனை எவ்வளவு தூரம் மூர்க்கமடைந்துள்ளதென்பதற்கு எடுத்துக் காட்டாகவே பண்டாரவளை பிந்துனுவெவ கிராமத்தில் இடம் பெற்ற படுகொலைகள் விளங்குகின்றன.

பண்டாரவளையின் பிந்துனுவெவ கிராமத்தில் இயங்கி வந்த புனர்வாழ்வு நிலையத்தில் 29 தமிழ் இளைஞர்கள் மிருகத்தனமான முறையில் கொல்லப்பட்டிருந்தனர்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் உட்பட மலையகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களும், தீவிரவாத நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கி ஆயுதப்படையினரிடம் சரணடைந்தவர்களுமே பிந்துனுவெவ புனர் வாழ்வு நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தனர்.

ஏனைய தடுப்பு முகாங்கள் அல்லது சிறைச்சாலைகள் போன்று பிந்துனுவெவ புனர்வாழ்வுமுகாம் உயரமான மதில்களினால் சூழப்பட்டிருக்கவில்லை. அத்துடன் முட்கம்பி வேலிகளோ அல்லது காவலரண்களோ இந்த முகாம் பகுதியில் போடப்பட்டிருக்கவுமில்லை.

புனர்வாழ்வு நிலையமாக இயங்கியமையால் அங்கிருப்போர் தாம் கைதிகள் என்ற மனநிலையிலிருந்தும் விலகி சாதாரண வாழ்க்கைக்குத் தம்மைத் தயார்படுத்தும் விதத்திலேயே அப்புனர்வாழ்வு நிலையத்தில் கடுமையான நடைமுறைகள் எதுவும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று முகாம் பொறுப்பதிகாரிகள் தெரிவித்தனர்.

இருந்தபோதிலும் இப் புனர்வாழ்வு மையத்துக்கு வெளியே அண்மைக்காலங்களில் இனவாதம் ஒரு விஷப்பாம்பாக உருமாறியிருந்ததையே அம்முகாம் சுற்றாடலில் நிகழ்ந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டுபவையாக இருந்தன.

'சிங்களவர்களது நாய்களுக்கு புலிகளது மாமிசம் தேவை'. 'பண்டாரவளைப் பிரதேசத்தையும் புலிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுப்பாதா?' போன்ற இனவாதத்தை வெளிப்படுத்தும் சுவரொட்டிகள் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் சுற்றாடலில் ஒட்டப்பட்டிருந்தன.

பிந்துனுவெவ முற்றிலும் ஒரு சிங்களக் கிராமமாகும். அக்கிராமத்தின் மத்தியில் அமைந்திருந்த புனர்வாழ்வு மையத்தில் வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களே பெருமளவில் இருந்தமையால் அப்புனர்வாழ்வு முகாம்கூட சிங்களக் கிராமமொன்றின் நடுவே அமைந்த தமிழ்க்குடியிருப்புப் போன்றே காணப்பட்டிருந்தது.

பிந்துனுவெவ முகாமில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் அனைவருமே நல்லொழுக்கமுள்ளவர்களாக இருந்துவந்தனர் என்றும், முகாமைச் சூழவாழ்வுள்ள கிராமவாசிகளோடு பிரச்சனையற்ற முறையில் சகவாசத்தைக் கொண்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த முகாமினுள் திடீரெனப் பெருமளவில் பிரவேசித்து அங்கிருந்த தமிழ் இளைஞர்களில் 29 பேரைக் கொன்றவர்கள் யார்? என்பதே மர்மமானதாக இருக்கின்றது. தாக்குதல் இடம்பெற்ற வேளை அம்முகாமின் பாதுகாப்புக்காக நின்ற பொலிஸார்கூட கொலைகாரக்கும்பலைத் தடுத்து நிறுத்த முன்வராது நின்றுள்ளதையும் விசாரணைகள் மூலமாக அறிய முடிகின்றது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டபோது அப்புனர் வாழ்வு முகாமின் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார், தாக்குதலை நடத்தவந்த கும்பலைக் கண்டதும் ஆகாயத்தில் வேட்டுக்களைத் தீர்த்து அக்கும்பலைப் பின் வாங்கவைத்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அப்படி ஏன் செய்யவில்லை என்பதே புரியாதிருக்கின்றது எனக் கூறியுள்ளார்.

எனவே வேலியே பயிரை மேய்ந்திருந்ததுபோல முகாமின் பாதுகாப்புக்கு நின்றோரும் பாராமுகமாக இருந்த வேளையிலேயே கொலைக்கும்பல் தனது கைவரிசையைக் காண்பித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

கைதிகளாகச் சிறைகளிலும், தடுப்புமுகாம்களிலும் வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் என்பது இது முதல்தடவையல்ல.

1983ம் ஆண்டு இனக்கலவரம் வெடித்திருந்த வேளையில் கொழும்பு வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டிருந்த ஐம்பதுக்குமதிகமான தமிழ்க்கைதிகள், அச்சிறையில் இருந்த மோசமான குற்றவாளிகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இது தவிர தென்னிலங்கையின் களுத்துறைச் சிறையிலும், விசாரணைகளெதுவுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகள் மீது மூர்க்கத்தனமான தாக்குதல்கள் அடிக்கடி நடந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

பண்டாரவளை பிந்துனுவெவ முகாமிலிருந்த தமிழ் இளைஞர்கள் பலரும் தீவிரவாத நடவடிக்கைகளிலிருந்தும் விலகிச்சரணடைந்தவர்களே தவிர, அவர்கள் எந்தவொரு சம்பவம் குறித்தும் குற்றவாளிகளாகக் காணப்படவில்லை என்றே ஆயுதப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமிலிருந்த இளைஞர்கள் தமிழர்களாகப் பிறந்தவர்கள் என்ற ஒரே ஒரு காரணத்துக்காக மட்டுமே மிக மோசமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பது சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணமாகியுள்ளது.

நடந்து முடிந்த பொதுத்தேர்தல்களின்போது இனப்பிரச்சனை குறித்து நிறையவே சூடான பிரசாரங்கள் வெளிவந்திருந்தன.

வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு அரசியல் ரீதியான தீர்வுமுயற்சிகள் காணப்படுவது பற்றிப் பிரஸ்தாபிப்பதைவிட, இராணுவரீதியாகவே அப்பிரச்சனை அணுகப்படவேண்டும் என்ற தோரணையிலேயே பொறுப்புமிக்க அரசியல் வாதிகள் கூடத் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தனர்.

இது தவிர பொதுத் தேர்தலுக்கு முன்பதாக உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டபோது பௌத்த மத பிக்குகளே வீதிகளில் இறங்கி தமது இனவாதப்போக்கை வெளிப்படுத்தியிருந்தனர்.

இவைதவிர அண்மைக்காலங்களில் முளைவிட்ட சிங்களத் தீவிரவாத அமைப்புக்கள் கூட இனவாதத்தை வெளிப்படுத்தியிருந்ததுடன் பண்டாரவளை பிந்துனுவெவ முகாம் சுற்றாடலில் காணப்பட்ட இனத்துவேச சுவரொட்டிகள் கூட தீவிரவாத சிங்கள அமைப்புக்கள் சிலவற்றினாலேயே ஒட்டப்பட்டிருந்ததையும் விசாரணைகள் மூலமாக அறியமுடிகின்றது.

எனவே நிராயுதபாணிகளாக தமது எதிர்கால வாழ்க்கைபற்றிய கனவுகளோடு இருந்த அப்பாவித் தமிழ் இளைஞர்களே பிந்துனுவெவவில் இனவாத சக்திகளின் அசுரப்பசிக்கு ஆளாகியுள்ளதை அறிய முடிகின்றது.

பண்டாரவளை பிந்துனுவெவச் சம்பவம், தமிழர்கள் மீதான இனவாத உணர்வலைகள் எவ்வளவு தூரம் தூண்டிவிடப்பட்டுள்ளன என்பதற்கு நல்லதோர் உதாரணமாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் யுத்த நிலவரம் காரணமாக கடந்த இருதசாப்த காலங்களில் ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் உயிரிழந்திருக்கக் காணப்படுகின்றனர். அகதி முகாம்கள், சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்கள் என்பவற்றில் எவ்வித காரணமுமின்றி தமிழ் மக்கள் பலர் கொலை செய்யப்பட்டுமுள்ளனர்.

இவைதவிர விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்ட ரீதியில்மேலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பிந்துனுவெவச்சம்பவம் தமிழர்கள் மீதான அடாவடித்தனத்தைப் பொறுத்தவரை ஒரு புதியரகமாகவே இருக்கின்றது. ஏனெனில் புனர்வாழ்வு என்ற ரீதியில் தடுத்துவைக்கப்பட்ட தமிழர்களே பிந்துனுவெவவில் படுகொலைசெய்யப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

பண்டாரவளைப்படுகொலைகள் தொடர்பாக பல்வேறு அமைப்புக்களும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

அரசாங்கம் விசேட விசாரணைகளை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளது. ஆனால் இந்த விசாரணைகள் மூலம் எதனைத்தான் ஆட்சியாளர்களால் சாதிக்க முடியுமென்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் பண்டாரவளை பிந்துனுவெவச் சம்பவத்தையொத்த பல சம்பவங்கள் தமிழர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த வெலிக்கடை, களுத்துறைச் சிறைச்சாலைகளில் நடந்திருந்தன. அச்சம்பவங்கள் பற்றியும், விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டிருந்தன. ஆனால் அவ்விசாரணைகள் எவ்வித பயனையும் தந்திருக்கவில்லை.

சந்திரிக்கா அரசு ஆறு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ஆட்சி, பாராளுமன்ற ஆட்சி என்பவற்றைக் கைப்பற்றியபோது நாடு பூராவும் காணாமல் போனவர்கள்பற்றி ஆராய பல்வேறு ஆணைக்குழுக்கள் கூட நியமிக்கப்பட்டிருந்தன.

அந்த ஆணைக்குழுக்கள் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளமை பற்றியும், அதற்குப் பொறுப்பானவர்கள் மற்றும் காணாமல்போன சூழ்நிலைகள் என்பவை பற்றியும் அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தன. ஆனால் இதுவரை அந்த அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டவை பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமலேயே இருக்கின்றது.

எனவே பண்டாரவளை பிந்துனுவெவ சம்பவம் குறித்து விசாரணைகள் நடத்தப்படுவதாக அரசு தரப்புக் கூறியுள்ளபோதிலும், ஆயிரக்கணக்கில் பிந்துனுவெவ முகாமில் வெறியாட்டம் நடத்திய துவேச சக்திகளைக் கைதுசெய்து அவர்கள் மீது அரசாங்கத்தினால் உரிய சட்ட நடவடிக்கைகளைக் கச்சிதமாக மேற்கொள்ள முடியாமா? என்பது முக்கிய கேள்வியாகவே இருக்கின்றது.

பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்கா பிந்துனுவெவ படுகொலைச் சம்பவம் பற்றிக் கருத்து வெளியிடுகையில், "பௌத்த நாடான இலங்கையில் இதுபோன்ற சம்பவம் இடம்பெற்றிருப்பது மிகவும் கவலைக்குரியது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரை பெயரளவில் மட்டுமே பௌத்தம் இருக்கின்றதே தவிர, எந்தவொரு நடவடிக்கையிலும் அல்லது விடயத்திலும் பௌத்த தர்மம் பிரதிபலிப்பதைக் காணமுடியாமலேயே இருக்கின்றது.

பௌத்த மதம் மனிதாபிமானம், கொல்லாமை என்பவற்றை வேறெந்த மதங்களையும் விட மிக அதிகமாகவே போதிக்கின்றது. ஆனால் இப்போதனைகள் புறந்தள்ளப் பட்டிருப்பதோடு, பௌத்த சந்நியாசிகள் என்றிருப்போர் கூட இலங்கையில் போர் முரசம் கொட்டுவோராகவே இருப்பதை அவதானிக்கமுடிகின்றது.

பிந்துனுவெவப் பிரதேசம் பண்டாரவளையில் ஒரு சிங்களக் கிராமமாகும். ஆயினும் பண்டாரவளைமற்றும் அதனை அண்டியுள்ள ஏனைய மலையகப் பிரதேசங்களில் தமிழ் மக்களும் ஏராளமாகவே வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையின் மத்திய மலைநாட்டில் இருந்து வரும் தமிழ் மக்களைக்கூட அச்சுறுத்துவதோடு அவர்கள் சிங்கள மக்களுடன் கொண்டிருக்கக்கூடிய உறவுகளைக்கூடப் பாதிப்பதாகவே பிந்துனுவெவச் சம்பவம் விளங்குகின்றது.

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் நாளுக்கு நாள் யுத்த நடவடிக்கைகள் முறுக்கேறி வருகின்றன. மறுபுறம் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியே வாழுகின்ற அப்பாவித் தமிழர்களை அச்சுறுத்தும் வன்முறைகளும் அதிகரித்துவருவதற்கு எடுத்துக்காட்டாகவே பிந்துனுவெவச் சம்பவம் விளங்குகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கான தீர்வுத்திட்டங்கள் அரசியல் ரீதியாக உத்வேகம் பெறாத நிலையில் இன ரீதியான வன்முறைகள் விரிவடையும் அறிகுறிகள் பண்டாரவளைச் சம்பவம் மூலமாக வெளிப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் நிலைமை மோசமாவதற்கு முன்னர் ஆட்சியாளர்கள் செயலில் இறங்க வேண்டியதே அவசியமானதாகின்றது.

ஆயுதப்படைகளில் ஆயிரக்கணக்கானவர்களைச் சேர்த்து யுத்தத்தைத் தொடருவதில் ஆர்வத்தை வெளிப்படுத்துவதைவிட, ஆரோக்கியமான அரசியல் தீர்வை இனப்பிரச்சனை குறித்து துரிதப்படுத்துவதன் மூலமே பண்டாரவளைச் சம்பவம் போன்றவற்றைத் தவிர்க்க முடியுமெனக் கருதலாம்.

அதிரடி அய்யாத்துரை

எதற்கெடுத்தாலும் குத்தி முறியும் பௌத்த பீடாதிபதிகள் பண்டாரவளைச் சம்பவம் பற்றி பெரிதாக எதுவும் கூறாமல் இருக்கினம். பௌத்தமதம், பௌத்தநாடு என்று கூச்சல் போடும் பிக்குமார் கூட்டம் துடி துடிக்க நிராயுதபாணிகள் பண்டாரவளையில் கொல்லப்பட்டது பற்றி அசமந்தமாக இருக்கினம். பௌத்தம் என்பது சிங்களவர்களுக்கு மட்டும்தான் என்று அவர்கள் நினைக்கினம் போலிருக்குது.

பண்டாரவளை முகாமில் இருந்த தமிழ் இளைஞர்கள் தமது சொந்தபந்தங்களுக்கு அனுப்புவதற்காக தீபாவளி மடல்கள் வாங்கி வைத்திருந்தார்களாம். விரைவில் வீடுதலையாகி வீடுபோய்ச் சேரலாம் என்ற நம்பிக்கையில் அவர்கள் இருந்தார்கள். ஆனால் பிணமாக உருக்குலைந்து வீடு போய்ச் சேரவேண்டிய கதி அவர்களுக்கு.

அமைச்சர்கள் பதவி அதிகரித்திருப்பதால் பொலிஸ் காரர்கள் என்ன செய்வதென்று யோசிக்கிறார்கள். தலைமீடுகள், குறுக்கீடுகள் தமது கடமைகளில் அதிகரிக்குமென்று பொலிஸ் வட்டாரம் கவலை கொள்கிறது. குற்றவாளிகள் தாம் தப்புவதற்கு அரசியல் செல்வாக்கையும் நன்கு பயன்படுத்துகிறார்கள்.

சில வருடங்களுக்கு முன் இராணுவ வீரர்களது சடலங்களோடு தொழிலை ஆரம்பித்த கொழும்பின் பிரபல இறுதிச்சடங்கு நிறுவனமொன்று இப்ப கொழும்பில் இருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் பிரபலமாகியிருக்கிறது. இந்த நிறுவனக் கட்டிடத்தின் கீழ்த்தட்டு, மேல்தட்டு, மூலை முடுக்கு எல்லாவற்றிலும் ஒரே தரத்தில் பல தமிழ் இறுதிச்சடங்குகள் நடக்குது.

இலங்கை கிரிக்கெட் அணி மீண்டும் களைகட்ட ஆரம்பித்திருக்கிறது. சார்ஜா கிரிக்கெட் போட்டியில் சனத்ஜய சூரிய வெளுத்துவாங்கி சாதனையும் போட்டிருக்கிறார். சார்ஜா மைதானத்தில் அதிகூடிய ஓட்டங்கள் பெற்ற வீரர் என்ற பெருமை அவருக்கு. முரளியும் தனது கைவண்ணத்தைக் காட்டியிருக்கிறார். உலகசாதனையாக 30 ஓட்டங்களுக்கு 7விக்கட்டுகளை இந்தியாவுக்கு எதிராகப்பெற்றிருக்கிறார். இலங்கை அணி இப்படியே இருந்தால் திரும்பவும் ஒரு தடவை உலகக்கிண்ணத்தை அணுகலாம்.

திகில் தொடர்

"ஷூட்டிங் எந்த ஊரிலே....?" என்று கேட்டான் படத்தின் மேக்கப் மேன் சிங்காரம். இளங்கதாநாயகியான ரத்னாவுக்கு மேக்கப் போட போகிறவன் அவன் தான்! பளிங்கு பதுமை போன்ற அவளுடைய முகத்தைத் தடவி, அது ரப்பரா, ரோஜாப்பூவா என்று ஆராய்ந்து பார்த்து விடலாம் என்ற எண்ணம் அவனுக்கு!

அவள் சில நாட்களுக்கு முன்னால் தான் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு பி.ஏ., பட்டம் வாங்கியிருந்தாள்.

நகரின் முக்கிய பகுதியில் அமைந்திருந்த அந்த படத்தயாரிப்பு நிறுவனத்தின் முன்னால் ஒரு சொகுசு பேருந்தும், 'சிவா அவுட்டோர் யூனிட்' என்று எழுதப்பட்ட, படப்பிடிப்புக்குத் தேவையான நவீன கருவிகளைக் கொண்ட புத்தம் புதிய பெரிய வேனும் நிறுத்தப்பட்டிருந்தன.

சொகுசு பேருந்தின் தலையில் 'டம் டம் மூவிஸ்' என்ற எழுத்துக்கள் தெரிந்தன. அது ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட பேருந்து. மிகவும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

நாலாப்பக்கமும் கண்ணாடி ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருந்தன. முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் சுமார் ஐம்பது வயது படத் தயாரிப்பாளரான தாணு மாலயமாமணிக்கு, முற்றிலும் வெளிப்புறக் காட்சிகளை கொண்ட 'மலைக் காட்டு மங்கம்மா' என்ற பெயரில் சினிமாஸ்கோப் படம் ஒன்றை தயாரிக்க வேண்டுமென்று நெடுநாளைய ஆசை.

இதற்காகவே, அவர் சில ஆண்டுகளுக்கு முன்பே அம்பராம்பாளையம் என்ற ஊரில் பிரமாண்டமான மங்கள விலாஸ் என்ற பெயர் கொண்ட பழைய பங்களாவுடன் கூடிய நாறு ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பை வாங்கிப் போட்டிருந்தார். ஏரி வசதியும் உண்டு.

அமராவதி அணைக்கட்டு நீர்ப்பாசனம் அங்கே உண்டு. நல்ல நீர்வளத்துடன் அந்த பிரதேசம் எப்பொழுதும் பச்சைப் பசேலென்று இருக்கும்.

ஆனை மலையிலும் சில காட்சிகளைப் படமாக்கலாம் என்பது இயக்குநர் வசீகரரின் ஆசை.

கையில் இருப்பதோ இந்த ஒரே ஒரு சினிமாப் படம் தான். அதை தன் எதிர்கால வளமான வாழ்வுக்கு அடிபோட திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்.

பட அதிபரான தாணு மாலயமாமணி பெரும் பணக்காரர் என்ற போதிலும், கனத்த தோற்றத்துடனும், கடா மீசையுடனும், பார்வையின் முலமே அனைவரையும் அச்சுறுத்தும் தோரணையுடன் இருப்பார். மரியாதை என்பதே தெரியாதவர். குரல் எருமை மாட்டுத்தனமாக இருக்கும். சாதாரணமாக பேசினால் கூட பீரங்கியாக முழங்குவது போல் இருக்கும்.

அவரைக் கண்டாலே சினிமாத்துறையினருக்கு அச்சம். 'காட்டான்' என்ற பயம். ஆனால், அவரிடம் ஏராளமாக பணம் குவிந்து கிடப்பதால், போலியான ஒரு மரியாதையை காட்டி வந்தனர். பட உலகில் தனக்கு நிகரானவர் யாருமே கிடையாது என்ற கர்வம் வேறு அவருக்கு உண்டு.

பட அதிபர் தாணுமாலயமாமணிக்கு மனைவி என்ற அதிகாரமுள்ள ஒருத்தி கிடையாது. கணவனின் நச்சரிப்புக் காரணமாக உறவுகளை அறுத்தெறிந்து விட்டு, பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே சுதந்திரத்தை நாடி ஓடிப் போய் விட்டாள். தாணு மாலயமாமணிக்கும் அவள் இங்கே இருக்கும் வரை பெருஞ்சுமையாகவே இருந்தாள்.

மனைவி என்று ஒருத்தி இல்லாமல் போனதால் அவர் தன்னைப் புது மாப்பிள்ளையாகவே நினைத்துக் கொண்டிருந்தார்.

இளம் கதாநாயகியான ரத்னாவை படம் முடிவதற்குள் எப்படியும் தன் உடமையாக்கிக் கொள்ள வேண்டும் என்பது அவரது ஆசையாக இருந்தது.

சிங்காரத்தின் கேள்விக்கு பதில் சொன்னார்.

"என்ன கேட்டீங்க சிங்காரம்?"

'ஷூட்டிங் எந்த ஊரிலேன்னு கேட்டேன்," என்றான் மேக்கப்மேன் சிங்காரம்.

"அம்பராம்பாளையம். பொள்ளாச்சிக்குப் பக்கம் தான் ஊர்," என்றான் முரளிதரன்.

"இதற்கு முன்னால் கூட நான் அந்த இடத்துக்கு போயிருக்கிறேனே...."

"நீர் போகாத ஊர் தமிழ் நாட்டிலேயே எங்கே அய்யா இருக்கு?"

"சரி.... சரி.... நைட் சாப்பாடு என்ன?" சிங்காரம் கேட்டான்.

அப்போது, திடீரென்று அங்கே ஒரு சலசலப்பு ஏற்பட்டது.

பட அதிபர் தாணு மாலயமாமணி படியேறி உள்ளே வந்து கொண்டே, "மட்டன் பிரியாணி, சிக்கன் பிரியாணி என்று எல்லாமே ரெடியாக இருக்கிறது. யார் யாருக்கு எது பிடிக்குமோ அதை வெட்டலாம்," என்றார்.

அவரைத் தொடர்ந்து சந்தன நிற சுடிதார் உடையில் நடிகை ரத்னாவும், பட்டுப் புடவையில் அவளுடைய தாயார் சவுந்திரவல்லியும் வந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து....

படத்தின் டைரக்டர் வசீகரும், உதவி டைரக்டர்களும், காமிராமேன் சத்யாவும், ஆபரேட்டிங் காமிராமேன், அவரது உதவியாளர்கள் என்று படப்பிடிப்பு குழுவினர் அனைவரும் வந்தனர்.

அனைவரும் பஸ்சில் ஏறி அமர்ந்தனர்.

பட அதிபர் தாணுமாலயமாமணி ஒட்டுநர் இருக்கைக்கு இடதுபுறமாக அமர்ந்தார்.

நடிகை ரத்னாவும், அவளுடைய தாயார் சவுந்திரவல்லியும் அவரைப் பார்க்கும் படியான இருக்கையில் அமர்ந்திருந்தனர்.

"எல்லாச் சீட்டும் புல்.... புறப்படலாம் டிரைவர் அண்ணே," என்று பின்னாலிருந்து குரல் கொடுத்தான் பேருந்தின் கிளினர்.

டிரைவர் குஞ்சிதபாதமும், பட அதிபரின் கறிக்காய் மன்னன் சலாம் சுப்பையாவும் வந்தனர்.

"சுப்பையா.... டிரைவரை, என் டயோட்டா காரை எடுக்கச் சொல்லி, அதில் நீ எங்களுக்கு பின்னால் வா...." என்றார் தாணுமாலயமாமணி.

"சரிதான் அண்ணே....!" என்று அந்த நாற்பது வயதுகாரன் குழைவாகக் கூறி, முன்றாவதாக கடைசியாக நிறுத்தப்பட்டிருந்த ஜப்பான் நாட்டு தயாரிப்பான வெள்ளை நிறக்காரின், முன் இருக்கையில் டிரைவர் பக்கத்தில் ஜம்மென்று உட்கார்ந்து கொண்டான்.

சலாம் சுப்பையாதான் பட அதிபரின் எடுபிடியான கையாள். எப்போதுமே அவருடைய முடு கெடாதபடி குஷிப்படுத்தி வைத்திருப்பவன்.

பஸ்சின் டிரைவர் குஞ்சிதபாதம் குட்டியானை உடம்புக்காரன். அவன் தனது இருக்கையில் ஏறி அமர்ந்து ஏர்-கண்டிஷன் யந்திரத்தை இயக்கியதும் அபசகுனம் போல் யாரோ தும்மும் சப்தம் கேட்டது.

டிரைவர் குஞ்சிதபாதம் சகுனம் பார்ப்பவன். தும்மல் தடையாக இருக்கவே, பயந்து அரண்டு மிரண்டு போய் யந்திரத்தை உடனே நிறுத்தி விட்டான்.

"இது அபசகுனமான தும்மல்! ஆகாது.... பயணத்தை ரத்து செய்துவிட்டு இன்னொரு நாள் வைத்துக் கொள்வது நல்லது," என்றான்.

உடனே பட அதிபர் தாணுமாலயமாணி வேகமாக குறுக்கிட்டு, "டிரைவர்..... புரிஞ்சுக்காமல் உளறாதே! இப்போது தும்மல் போட்டது யார் தெரியுமா? பெரிய மேடம் சவுந்திரவல்லி அம்மையார். இது மகா ராசியான தும்மல்.... நம் எல்லாருக்குமே யோகம் அடிக்கப்போகிறது. எடுமய்யா பஸ்சை," என்றார்.

அவர் இப்படிச் சொல்லவே டிரைவர் பணிந்து போய் பல்லிளித்தான். சொன்னான். "பெரிய மேடம் தும்மலா...? அப்படின்னா இது ராசியான தும்மல் தான்," என்றபடி பஸ்சுக்கு உயிர் கொடுத்து நகர்த்தி சாலைக்கு கொண்டு வந்தார்.

மறு நாள் காலை சூரியன் உதயமாகும் தருணத்தில் பொள்ளாச்சி அம்பராம்பாளையத்தில் படத்தயாரிப்பாளரின் பிரம்மாண்டமான வீட்டின் முன்னால் வாகனங்கள் அனைத்தும் வந்து நின்றன.

வயதான வாட்ச்மேன் சம்பூர்ண இவர்கள் வந்திறங்கிய சத்தம் கேட்டு ஓடி வந்தான். எல்லாரும் இங்கே தங்கியிருந்து, சினிமாப் படப்பிடிப்பு நடத்தப் போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டதும் "ஐய்யய்யோ" என்று அலறினான்.

"வேண்டாம் சாமிகளே..... யாரும் இங்கு தங்க வேண்டாம். மீறி தங்கினால் யட்சிணி பேய் ஒன்று வந்து அறைந்து ரத்தம் குடித்துச் சாகடிக்கும்," என்று எச்சரித்தான்.

(திகில் தொடரும்)

திகில் கதை மன்னன் பி.டி.சாமி

கொலையான பாடகி



எண்பதுகளில் இந்தியா மட்டுமல்ல இலங்கையிலும் கூட மொழிகளைக் கடந்து பலராலும் இரசிக்கப்பட்ட 'ஆப் ஸைஷா கோயி, மேரே ஜிந்தகி மே ஆயி, தோ பாத்பன் ஜாயே' என்ற பாடலை பலரும் மறக்கமாட்டார்கள்.

'குர்பானி' என்ற இந்திப்படத்தில் இடம்பெற்ற இப்பாடலுக்கு படத்தில் ஜீனத் அமன் ஆடி நடித்திருந்தார். இந்தப் பாடலைப் பாடியவர் நஸியா ஹசன். இப்பாடலைப் பாடியபோது இவருக்கு வயது 13.

இந்தப் பாடும் வானம் பாடி அண்மையில் இறந்து விட்டார். புற்றுநோய் காரணமாக நஸியா மரணமடைந்து விட்டார். இவரது இறப்புக்குக் காரணம் நோய் மட்டுமல்ல, இவரது கணவர் இஸ்தியாக் பெய்க்கும் தான்.

'ஸ்லோ பொய்சனிங்' எனப்படும் ஆளை மெல்லக் கொல்லும் விஷம் கொடுத்துச் சாகடிக்கப்பட்டிருக்கிறார். இது பற்றி வழக்குகள் நடந்ததால் 23 நாட்கள் விசாரணைகள் நடந்த பின்னரே நஸியாவை அடக்கம் செய்தனர்.

இருப்பினும் வழக்குகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. வழக்குகளுக்குக் காரணம் நஸியாவின் உடல் பலகோடி ரூபாய்களுக்கு காப்புறுதி செய்யப்பட்டிருப்பதுதான்.

சொத்துக்கள் கணவருக்கா, அல்லது இவரது ஒரேயொரு மகனுக்கா என்பது தான் வழக்கு.

உலகப்புகழ் பெற்ற பாடகியின் நிலை இப்படி.

கள்வர் குகையான காதல் கோட்டை

மணிரத்னத்தின் 'பம்பாய்' படத்தில் மனிஷா கொய்ராலா ஓடிவந்து, மனதை கொள்ளை கொள்ளும் 'உயிரே உயிரே' என்ற பாடலைப் பாடுவார். இதன் பின்னணியில் இருந்த புராதன கோட்டையை மறந்திருக்க மாட்டீர்கள்.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள இந்தக் கோட்டையின் பெயர் 'பெக்கல் கோட்டை.' ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இந்தக் கோட்டை 'பம்பாய்' படத்திற்குப் பின் மிசப் பிரபலமாகி சுற்றுலாப்பயணிகள் சென்று வந்தனர்.

பலசுரங்கப்பாதைகள் இங்குண்டு. காதல் கோட்டையாக இருந்த இந்தக் கோட்டை இப்போது கள்வர் குகையாக மாறிவிட்டது. சமூக விரோதிகள் மட்டுமே இப்போது இங்கே வாசம் செய்கிறார்கள். அது மட்டுமன்றி பெண்கள் கடத்திச் செல்லப்பட்டு இக்கோட்டையில் வைத்து பாலியல் வல்லுறவுக்குட்படுத்துகிறார்கள் என்பது கொடுமையான விஷயம். சரித்திரம் பின்னணி வாய்ந்த இந்தப்பகுதியை சம்பந்தப்பட்டவர்கள் யாரும் கண்டு கொள்வதே இல்லை.

ஒலிம்பிக் சதி?

நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டிகள் நல்லபடியாக முடிந்து விட்டதில் போட்டியை நடத்திய அவுஸ்திரேலியா பெருமை கொண்டுள்ளது. இந்த முறை நடந்த ஒலிம்பிக் போட்டிகள் சரியானபடி நடத்த விடாமல் செய்ய ஒரு சதித் திட்டமே உருவாகியிருந்தது என்றால் ஆச்சரியப்படுவீர்கள்.

ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன் ஒலிம்பிக் தீபம் ஊர்வலமாகப் பல்வேறு நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆனால் இம்முறை இந்த ஒலிம்பிக் தீபத்தை வழியிலேயே அணைத்து விடப் பலமுயற்சிகள்.

ஒரு நாட்டில் ஒலிம்பிக் தீபம் எடுத்துச் செல்லப்பட்ட போது ஒருவன் அதைப் பிடுங்கி கடலில் வீசி அணைக்கப் பார்த்தான். இன்னொரு நாட்டில் ஒருவன் அதைப் பிடுங்கி ஆற்றில் எறிந்து அணைக்கப்பார்த்தான். பிறிதொரு நாட்டில் ஒருவன் அதைத் திருடிக் கொண்டு ஓடப்பார்த்தான்.

இப்படி ஒலிம்பிக் போட்டிகளுக்கு பல இடையூறுகள். இதற்கெல்லாம் என்ன காரணம்? ஒலிம்பிக் போட்டிகளை ஒழுங்கான முறையில் நடக்கவிடாமல் செய்வதில் சம்பந்தப்பட்ட சதிக்காரர்களுக்கு ஒரு கீழ்த்தரமான மகிழ்ச்சி.

பிணையாளியான நிருபர்

கைதி ஒருவரைப் பேட்டி எடுக்கச் சென்ற நிருபர் ஒருவர் அதே கைதியால் பிணை பிடிக்கப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது.

அமெரிக்க நாட்டில் கோடீஸ்வரர் ஒருவரைக்கடத்திக் கொலை செய்த குற்றத்திற்காக 25 வயதுடைய கென்னத் கைம்ஸ் என்ற வாலிபனுக்கு 125 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தக் கொலைக் கைதியைப் பேட்டி எடுக்கச் சென்ற மரியா ஜோன் என்ற பெண் நிருபர் கொலையாளியால் பிணை பிடிக்கப்பட்டார்.

நிருபர் வைத்திருந்த பேனாவையே அவள் கழுத்தில் வைத்து மிரட்டிய கைம்ஸ் நான்கு மணி நேரத்திற்குப் பின் மரியாவை விடுவித்தார்.

பரபரப்பான பேட்டி

தொலைக்காட்சியில் அலைவரிசைகள் அதிகரித்ததன் விளைவாக அவர்களிடையே போட்டிகளும் அதிகரித்துவிட்டன. ஒன்றுடன் ஒன்று போட்டிபோடுவதற்காக என்ன வெல்லாம் செய்ய வேண்டி இருக்கிறது என்று பாருங்கள்.

வை.ஈ.எல்.என்பது ஹெல்சிங்கியில் உள்ள ஒரு தனியார் தொலைக்காட்சி. இது மற்ற தொலைக்காட்சிகளுடன் போட்டி போடுவதற்காக வித்தியாசம் என்ற பெயரில் நடத்தும் நிகழ்ச்சி ஒன்றின் பெயர். 'இன் பெட் வித் லிண்டா' அதாவது 'லிண்டாவுடன் பந்தயம்' என்ற நிகழ்ச்சி.

இந்த நிகழ்ச்சியை நடத்தும் லிண்டா அந் நாட்டு நடிகை. இவர் பிளேபோய் பத்திரிகைகளின் நிர்வாணபோஸ்கொடுத்து அசத்தியதன் மூலம் பிரபலமானவர்.

அண்மையில் இவர் ஒரு அரசியல் வாதியைப் பேட்டி எடுத்த போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது 'முதல்வன்' படத்தில் ரகுவரனை அர்ஜுன் பேட்டி எடுப்பது போன்ற பரபரப்பல்ல இது.

அரசியல்வாதியைப் பேட்டி எடுத்துக் கொண்டிருந்த போது திடீரென லிண்டா அம்மணிக்கு ஒரு ஐடியா தோன்ற, உடுத்தியிருந்த ஆடைகளையெல்லாம் கழற்றிப் போட்டு விட்டு அரசியல் வாதியை பேட்டிகண்டாராம்.

வியர்க்க விறுவிறுக்க அரசியல்வாதி அளித்தபேட்டியை அந்த தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்புமா என்று தெரியவில்லை.

நிறைவு தினக் கொண்டாட்டம்

← சிட்னியில் இடம் பெற்ற ஒலிம்பிக் 2000 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெற்ற தினத்தன்று மிகக் கோலாகலமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவற்றைப் பார்த்தோர் அனைவரையும் பரவசக் கடலிலாழ்த்தின. ஆட்டமும் பாட்டும் கரைகடந்த உற்சாகமும் இடம் பிடித்திருந்தன. பந்தயங்கள் நடைபெற்ற பாதைகளில் ஆண்களும் பெண்களும் பல்லாயிரக்கணக்கில் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து 'போல்ரூம்' நடனம் ஆடிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது.

இதே நடனத்துக்கேற்ற உடைகள் அணிவிக்கப்பட்ட பிரமாண்டமான பொம்மைகளும் ஆட்டத்தில் கலந்து கொண்டன. இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு நின்று பார்த்துப் பரவசமடைவதையும் ஊர்வலம் நடைபெறுவதையும் உலகனைத்திலுமுள்ள தொலைக்காட்சிகளில் பார்த்து மகிழ்ந்த மக்களுக்கு முரசின் மூலம் அந்த அழகான காட்சியொன்றை இங்கு தந்திருக்கிறோம். ■

பாரம் தூக்கும் பலசாலி

↑ தலையில் இப்படிக் காரைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் இந்தப் பராக்கிரமசாலியின் பெயர் இவான்ஸ்.

இந்தப் பலவான் எவ்வளவு பெரிய கார், வேனாக இருந்தாலும் அப்படியே தூக்கி விடுவார். இங்கிலாந்து நாட்டில் இருக்கும் இவருக்கு எந்தத் தொழிலும் கிடையாது. வருமானத்திற்கு வழி இல்லை. வருமானம் இல்லாவிட்டால் வயிற்றுப் பசியைத் தீர்ப்பது எப்படி?

அதுதான் இப்படிச் செய்வதன் மூலம் பொதுமக்களை மகிழ்வித்து, அவர்கள் கொடுக்கும் பணத்தை வைத்து வாழ்க்கையை ஓட்டுகிறார் இவான்ஸ். ■

திகைக்க வைக்கும் தொழில் நுட்பம்

→ ஜப்பான் நாட்டின் தொழிநுட்பம் இன்று உலகையே திகைக்க வைத்துக் கொண்டிருக்கிறது. ஜப்பானின் தலைநகரான டோக்கியோவிலுள்ள விளையாட்டுச் சாமான்களை உற்பத்தி செய்யும் டொமி நிறுவனத்தின் ஊழியர் ருமி மசுடா 'எம்.ஈ:3' (M.e:3) என்ற ஒரு ஒளிப் பதிவுக் கருவியை இங்கே காட்டுகிறார். இதில் காணப்படும் இலக்கங்களைத் தட்டி ஈ-மெயில் மூலம், இந்த ஒளிப்பதிவுக் கருவியில் படம் பிடிக்கும் அதே படத்தை உடனடியாக வேறு ஒரு ஈ-மெயிலுக்கும் அனுப்பி விடலாம். இவ்வொளிப்பதிவுக் கருவி அநேகமாக இன்னும் ஓரிரு மாதங்களில் ஜப்பன் சந்தையில் விற்பனைக்கு வந்துவிடுமாம். ■



தகவல் பெட்டி



தன் வினை தன்னைச் சுடும்

← கடல் நடுவே இருக்கும் இந்தக் குட்டித் தீவின் பெயர் நுகுலா. ஃபிஜி நாட்டிற்குட்பட்ட இந்தத் தீவில் ஜோர்ஜ் ஸ்பைட் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்.

ஜோர்ஜ் ஸ்பைட் 'இந்தப்பெயர் எங்கோ கேட்ட மாதிரி இருக்குது ஆனால் ஞாபகம் வரவில்லை'. என்பவர்களுக்கு,

சில மாதங்களுக்கு முன் ஃபிஜி நாட்டின் பிரதமரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மகேந்திர சௌத்ரியை துப்பாக்கி முனையில் சிறைவைத்தவர் தான் இந்த ஸ்பைட்.

'தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்' என்ற முதுமொழிக்கேற்ப அன்னார் சிறைபிடிக்கப்பட்டார். இவருடன் இவரது சில ஆதரவாளர்களும் உள்ளே கம்பி எண்ணுகின்றனர்.

இவர்கள் இருக்கும் இந்தத் தீவை யாரும் நெருங்கக் கூடாது' என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இப்பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

மினி சினி

• மணிவண்ணன் தற்போது இயக்கும் ஆறாவது சினிமா ஆன 'மாயா' படமும் ஆகிய இரு படங்களிலும் சத்யராஜ் கதாநாயகனாக நடித்து வருகிறார்.

• முதன் முதலாக சின்னத்திரையில் முகம் காட்டப் போகிறார் சரத்குமார். ராதிகா தயாரிக்கும் கோலங்கள் என்ற தொலைக்காட்சித் தொடரைத் தொகுத்து வழங்கப் போகிறார் சரத்குமார்.

• கமலின் 'தெனாலி' தமிழில் வெளியான தீபாவளி தினத்தன்று தெலுங்கிலும் மொழிமாற்றி வெளியிடப்பட்டது. தெலுங்கிலும் 'தெனாலி' என்ற பெயரில்தான் இப்படம் வெளியானது.

• பிரபல இந்தி நடிகர் நானா படேகர் முதன் முறையாக மலையாளப்படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். 'ரெமணன்' என்று பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை வி.கே.பிரசாந்த் என்பவர் இயக்குகிறார்.

• வெளி விழாப் படங்களை எடுத்த ஆர்.சுந்தரராஜன் மீண்டும் நகைச்சுவை வேடங்களில் நடித்து வந்தார். இதுவரை இடைவெளிக்குப் பின்னர் இவர் மீண்டும் படமாக்கி இயக்கவுள்ளார்.

• பல படங்களில் நடித்து வரும் விக்னேஷ் தற்போது புதிதாக ஒப்பந்தமான படம் 'ஒன்லி லவ்' தமிழ்ப்படம். தான் இப்படத்திற்காக மிகமிக வித்தியாச ஒப்பனையுடன் இவர் நடிக்கவுள்ளார்.

• நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து சுந்தர்.சி எடுத்து வரும் 'ரிஷி' படத்தில் சரத்குமாருடன் நகைச்சுவை கூட்டணியாக வருகிறார் வடிவேலு.

• 'சேது' படத்தைத் தயாரித்த சந்தானமியின் அடுத்த படத்தை இயக்க இருப்பவரும் புதிய இயக்குநர் ஒருவர் தான். இந்தப் படத்தில் அருண்குமார் கதாநாயகனாக நடிக்கிறார்.

நிம்மதியான பிரசாந்த்

பிரசாந்த் ஜோடியாக இந்தி நடிகை அமிஷா படேலை 'என்ன விலை அழகே' படத்தில் பெரும் தொகை கொடுத்து ஒப்பந்தம் செய்தனர்.

'என்ன விலை அழகே' சற்றுத்தாமதமாக. இந்திக்குப் போய் விட்டார் அமிஷா. சமீப காலம் அங்கே நடித்து விட்டு மறுபடி தமிழுக்கு வந்துவிட்டார் அமிஷா.

'மலைவேளை பிரியாத வரம் வேண்டும்' படம் போன்று இதுவும் தாமதமாகி விடுமோ என்று பயந்து கொண்டிருந்த பிரசாந்திற்கு இப்போது நிம்மதி.



ஆகாஷ்
படம்: பெண்கள்2

பெண்களிடமிருந்து ...

வியாபார விடுதி நடத்தும் ... காரி அவரது இடத்திற்கு ... பதிரிகை நிருபர் என்று ... மூலம் முகவரிப் பெற்றதாக ...

அது பாலியல் தொழிலில் ... பெண்கள் தனியாக வரும் ... கண்டு அதிர்ச்சியுற்ற ... தான் அங்கு வந்ததாகக் ... மாற்றித் தப்பவைத்தனர். ... காக படமாக்கப்பட்டது. ...

படமெடுக்கிறார்

திரைப்பட ஒளிப்பதிவாளர் ... ரான சுரேஷ்மேனன் புதிய ... எடுக்கிறார்.

இப்படத்தை சுரேஷ் மேனன் ... ரேவதி தயாரிக்கிறார். தொலைக்காட்சியில் புகழ் பெற்றிருப்பதைப் போல் ... தங்களது பட நிறுவனம் புகழ் ... என்று தெரிவிக்கிறார் ரேவதி.

சத்யராஜ்-ரம்யா
படம்: குங்குமப்பொட்டுக் கவுண்டர்

திரையுலக மறுபக்கம் 173

தமிழ்நாட்டிலிருந்து மயன்

குறி கேட்ட நடிகையும் குரல் மாற்றிய இயக்குநரும்

பிரபல நடிகை ஒருவரின் பெயரைக் கொண்ட இளம் நடிகை அவர் பரம்பரை என்று பொருள் படக்கூடிய படத்தில் இளம் நாயகியாக அறிமுகமானவர். முதல் படம் சரியாகப் போகவில்லை. இருப்பினும் இன்னொரு படத்திலும் நடித்தார். அந்தப் படமும் ஊத்திக் கொண்டது.

வெறுத்துப் போன இந்த நடிகையின் பார்வை ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒரு பிரபல சாமியாரிடம் அழைத்துச் சென்று குறிகேட்க வைத்தார்.

அத்துடன் அந்தச் சாமியார் மூலம் ஒரு பெரிய யாகமும் நடத்தினார் நடிகை. இதற்காக ஒரு இலட்சம் ரூபா வரை செலவு செய்தார். பின் சாமியாருடைய ஆசியின்படி 'ரித்' என்று பெயரையும் மாற்றிக் கொண்டு தமிழில் வாய்ப்புத்தேடி வருகிறார் நடிகை.

குரலை மாற்றிய இயக்குநர்

காதலின் சின்னத்திலான படத்தில் நடித்த இளம் நாயகன் மறுபடியும் தனது தந்தையின் இயக்கத்தில் 'கடல்' சம்பந்தப்பட்ட படம் ஒன்றில் நடித்து வருகிறார்.

முதல் படத்தில் ஏற்பட்ட அடி தொடராமல் இருக்க, ஒரு முன்றெழுத்து முன்னணி நடிகர் நடிக்கும் இப்படத்தில் தன் மகனுக்கும் ஒரு நல்லபாத்திரத்தை அமைத்தார் இயக்குநரான தந்தை.

முதல் படத்தில் மகனின் ஹீரோயிசம் எடுபடாமல் போனதற்கு மகனது மென்மையான குரலும் ஒரு காரணம் என்று சிலர் சொல்ல, இந்தப் படத்தில் மகனுக்கு பின்னணிக்குரல் கொடுக்க முடிவு செய்துள்ளார் இயக்குநர்.

பிரியமான நடிகையை மணந்து கொண்ட அந்த நான்கெழுத்து வில்லன் நடிகரை வைத்து மகனுக்குக் குரல் கொடுத்துள்ளார் இயக்குநர்.

பெயரை மாற்றிய இயக்குநர்

அருண்குமார் திவ்யா உன்னி ஜோடியாக நடிக்கும் 'புத்தன்' படத்தை வி.சி. வடிவுடையான் என்பவர் இயக்குகிறார்.

சில வருடங்களுக்கு முன் 'பாரதம்' என்ற படத்தை ஸ்டோன் என்ற பெயரில் இவர் இயக்குவதாக இருந்தது.

ஏனோ 'பாரதம்' திட்டமிட்டபடி உருவாகவில்லை. இப்போது வடிவுடையான் என்ற பெயரை மாற்றியிருக்கும் இவரது சொந்தப் பெயர் ஸ்டீவ்டன்.

இராம. நாராயணனின் 'பேய் நிலா'

ஸ்ரீதேவாண்டாள் ஃபிலிம்ஸ் சார்பில் இராமநாராயணன் தயாரித்து இயக்கும் திகில் படம் 'பேய் நிலா'. திகிலூட்டும் சம்பவங்கள், பீரமிக்க வைக்கும் கிராஃபிக்ஸ் காட்சிகளுடன் தயாரிக்கப்படும் இப்படத்தில் இதுவரை ஏற்றிராத புதுமையான வேடத்தில் நடித்து வருகிறார் ரம்யா கிருஷ்ணன்.

கரண், மீரா ஜாஸ்மின், வடிவேலு, ரமேஷ் கண்ணா, ரியாஸ்கான், நிழல்கள் ரவி, கோவை சரளா, மாஸ்டர் மகேந்திரன், மற்றும் பலர் நடிக்கின்றனர்.

ஒளிப்பதிவை என்.கே.விஸ்வநாதன் கவனிக்க, எல்.ஏ.ராஜகுமார் இசையமைக்கிறார். ஊட்டி, குன்னூர், மேட்டுப்பாளையம் போன்ற பகுதிகளில் இதன் படப்பிடிப்புக்கள் நடந்து வருகின்றன.

மோகன்லாலுடன் ஜெயப்ரதா

மலையாள சூப்பர் ஸ்டார்களில் ஒருவரான மோகன்லால் நடிக்கும் புதிய மலையாளப்படம் ஒன்றை இயக்கவுள்ளார் பிரபல இயக்குநர் சியமளையில் 'குணா' படத்தை முதலில் இவர்தான் இயக்குவதாக இருந்தது.

இப்படத்தில் மோகன்லால் ஜோடியாக நடிப்பவர் ஜெயப்ரதா. பெயர் சூட்டப்படாத இப்படத்தின் படப்பிடிப்புக்கள் வெகு வேகமாக நடந்து வருகின்றன.

ராஜ்குமாரால் பாதிப்பு

சந்தனக்கடத்தல் வீரப்பன் கன்னட நடிகர் ராஜகுமாரைக் கடத்தி வைத்திருப்பதால் கன்னடப்பட்டுலகம் மட்டுமல்லாத தமிழ்த்திரையுலகமும் பாதிக்கப்பட்டுள்ளது.

விக்ரம்-சுவலட்சுமி நடிக்கும் 'விகடன்' படத்தின் தயாரிப்பாளர் கன்னடர் என்பதால் படப்பிடிப்பை அப்படியே நிறுத்தி விட்டார்.

ரவீனா ரண்டன்

ஊட்டியில் தயாராகும் 'ஜிந்தா'

புதிய படநிறுவனம் ஒன்று முதன்முறையாகத் தயாரிக்கும் படம் 'ஜிந்தா'.

பிரபல இயக்குநர்களிடம் உதவியாளராகப் பணியாற்றிய மைக்கல் என்பவர் முதன் முதலாக இப்படத்தின் மூலம் இயக்குநராகிறார்.

ஆகாஷ் கதாநாயகனாக நடிக்கிறார். இவருடன் ரகுவரன், சின்னிஜெயந்த், நாசர், செந்தில், அலெக்ஸ், அனுமோகன், கோவை சரளா, புவனேஸ்வரி ஆகியோர் நடிக்கின்றனர். கார்த்திக் கண்ணன் என்பவர் கதை திரைக்கதை, வசனம் எழுத, தேவா இசையமைக்கிறார்.

முகப்பில்

விக்ரம்-தேவயாணி
படம்: விண்ணுக்கும் மண்ணுக்கும்.

பிரசாந்த்-அமிஷா படேல்
படம்: என்ன விலை அழகே

சி
னி
விசிட்

...ப்பிய ஆகாஷ்

...ரமா என்ற கொடுமைக்
...பரத் என்ற இளைஞன்
...ம். அவனை அடியாட்கள்
...போட்டு விடுகிறாள்.
...பட்டு நோய்வாய்ப்பட்ட
...டமாகும். அவர்களைக்
...களைக் காப்பாற்றவே
...வர்கள் அவளைக் காப்
...ட்சி பெண்கள்' படத்திற்
...தாக ஆகாஷ் நடித்தார்.

...ார் ரேவதி

...இயக்குநரும் நடிகரு
...ரனை' என்ற படத்தை
...
...ராயாக இவரது மனைவி
...டித்த தொடர் தயாரிப்
...து இப்படம் முடிவ
...ரும்

மறுபடி வந்தார்

மீனா, ரம்பா, மந்தரா இவர்களுக்கு ஓர் ஒற்றுமை உண்டு. தமிழில் இருந்து தெலுங்குக்குச் சென்றவர்கள். அங்கு பிரபலமாகி மறுபடி தமிழுக்கு வந்தவர்கள்.

இந்த வரிசையில் அஞ்சலா சவேரியின் பெயரையும் இணைத்துக் கொள்ளலாம். இந்தி நடிகையான அஞ்சலா 'பகைவன்' படத்தில் அறிந்த ஜோடியாக நடித்தவர். இதன் பின் தெலுங்குதேசம் சென்று பிஸியானார்.

இப்போது மறுபடி தமிழுக்கு வந்துள்ளார் அஞ்சலா. இவர் மறுபடி தமிழில் நடிக்கும் படம் 'உள்ளம் கொள்ளை போகுதே'. காராதிக்-பிரபுதேவா இணைந்து நடிக்கும் இப்படத்தில் அஞ்சலா பிரபுதேவாவுக்கு ஜோடியாக நடிக்கிறார்.

கமலும் இந்தி நடிகைகளும்

கமல் இப்போது பல படங்களில் நடிக்கத் திட்டமிட்டுள்ளார். தீபாவளிக்கு வெளியான 'தெனாலி' படத்தை அடுத்து வெளிநாட்டுத் தொழில்நுட்பக் கலைஞர்கள் சகிதம் கிரேஷ் கிருஷ்ணா இயக்கும் 'ஆளவந்தான்' படத்தில் நடித்துவருகிறார் கமல். இரட்டை வேடங்களில் நடிக்கும் கமலுக்கு இதில் இரண்டு ஜோடிகள். இருவரும் இந்தி நடிகைகள். ஒருவர் ரவீனா ராண்டன், மற்றவர் அநேகமாக மஹிமா சௌத்ரியாக இருக்கலாம்.

'ஆளவந்தான்' வரும் தைப்பொங்கலுக்கு வெளியாகவுள்ளது. இதைத்தொடர்ந்து கமல் பிரபல இயக்குநர்களான ஷங்கர், பிரியதர்ஷன், மௌலி ஆகியோரது இயக்கத்தில் நடிக்கவுள்ளார்.

பொங்கலுக்கு வெளியாகும் 'ஆளவந்தான்' படத்தை அடுத்து சித்திரைப் புத்தாண்டில் வெளியிடுவதாக கூடிய வகையில் தயாராகும் படத்தில் கமல் நடிக்கவுள்ளார். இதிலும் கமலுக்கு ஜோடியாக இந்தி நடிகை ஒருவர் தான் நடிக்கவுள்ளார்.

விஜய் நடிக்கும் படங்கள்

விஜய் நடித்த 'பிரியமானவளே' வெளியாகி விட்டது. இதைஅடுத்து விஜய்யின் 'மிரண்டல்' படம் வெளியாகவுள்ளது. 'உதயா' வெளியீடுவதில் சிறிது தாமதம். தாமதத்திற்குக் காரணம் தயாரிப்பாளர் தரப்பு என்கிறது விஜய் வட்டாரம்.

இவையெல்லாம் வெளியாக முன்னரே விஜய் ஒப்புக் கொண்ட இரண்டு புதிய படங்கள் படப்பிடிப்புக்குத் தயாராகி விட்டன. அவற்றில் ஒன்று விக்ரமன் இயக்கத்தில் விஜய் நடிக்கும் இன்னமும் பெயரிடப்படாத படம். 'பூவே உனக்காக' படத்திற்குப் பின் விக்ரமன்-விஜய் இணையும் படமிது.

அடுத்து சுப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்க ரவி என்னும் புதியவர் இயக்கும் படம். இப்படத்திற்கு 'ஷாஜகான்' என்று பெயரிட்டுள்ளார்கள்.

அல்லி அழகி

புதிது புதிதாக அழகிகளைத் தமிழுக்கு இறக்குமதி செய்தாலும் அவர்கள் தமிழில் தாக்குப் பிடிப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும் அழகிகள் இறக்குமதி தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது.

அண்மையில் இறக்குமதியான அழகிகளில் ஒருவர் ரிச்சா சரணின். 'அல்லி அர்ஜுனா' படத்தில் அர்ஜுனா மனோஜுக்கு ஜோடியாக அறிமுகமாகிறார் அல்லி ரிச்சா.



கத்யன்-கெளரவ்மா படம்: இளையவன்

ரஜினியின் நாயகி

ரஜினி ரசிகர்களுக்கு ஓர் இனிப்பான செய்தி. ரஜினியின் புதிய படத்தின் இயக்குநர் மற்றும் நாயகி ஆகியோர் முடிவாகி விட்டார்.

இயக்குநர்-கே.எஸ். ரவிக்குமார். நாயகி-ஜோதிகா. இன்னொரு நாயகியும் உண்டு. கன்னட நடிகர் ராஜகுமார் விடுதலைக்குப் பின் ரஜினி படம் தொடங்கவுள்ளது.

தமிழில் கவனம்

சரத்குமாருடன் 'ரிஷி', 'புகழ்' மற்றும் ராம்கியுடன் ராஜராஜேஸ்வரி ஆகிய படங்களில் நடித்துவரும் சங்கவி மீண்டும் தமிழில் கவனம் செலுத்தி வருகிறார்.

உதயா ஜோடியாக ராதிகா சௌத்ரி

'திருப்பதி ஏழுமலை வெங்கடேசா' படத்திற்குப் பின் பிஸியாக இருக்கும் இராமநாராயணன் தற்போது இயக்கி வரும் படங்களில் ஒன்று 'ஷக்கலக்க பேபி'.

'ஸ்பா ஸ்பா ஜஸ்பா' என்ற பெயரில் தயாரான இப்படம் 'ஷக்கலக்க பேபி' என்று பெயர் மாற்றத்துடன் வளர்ந்து வருகிறது. ரோஜா நாயகியாக நடிக்கும் இப்படத்தில் உதயா-மும்தாஜ் ஜோடி நடிப்பதாக அறிவிக்கப்பட்டது. முன்னணி நடிகர்களுக்கு ஜோடியாக நடித்து வரும் மும்தாஜ், ஒரேயொரு படத்தில் நடித்துள்ள உதயாவுக்கு ஜோடியாக நடிக்க மறுத்துவிட்டார்.

இப்போது உதயா ஜோடியாக ராதிகா சௌத்ரி நடித்து வருகிறார்.

மஹிமா சௌத்ரி

காதோடு சொல்லுகிறோம்

சின்னத்திரையில் கிசுகிசுக்களில் பலமாக அடிபடுவர் 'புலனத்தை ஆளும்' ரன்வரியின் பெயரைக் கொண்டவர்தானாம். இவருடைய வேகத்தைப் பற்றிப் புகழாதவர்களே கிடையாதாம். இப்படிப் புகழ்ந்தவர்களில் ஒருவர் நடிகையால் தனது புகைப்பட நிருவனத்தையே இழந்துள்ளாராம்.

பெருக்கு முன்னால் ஊர் பெயரைச் சேர்த்துக் கொண்டிருக்கும் அந்த நகைச்சுவை நடிகை, தன்னை ஒப்பந்தம் செய்ய (நடிக்கத்தான்) வருபவர்களிடம் தனக்கு ஜோடியாக 'விவேக்'மான நடிகரைப் போடும்படி கூறுகிறாராம். 'வேல்' நடிகரைப் போட்டால் என்ன என்று கேட்டால் நடிகை கோபப் பார்வையை வீசி விடுகிறாராம்.

காதல் வயப்பட்டிருந்தபோது வந்த வாய்ப்புக்களை உதறிய நான்கெழுத்து 'மா' நடிகை, அதற்காக இப்போது வருத்தப்பட்டு வருகிறாராம். நடிராள காதலருடன் ஏற்பட்ட மனத்தாங்கலால் தனியாக இருக்கும் நடிகை, இப்போது நடிக்க வாய்ப்புக் கேட்டு வருகிறாராம்.

பெரிதாகப் படவாய்ப்புக்கள் எதுவுமின்றி இருக்கும் 'மீன்' நடிகையை குறைந்த ஊதியம் கொடுத்து தனது படத்தில் நடிக்க வைக்க விரும்பிய தயாரிப்பாளர் ஒருவர் முற்பணமாக சில இலட்சங்களைக் எடுத்துக் கொண்டு நடிகையிடம் சென்றாராம். நடிகையின் சம்பளத்தைக் கேட்டு அதிர்ந்து போன அந்தத் தயாரிப்பாளர் மறுபேச்சுப் பேசாமல் திரும்பி விட்டாராம்.

தேர்தலும்

காயமும் மருந்தும்

ஒவ்வொரு கணத்தையும்
விழுங்கிக் கொண்டிருக்கும்
மானிடனுக்கு–சில
பொல்லாத கணங்கள்,
நாக்கில் சூடு போட்டுவிட்டு
சென்றுவிடும்....!
***
வருகின்ற சில நல்ல
கணங்களைக் கூட–இதனால்
அவன் சுவைக்க
முடிவதில்லை....!
***
ஆனால் அதே காலம்தான்
அவன் காயங்களை ஆற்றியும்
செல்கிறது–இல்லை எனில்
காயங்களாலேயே
அவன் நா சுவைகெட்டு
சுருண்டுவிடும்.

இருபாலையூர்–அரிந்தமன்.

நம்பிக்கை

தோழனே.....!
துடித்தெழு–நீ
சோர்ந்திருப்பதனால்
உந்தன் முகவரி
முகம்காட்ட மறுக்கிறது!
***
கவலைகளை மறந்துவிட்டு
கற்பனையை கடன் வாங்கி
கவிதை மாலை கோர்த்து
எட்டுத்திக்கும் சேதிகளை
எடுத்து வரும்
தித்திக்கும் தினமுரசுசுடாக
உன் துயரை உலகிற்கு
எடுத்துச் சொல்...!
***
மானமுள்ள தமிழன் நீ
மார்பு தட்டி நிமிர்ந்து கொள்
துன்பத்திலும் துணிவோடிரு
சிரித்த முகத்துடன் சிந்தித்து வாழ்!
***
தமிழனாய் பிறந்தமைக்கான
தலைவிதியை நொந்து
தலையில் அடித்து
விழிநீரை இறைப்பதை
விட்டு விடு...!
விடியும் விரைவிலென
நம்பிக் கொள்....!
***
யானை பலம் தும்பிக்கையில்
மனித பலம் நம்பிக்கையில்
கண்ணதாசன் கருத்தது
காதில் வாங்கிக்கொள்....!
***
நம்பிக்கையை நணபனாக்கு
நலிவென்பது நிச்சயமில்லை!
ஏனெனில்
நதிகள் கடல் சேர் நம்பிக்கை
வீணாவதில்லை.....!

சிதம்பரப்பிள்ளை–
துஷ்யந்தன்–மண்டூர்.

அதறப் பதற

பாவம்
மனசு....
சிறகுகள் கத்தரிக்கப்பட்டு
சிறைக் கூண்டுக்குள்
அதறப் பதற...!
***
அடியேய்
உன்னை
ஏந்த வேண்டி
இதயத்தில்
முகாரியல்லவா
இப்போது
முகவரி....?
***
குழந்தைப் பருவத்தில்
நீ
பொம்மை கேட்டபோது
நானே
உனக்கொரு
பொம்மையானேன்....!
இப்போது....?
நீ
குமரியடி....
நீ விளையாட
நான்
பொம்மையல்ல....!
***
ஊமையாய்ப் போனது
வார்த்தைகள் மட்டுமல்ல;
அடியேய்
உன் பெயரில்
நான் வைத்திருந்த
நம்பிக்கையும்தான்!
***
வாழ்க்கை என்பது
எதிர்காலத்தை
நோக்கிச் செல்லும்
பயணமடி!
நீயோ
ஏனடி
பின்னால்
போய்க்கொண்டிருக்கிறாய்...?
***
மரங்கள் கூட
இலை உதிர்காலத்தை
நேசிக்கிறது;
நீயோ
ஏனடி
உறவு என்று
கேட்ட போது
சருகுகளைத் தந்தாய்?
***
உறவுக் கிளைகளை
வெட்டியவளே!
நீ
இருபோதும்
உருப்படப்போவதில்லை...
பட்ட மரத்தைப்போல...!
***
மனச்சாட்சியை
கல்லறையில்
புதைத்தவளே,
உன்
வாழ்க்கை
இனி
நடைப்பிணம்தான்!

ஏ. நஸ்புள்ளா–கின்னியா.

என்னைக் காதலித்ததால்!

உன்
வீட்டில்
செல்லப்பிள்ளையாய்
இருந்த–நீ
இன்றோ....
என்னைக் காதலித்ததால்
வேண்டாப் பிள்ளையானாய்!
***
நண்பர்களின்....
அரட்டைகளில்,
முதலிடம் வகித்த–நீ
என்னைக் காதலித்ததால்
கழிக்கப்பட்டாய்!
***
ஊர் சுற்றலில்
விருப்பமுள்ள–நீ
என்னைக் காதலித்ததால்
விமர்சிக்கப்பட்டாய்!
***
செல்வந்தனாய்...
வாழ்வதற்கு–வந்த
வாய்ப்பை எல்லாம்
என்னைக் காதலித்ததால்
இழந்தாய்!
***
இவற்றையெல்லாம்
எனக்காகத்
தொலைத்த உனக்காக
நான் சொல்வது
இதுதான்!
***
என்னை மறந்துவிடு!
ஏனெனின்–நீ
நல்வாழ்வு
வாழ்வதற்காக!

மு.சசிகலா–கோமாரி–10.

என் மொழிகள்

டி.ராஜேந்தர்



எரியவேண்டுமென்ற நினைப்பு
இருப்பதால் மட்டுமே
மின் விளக்கு எரிந்து விடுவதில்லை.
மின் இணைப்பு இருந்தால்தான் எரிய
முடிகிறது.
முன்னேற வேண்டுமென்ற நினைப்பு
இருந்தால் மட்டும் போதாது.
முயற்சி செய்து கொண்டே இருக்க
வேண்டுமென்ற
முனைப்பு இருக்க வேண்டும்.

தேயும் முன் செருப்பு இருப்பதோ கடையிலே
தேய்ந்து கிழிந்த பின் அதன் நிலையோ சாக்கடையிலே
அது வாழும் வாழ்க்கையோ இடையிலே
மனித வாழ்க்கை கூட அதைப்போன்ற நடையிலே.

மொய்க்கின்ற ஈக்களுக்கு சாக்கடையும் ஒன்றுதான் பூக்கடையும் ஒன்றுதான்.
முட்டாள்தனமான ஜென்மங்களுக்கு நல்லவையும் ஒன்றுதான் கெட்டவையும் ஒன்றுதான்.



சந்தனக்கட்டை தேய்க்கத் தேய்க்க மணத்தைக் கொடுக்கும்.
சந்தேக உணர்வை வளர்க்க வளர்க்க மனத்தைக் கெடுக்கும்.

கடப்பாரை எடுத்து காது குடையவும் கூடாது.
கண்டவரை நம்பிக் காசைக் கொடுக்கவும் கூடாது.

விலைபோகா பண்டங்கள்!

விலைவாசி ஏறியதால்
விலை போகாமல் நாங்கள்!
இரண்டு லட்சம் கேட்டவனும்
பத்து லட்சம் கேட்டதனால்
இந்த அந்தப்புரத்தில்
கன்னியர் நாம்
அஞ்ஞாத வாசம் செய்கிறோம்!
***
கூந்தல் முடி வெள்ளை கண்டால்
கருமை கொண்டு மேவுகிறோம்!
மனதில் படர்ந்த செவ்வடுவை
எம்'மை' கொண்டு மூடுவது?
***
கண்ணை நிறைத்த கனவுகளை
கண்ணீர் அடித்தே செல்கிறது.
எம்மை நெருக்கும் கொடுமைதனை
யார்தான் அடித்துக் கொலுவது?
***
சாவது சில்லரும் மனிதமே
இதுதான் நம் நாட்டின்
கணிதமோ?
இந்த வேட்கை துணியுமோ?
என்று மனங்கள் கனியுமோ?
விடைதெரியாமல்
எங்கள் நிழலும் எம்மை
நெருப்பாய் சுடுகிறது!

பீற்றர் ஜோன்தாஸ்–
மன்னார்.

நில்–கவனி–முன்னேறு

நீங்கள் எப்போதாவது பணத்தைக் கண்டெடுத்திருக்கிறீர்களா?

நடைபாதையில் நடந்து செல்கின்ற போதோ, காரை நிறுத்திவிட்டு ஒதுங்குகின்ற போதோ, அல்லது ஒரு கடைப்பக்கமாகச் சென்றபோதோ, எப்போதாவது பளிச் சென்று கண்களில் படுகின்ற நாணயத்தைக் கவனித்திருக்கிறீர்களா?

அப்படி ஒரு நாணயம் எதிர்பாராமல் உங்கள் கண்ணில் பட்டிருந்தால், என்ன நடந்தது என்பதைக் கொஞ்சம் நினைவு படுத்திப் பாருங்கள். உங்களுக்கு ஏற்பட்ட எதிர்பாராத மகிழ்ச்சி நினைவுக்கு வருகிறதா? அந்த நாணயத்தை எடுத்து, அதிஷ்டம் உங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியில் அதைச் சற்று நேரம் உற்று கவனித்திருப்பீர்கள். மற்றவர்களிடம் உங்களுக்கு ஏற்பட்ட அந்த அதிர்ஷ்டத்தைச் சொல்லி மகிழ்ந்திருப்பீர்கள். கிடைத்த பணத்தைப் பலரும் பத்திரப்படுத்தத்தான் விரும்புகிறார்கள். தங்களுடைய அதிர்ஷ்டத்தின் அடையாளமாக, அதை விசேஷமாகப் பாதுகாக்கிறார்கள். தங்களின் அதிர்ஷ்டத்தை நினைவு படுத்துகின்ற விஷயமாகவும் அதைக் கருதுகிறார்கள்.

ஏதோ எதிர்பாராமல் ஒரு ரூபாய் நாணயத்தைக் கண்டெடுத்ததற்கு முக்கியத்துவம் எதுவும் இல்லை. அப்படி ஏதாவது இருக்க முடியுமா என்ன?

பணத்தின் மதிப்பு முக்கியமில்லை. ஒரு ரூபாயை வைத்துப் பெரிதாக எதையும் வாங்கிவிடவும் முடியாது. மதிப்பு, நாம் பெறுகின்ற உணர்ச்சியில்தான் இருக்கிறது. அதிர்ஷ்டம் வந்துவிட்டதைப் போல ஓர் எண்ணம்! அதைக் கண்டெடுத்ததிலிருந்து அதிர்ஷ்டம் உங்களுக்கு ஏற்படத் தொடங்கியிருப்பதைப் போலவும் நீங்கள் எண்ணக் கூடும்.

இது அவசியமானதுதானா? நிச்சயம் அவசியமானதுதான்... மனோதத்துவ நிபுணர்கள், "ஒரு காரியம் நடப்பதைவிட, அந்தக் காரியம் நடப்பதால் உங்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிதான் முக்கியமானது எனக் கூறுவார்கள். மனத்தின் ஆற்றலைவிட மனோபாவங்களே மிகவும் பயன் உள்ளவையாக இருக்கின்றன. நீங்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்களோ அப்படியே நீங்கள் ஆகிறீர்கள்.

நீங்கள் அதிர்ஷ்டசாலி என எண்ணிக் கொள்ளுவதும் பயன் உள்ள ஒரு மனோபாவம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்களோ அது உங்களுக்குக் கிடைக்கிறது.

இந்த அதிர்ஷ்ட மனோபாவம் எல்லாரிடமும் ஏற்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆகவே அவர்களைக் கண்டெடுக்கும்படியாக நாணயங்களைத் தூவி வைக்கிறேன். தெருவில் நடந்து செல்லும் போது, என்னுடைய காலணியின் நாடாவைக் கட்டுகின்ற பாவனையில் கீழே குனிந்து, ஒரு நாணயத்தை நழுவவிட்டு, பிறகு அங்கிருந்து சென்று விடுகிறேன். காரை நிறுத்துகின்ற இடத்தில் பிள் சக்கரத்தைப் பழுது பார்ப்பதைப் போல பாவனை செய்து, ஒரு நாணயத்தை நழுவ விட்டு நடக்கிறேன். ஒரு சுடையின் முன் நின்று பொருள்களைப் பார்த்தபடியே ஒரு நாணயத்தைக் கீழே விட்டுச் செல்லுகிறேன்.

நிச்சயமாக நான் திரும்பிப் பார்ப்பதில்லை. அந்த நாணயத்தை யார் கண்டெடுக்கிறார்கள் என்று நின்று கவனிப்பதில்லை. அப்படி நான் செய்தால் அதைக் கண்டெடுப்பவரின் முகத்தில் எப்படிப்பட்ட குழந்தைத்தனமான குதூகலம் ஏற்படும் என நான் செய்திருந்த கற்பனை வீணாகிப் போகும். திரும்பிப் பார்க்காதபோது என்னுடைய இஷ்டத்திற்கு நான் காட்சியைக் கற்பனை செய்து கொள்ள முடியும்.

பேனா நண்பர்கள்

பெயர்: தி. பிரபா
வயது: 21
முகவரி: இல 75/72,
கற்குழி, வவுனியா.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: த.ஹரிஹரன
வயது: 18
முகவரி: 140/42, பொலிஸ் கந்த வீதி, பண்டாரவளை.
பொழுது போக்கு:
வானொலி, புதிய தகவல்களை அறிந்து கொள்ளல்.

இந்தவாரம் உங்கள் பலன்

05.11.2000 முதல் 11.11.2000வரை

ஜோதிடர் 'கானா'

மேடம் :
சனியின் கால பலன்கள், கிரக மாற்ற இயல்பு திருமண சுப கரும விடயங்கள் கைகூடும். பொருள், வசதிகள், சொத்துக்கள் என்பன கிடைப்பதுடன் வெளியிடத் தொடர்பும் சகோதர வழி உதவிகளும் கிடைக்கும். அச்சுவினி பெண்களுக்கு பல வசதிகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 09, 11.

இடபம் :
கிரகச்சமநிலை உள்ளதால், புதிய தொழில் வசதிகள், பலரின் தொடர்புகள் ஏற்படும். நோய் துன்ப நிலையுடன் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கலாம். உறவினர் நண்பர்களின் பிணக்குகள் ஏற்படலாம். ரோகிணி, மிருகசீரிடக்காரர்கள் எதிலும் விழிப்பாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 07, 11.

மிதுனம் :
செய்தொழில் விருத்தியும் வெளியோரால் பணப் பொருள் வசதிகளும் கிடைக்கும். வாகன வசதிகளைப் பாவிப்போர் கவனம் எடுக்கவும். தொழில்நுட்ப, இயந்திரத் துறை சம்பந்தப்பட்டோர் உயர்வுகளைப் பெறுவார்கள். தனுசு ராசிக்காரரால் உதவிகள் அமையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 07, 09.

கடகம் :
குடும்பத்தில் பிரச்சனைகள் இருப்பினும் மகிழ்ச்சிக் காணப்படும். தொலைந்து போன பொருட்கள் மீளப்பெறும். மனதில் நம்பிக்கை ஏற்படும். பரீட்சைகள் கல்வி வசதிகள் நன்றாக அமையும். பூச நட்சத்திர காரருக்கு மகிழ்ச்சியான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 06, 09.

சிம்மம் :
பயணம் வெற்றியளிக்கும். போதுமானளவு பணச் சேர்க்கையும் நண்பர்கள், வெளியோரின் உதவிகளும் கிட்டும். செய்தொழில் விருத்தியடையும். உறவினர், தாய் சகோதரர்களை காணும் வாய்ப்புகள் அமையும். மகர, பூர நட்சத்திரர் பணவசதிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மரூண் வர்ணம்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 06, 10.

கன்னி :
கணவர், குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படும். வாகன, வெளிப் பிரயாணங்களைத் தவிர்க்கவும். நோய் மருத்துவச் செலவுகள் ஏற்படும். வார இறுதியில் இடமாற்றம், பயண வசதிகள் ஏற்படும். அத்த, உத்தர பெண்கள் கவனமாக நடக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 07, 09.

துலாம் :
எதிர்பார்த்த தேவைகள், கருமங்கள் வசதிகள் கிடைக்கும். பல நாட்பட்ட கஷ்டமான விடயங்கள் கைக்குவரும் திருமண காதல் விடயங்கள் கைகூடும். சிம்ம ராசிக்காரால் நன்மைகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ் வர்ணம்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 10, 11.

விருச்சிகம்:
வெளியிடத் தொடர்புகள் அதிகரிக்கும். குடும்பத்தில் முக்கிய உறவினர்களின் பயண வசதிகள் ஏற்படும். எதிலும் கவனமாக செயற்படுவது நன்மைகளைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 08 09.

தனுசு :
முடிவுகளில் மாற்றம் வரப் பெறும். நண்பர்கள் தெரிந்த வெளியோர்களின் உதவிகள் கிட்டும் ஆலயதரிசனமும் பெரியோர்களின் ஆசீர்வாதமும் கிடைக்கும். கல்வி, முயற்சிகள் வெற்றியாக முடிவுறும். மூல நட்சத்திர காரர் பாராட்டுக்களைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், புதன்.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 05, 10.

மகரம் :
மனத் துயரம் நீங்கும். நோய் பிணிகள் குறையப்பெறும். பிள்ளைகளின் நண்பர்களின் உதவிகள் கிட்டும். தூர இடத்துச் செய்திகளால் நலன் கிட்டும். திருவோண நட்சத்திர காரர்களுக்கு இலாபங்கள் வந்து சேரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 05, 08.

கும்பம் :
இடையிட்டு நின்ற நிலை மாற்றமடையும். கல்வி தொழில் வசதிகளை பெறுவார்கள். அரசு எதிர்ப்பு காணப்படும். காதல், திருமண விடயங்கள் சமநிதமாக பேச்சுக்கள் நடைபெறும். சதயக்காரருக்கு சுபகரும பலன் உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளபச்சை; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 06, 09.

மீனம் :
நல்ல திட்டங்கள் நடைமுறைக்கு வரப் பெறும். பிரயாண ஆரம்பவேலைகள் அல்லது இடமாற்ற வசதிகள் ஏற்படலாம். பணவரவு காரிய சித்தியும் உண்டு. மூத்த சகோதரரின் உதவிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 05, 10.

அழகாக அவசியம் தேவை ஆரோக்கிய உணவுகள்

அழகு என்பது அணிகலன்கள், ஆடைகள், அழகுசாதனப் பொருட்களில் மட்டுமா இருக்கிறது? இவை எல்லாம் செயற்கை அழகு முறைகள். உண்மையான அழகு என்பது இயற்கையில் அமைவது தான்.

மென்மையான தேகம், மாசுமறுவற்ற மேனி, மிதமான உடல்வாகு, அடர்த்தியான கூந்தல், பளபளக்கும் கால்கள், கொடி இடை இவை எல்லாம் அமைய வேண்டும். இப்படி அமைய வேண்டுமானால் இயற்கையான ஆரோக்கிய உணவு வகைகள் அவசியம்.

பெரும்பாலான பெண்கள் உணவு முறைகளில் கவனம் செலுத்துவதில்லை. பொதுவாக சுருக்கமற்ற நல்ல ஆரோக்கியமான மேனி பெண்களுக்குத் தேவை. இதற்கு பீட்டாக்கரோட்டீன் என்கிற சத்து மிகவும் அவசியம்.

காரட், தக்காளி, முந்திரிகை வற்றல் மற்றும், இனிப்பான கிழங்கு வகைகளில் இந்தச் சத்து அதிகமாக உள்ளது. ஆகவே இவற்றை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் மேனி எழில் கூடும்.

பெண்களுக்குத் தேவை இயற்கையான நல்ல நிறப்பொலிவு. இதனை விட்டமின் 'சி' வாரி வழங்குகிறது. கொய்யா, முட்டைக் கோவா, காரட், பழங்கள் ஆகியவற்றில் இது அதிகம் உள்ளது எனவே நல்ல நிறத்தோடு திகழ இதைச் சாப்பிட வேண்டும்.

பலருக்குத் தோல் வறண்டு காணப்படும். கை, கால், முட்டுக்களில் சொறி, கீறல் ஆகியன இருக்கும். இதற்குக் காரணம் விட்டமின் 'ஏ' குறைவாக இருப்பது.

இந்தக் குறையைப் போக்க பால், முட்டை, மீன் மற்றும் பழங்கள் முடிந்த அளவு

சாப்பிட வேண்டும்.

உடலில் போதியளவு புரதச்சத்து இருந்தால் முடி கொட்டாது. இதற்கு முட்டை, காரட், பால் பொருட்களை அதிகம் உண்ண வேண்டும்.

இவற்றைத் தவிர அனைத்துக் கீரை வகைகளும் உடலுக்கு மெருகூட்டுபவை. இவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அழகான மேனிக்கு நல்ல இரத்த ஓட்டமும் அவசியம். அதற்கு புதினாக் கீரையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். புதினா இரத்தத்தை சுத்தப்படுத்துகிறது.

சமயோசிதமான சமையல் குறிப்புகள்

★ மாமிசத்தை வேக வைக்கும் போது அதிகமானதீயில் வேக வைக்கக்கூடாது. அப்படி வேக வைத்தால் அதில் உள்ள சத்துப்போய்விடும். இதே வேளை காய்கறிகளை அதிகமான தீயில், சீக்கிரமாக சமைத்து எடுத்தாலே சத்தாக இருக்கும்.

★ வெங்காயத்தை ஃப்ரிட்ஜில் வைத்து விட்டுப்பிறகு எடுத்து நறுக்கினால் கண் எரியாது. கண்ணீரும் வராது.

★ மரவள்ளிக்கிழங்கில் நன்கு கருமையான தோல் உள்ள கிழங்கே நல்லது. சிவப்புத் தோல் உள்ளது பித்தத்தை ஏற்படுத்தும்.

★ தோசை சரியாக வராவிட்டால் வெங்காயத்தை நறுக்கிக் கல்லில் தேய்த்து விட்டு பின்னர் தோசை வார்த்தால் சுலபமாக எடுக்கலாம்.

★ கோதுமை மாவை அதிகமாக வாங்கி வைக்காதீர்கள் கெட்டுப் போய் விடும். தேவைப்படும்போது அளவாக வாங்கிக் கொள்ளுங்கள்.

★ கீரையை வாங்கி அதன் வேர்கள் மட்டும் தண்ணீரில் படும்படி ஒரு பாத்திரத்தில் வைத்தால் கீரை வாடாது, வதங்காது இருக்கும்.

★ வெந்தயக்குழம்பு கொதித்து வரும் போது அதில் 2 பொரித்த அப்பளங்களை நொறுக்கிப் போட்டால் நல்ல சுவையாக இருக்கும்.

★ தோசைக்கு மாவு அரைக்கும் போது அதில் ஒரு பிஞ்சு வெண்டிக்காயையும் சேர்த்துப் போட்டு அரைத்தால் தோசை பூவாக வரும்.

பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை IN

பெயர்:.....

முகவரி:.....

.....

தொழில்:.....

கையொப்பம்:.....

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 11-11-2000

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

வழங்குவது 61 புவனா

மோனிக்கா என் மோனிக்கா

மோனிக்காவின் தாயார் மார்சியா நியூயோர்க் விமான நிலையத்தில் மோனிக்காவைச் சந்தித்து ஒரு வாடகைக் காரை ஏற்பாடு செய்து இருவரும் புறப்பட்டனர். பவுலா ஜோன்சுக்கும் கிளின்ரனுக்குமிடையிலான வழக்கில் தானும் ஒரு சாட்சியாக அழைக்கப்படலாம் என்று தாயாரிடம் பட்டும் படாமலும் சொன்னாள்.

மார்சியா தனது மகள் கூறிய வார்த்தைகளைக் கேட்டு முதலில் அதிர்ச்சியுற்றாள். வண்டியில் வேறு எதுவும் பேசமுடியவில்லை. இருவரும் வேறு எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தபோதிலும் இருவரும் பலதரப்பட்ட யோசனைகளில் ஆழ்ந்திருந்தனர்.

லிண்டா ட்ரிப்தான், இந்த வழக்கில் தன்னையும் ஒரு சாட்சியாக மாட்டி விட்டிருக்கிறாள், என்பதில் மோனிக்காவுக்கு எந்த விதமான சந்தேகமும் இல்லை. தான் எவ்வாறு சாட்சிக் கூண்டில் ஏறி வழக்கறிஞர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும் என்று அவளுடைய உள்ளத்தில் பலத்த விவாதங்கள் இடம் பெற்றன. இருப்பினும் தனது தாயாரிடம் இந்த சமாச்சாரம் பற்றி வேறு எந்தவகையிலும் விவாதிக்க அவள் விரும்பவில்லை.

டிசம்பர் 18ம் திகதி இரு நிறுவனங்களுக்கு நேர்முகப்பரீட்சைக்குச் சென்றிருந்தாள். இரண்டாவதாக அவள் சென்றிருந்த நிறுவனம் பொதுமக்கள் தொடர்புடனான ஒரு நிறுவனம். அத்துறையில் அவளுக்கு ஓரளவு நாட்டமிருந்தமையினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் திருப்தியான பதிலளித்தாள். எவ்வாறிருப்பினும் வெள்ளை மாளிகையில் பணிபுரியும் போது தனக்கிருந்த திருப்தி வேறு எந்த நிறுவனத்திலும் கிடைக்கப் போவதில்லை என்று கருதினாள்.

நேர்முகப்பரீட்சை முடிந்ததும் மோனிக்கா வாஷிங்டன் திரும்பினாள். டிசம்பர் 19ம் திகதியன்று பிற்பகல் 3.30 மணி அளவில், பெண்டகனில் அவளுடைய அலுவலக மேசையிலிருந்த தொலைபேசி அழைத்தது. "மோனிக்கா லிவின்ஸ்கி?" என்று ஒரு குரல் கேட்டது. "பவுலா ஜோன்ஸ் வழக்கில் நீங்கள் சாட்சி சொல்வதற்கு இருக்கிறீர்கள். அதற்கான நீதிமன்ற அழைப்பாணை எமது அலுவலகத்தில் இருக்கிறது. இதனை நாங்களே கொண்டு வந்து தரவேண்டுமா? அல்லது நீங்கள் இங்கு வந்து பெற்றுக் கொள்கிறீர்களா?" என்று அக்குரல் கேட்டது.

அதைக் கேட்டதும், இதுபற்றி ஏற்கனவே தனக்கு தெரிந்திருந்த தகவல்தான் என்பதை மோனிக்கா காட்டிக் கொள்ளாமல் ஓரளவு அதிர்ச்சியடைந்திருப்பதாக தொலைபேசியில் பாவனைக் காட்டிக் கொண்டாள். தானாகவே நேரடியாக அழைப்பாணையை அலுவலகத்தில் வந்து பெற்றுக் கொள்வதாகக் கூறினாள்.

அலுவலகத்திலிருந்து நேரடியாக நீதிமன்ற அலுவலகத்துக்குச் சென்று அழைப்பாணையுடன் கூடிய ஆவணங்களைப் பெற்றுக் கொண்டாள். உண்மையில் மோனிக்காவின் உள்ளத்தில் பெரும் கொந்தளிப்பு நிலவியபோதும் வெளியில் எதுவும் காட்டிக் கொள்ளவில்லை.

ஒரு விடுதிக்குச் சென்று தனியாக ஓர் அறையில் புகுந்து சிறிதளவு நேரம் கண்ணீர் சிந்தி அழுதாள். அன்றைய தினம் ஜனாதிபதியுடன் தொடர்பு கொள்ளவோ; தனது சகோதரன் மரணமடைந்தமையினால் துயரத்திலாழ்ந்திருக்கும் பெட்டி கியூரியுடன் தொடர்பு கொண்டு பேசுவதற்கோ அவளால் முடியவில்லை.

வோர்ணன் ஜோர்டன் அவர்களுடன் கலந்தாலோசிக்கலாம் என்று கருதினாள். வீடு செல்லும் வழியிலிருந்த தெருமுனைத் தொலைபேசியில் ஜோர்டனுக்கு அழைப்பெடுத்தாள். ஜோர்டனின் தொடர்பு கிடைத்ததும் அவளுடைய துயரமெல்லாம் ஒன்று திரண்டு விம்மலும் அழுகையுமாக மாறியது.

மோனிக்கா கூறிய வார்த்தைகள் எதுவுமே ஜோர்டனுக்குப் புரியவில்லை. அவளை அன்று மாலை 5.00 மணியளவில் நேரடியாக வந்து பார்க்கும்படி ஜோர்டன் கூறினார்.

பெண்டகன் அலுவலகத்துக்குத் திரும்பி, ஓய்வறைக்குச் சென்று முகம் கைகால்களை அலம்பிக் கொண்டு ஓரளவு அமைதியாக தனது இருக்கையில் வந்தமர்ந்தாள். அங்கும் இருப்புக் கொள்ளவில்லை. தனது அலுவலகத்தில் பொறுப்பாளராகவிருந்த கென் பேக்கன் என்பவரிடம் சென்று தனது உடல் நிலை சரியில்லையென்று கூறி தனதில்லம் செல்ல விடுமுறை கேட்டுக் கொண்டு புறப்பட்டாள்.

மாலை 5 மணியளவில் ஜோர்டனிடம் சென்றாள். அவளுக்கு அவர் ஆறுதலளிப்பதற்குப் பதிலாக எரிந்து விழுந்தார். இதனால் மோனிக்காவின் நிலமை மேலும் துன்பகரமானது. மோனிக்காவுக்குத் தரப்பட்டுள்ள நீதிமன்ற அழைப்பாணையையும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களையும் பார்த்தார். "இதனைச் சாதாரணமாகக் கருதிவிட முடியாது. இந்த ஆவணங்களின்படி ஜனாதிபதி கிளின்ரனுக்கெதிராக பவுலா ஜோன்ஸின் சார்பாக நீ சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருக்கிறாய். ஆகவே இது தொடர்பாக நீயொரு வழக்கறிஞரைப் போய்ப் பார்க்க வேண்டும்!" என்று கூறி வாஷிங்டனிலுள்ள சட்ட நிபுணரான பிராங்க் கார்ட்டர் என்பவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அடுத்தநாள் மோனிக்கா கார்ட்டரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்.

மோனிக்காவுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பாணையில் ஜனாதிபதி கிளின்ரன்-தொப்பியில் அணியும் ஓர் அலங்காரப் பின்னை

தாயாருடன் மோனிக்கா

அவளுக்குப் பரிசாகக் கொடுத்தார் என்ற தகவலும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் பரிசுப் பொருள்பற்றி மோனிக்கா ஒரு சிலருக்கு மட்டுமே சொல்லியிருந்தாள்.

அவர்களுள் லின்டாவும் ஒருத்தி. பவுலா ஜோன்ஸின் வழக்கறிஞர்களுக்கு இந்த விவகாரம் தொடர்பாக லின்டாவைத் தவிர, வேறு எவருமே தகவல் தெரிவித்திருக்க முடியாது என்று மோனிக்கா திட்டவட்டமாகக் கருதினாள்.

ஜோர்டனுடன் உரையாடிக் கொண்டிருந்த போது மோனிக்காவைப் பார்த்து, "ஜனாதிபதி கிளின்ரனுடன் உனக்கு பாலியல் ரீதியான தொடர்புகள் இருந்தனவா, அல்லது அவர் உன்னை அத்தகைய நோக்கத்துடன் அணுகினாரா? என்ற உண்மையை நீ எனக்குச் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று வெளிப்படையாகவே கேட்டார்.

இதைக் கேட்ட மோனிக்கா அதிர்ந்து போனாள்.

இத்தகையதொரு கேள்வியை நீதிமன்றத்தில் வைத்து பவுலா ஜோன்ஸின் வழக்கறிஞர்கள் கேட்கக் கூடும். அவ்வாறான ஒரு கேள்வி தன்னிடம் கேட்கப்பட்டால் எத்தகைய பதிலை நான் அளிக்கப் போகிறேன் என்பதனை அறிவதற்காகவே ஜோர்டன் தன்னிடம் இத்தகைய கேள்வியை கேட்டிருக்கிறார் என்று அவள் கருதினாள். "இல்லை!" என்றே திட்டவட்டமாக மோனிக்கா மறுத்தாள்.

கிளின்ரனுக்கும் தனக்குமிடையிலான நெருக்கமான உறவு பற்றிய முழு விவரங்களையும் அறிந்து கொண்ட ஒருத்தி லின்டா ட்ரிப் மட்டுமே. இதனை நன்றாகத் தெரிந்து கொண்ட பின்னரும் மோனிக்கா லின்டாவுடனான உறவைக் கத்தரித்துக்கொள்ள முடியவில்லை.

லின்டா ட்ரிப்பின் பிறந்தநாள்ன்று அவளுடைய விழா ஏற்பாடுகள் ஆரம்பமாவதற்கு இரு மணித்தியாலயங்களுக்கு முன்னரே மோனிக்கா அவளுடைய இல்லம் சென்றிருந்தாள். மோனிக்காவை விட மற்றும் இருவேறு நபர்களுக்குத்தான் பிறந்த நாள் விழாவுக்கு வரும்படி அழைத்திருப்பதாக லின்டா தெரிவித்திருந்தாள். ஆனால் லின்டாவின் வீட்டில் கொண்டாட்டத்திற்காக செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பார்த்தபோது மோனிக்கா அதிசயப்பட்டாள். குளிர் சாதனப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த உணவுப் பண்டங்களைப் பார்த்தபோது அவற்றுக்காகவே பல நூறு டொலர்கள் செலவாகியிருக்குமென்று கருதினாள்.

புதிய உடைகள் பல அடுக்கி வைக்கப்பட்டிருப்பதையும் கண்டாள். அத்தனையும் சற்று விலை கூடிய ஆடைகளென்பதையும் கணித்துக் கொண்டாள்.

'தனது இருப்பிடத்திலிருந்து பெண்டகன் அலுவலகத்துக்கு பொதுப் போக்குவரத்துச் சாதனங்கள் மூலம் போக்குவரத்துச் செய்யவே பணத்துக்கு திண்டாடும் லின்டா, தன்னுடைய பிறந்தநாள் விழாவுக்கு இத்தனை பொருட்களையும் வாங்கி வைத்திருப்பது எவ்வாறு சாத்தியமாகும்' என்று தனக்குள் வினாக்களை எழுப்பிப் பார்த்தாள். மோனிக்காவுக்கு ஓரளவு லின்டாவின் திடீர் பணப் புழக்கத்துக்கான காரணம் புரிந்துவிட்டது. இருப்பினும் அவளை விட்டு ஒதுங்கிவிட ஏனோ மோனிக்காவால் முடியாதிருந்தது.

மோனிக்காவைப் பொறுத்தவரையில் அவளுடைய எண்ணங்களையும் அந்தரங்களையும் பரிமாறிக் கொள்வதற்கு எவரும் இருக்கவில்லை. தன்னுடன் மனம் விட்டுப் பேசுவதற்கு லின்டா ஒருத்தியே தயாராக இருந்தாள். இதனால் அவளை ஒதுக்கி விட மோனிக்காவால் முடியாதிருந்தது.

பவுலா ஜோன்ஸின் வழக்கில் தனக்கு சாட்சி கூறும்படி நீதிமன்ற ஆணை கிடைத்திருப்பது பற்றி லின்டாவுடன் மோனிக்கா கலந்துரையாடினாள்.

லின்டா, நீதிமன்றத்துக்கு தன்னை அழைத்து சாட்சி சொல்லும்படி கேட்கப்பட்டால் தானறிந்த முழு உண்மைகளையும் கூறுவதைத் தவிர வேறு வழியெதுவும் தனக்குத் தெரியவில்லையென்று மோனிக்காவிடம் கூறினாள். சாட்சிக்கூண்டில் ஏறியவுடன் வேதாகமத்தில் கைவைத்து சத்தியம் செய்தாக வேண்டும். அவ்வாறு சத்தியம் செய்த பின்னர் தன்னால் எந்தப் பொய்யையும் கூற முடியாது; உண்மையையே கூறியாக வேண்டும் என்று லின்டா ட்ரிப் மேலும் சொன்னாள்.

(வரு வாள்)

திடீர் வசதியைப் பெற்ற சிநேகிதி!

இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

தம்பிலுவில் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி	
இவர்தான்	ச. பிரமிளா, பிரதான வீதி, தம்பட்டை-02, தம்பிலுவில்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

பாப்பா முரசு சிறுகதை

உயிரே! உயிரே!

ஒரு கோடி ரூபாய் வேண்டுமா? அல்லது உயிர் வேண்டுமா? என்று உங்களிடம் கேட்டால் நீங்கள் எதை விரும்பிக் கேட்பீர்கள்?

உயிரைத்தான்.

இது யாராலும் மறுக்க முடியாத உண்மை.

உயிர் அத்தனை மேலான விஷயம். உண்மையில், உயிர் மேல் ஆசையில்லாத மனிதன் உலகில் இருக்கவே முடியாது.

ஓர் ஊரில் முதியவர் ஒருவர் இருந்தார்.

எழுபது வயதுக்கு மேல் ஆகிவிட்டது. தளர்ந்த உடல், சுருங்கிய தோல், குழி விழுந்த கண்கள், நரைத்த தலை.

அந்தத் தள்ளாத வயதிலும் முதியவர் அரும்பாடுபட்டார்.

காட்டுக்குச் சென்று விறகு வெட்டிப் பிழைப்பது அவர் தொழில்.

அவருக்கு குழந்தைகள் கிடையாது. மனைவி இறந்து பல ஆண்டுகள் ஆகின்றன.

தனிமையிலேயே அவர் வாழ்ந்தார்.

ஆரம்பத்தில் இனிமையாக இருந்த வாழ்க்கை, வயதான பின் அவருக்கு கசந்தது. ஏனோ உயிரின் மேல் அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது.

ஆனாலும் அவர் வாழ்ந்தார்.

ஒரு நாள்—

வழக்கம் போல் காட்டுக்குச் சென்று விறகுகளை வெட்டியெடுத்துச் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார் முதியவர்.

சுமையோ அதிகம். தள்ளாத வயது. உச்சி வெயில், ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு மேல் அவரால் நடக்க முடியவில்லை.

'தொபீர்' என்று தலையிலிருந்த விறகு கட்டையை கீழே போட்டார்.

மூச்சு வாங்கியது. வியர்வை பொங்கிவழிந்தது.

அப்படியே அங்கிருந்த ஒரு கல்லின் மேல் அமர்ந்தார்.

தலையில் சுருட்டி வைத்திருந்த முண்டாசு துணியை அவிழ்த்து முகத்தை துடைத்தவாறே,

"கடவுளே! இதென்ன நாய்ப் பிழைப்பு. எனக்கு சாவு வந்து விட்டால் நன்றாக இருக்கும்!" என்று வாய் விட்டு யதேச்சையாக சொன்னார்.

அடுத்த வினாடி—

எமன் அவர் முன்னே தோன்றினான்.

பாசக்கயிற்றை சுழற்றியபடி எருமை மாட்டின் மீது கம்பீரமாக அமர்ந்து, தன்னையே கூர்ந்து பார்த்தபடி இருந்த எமனைப் பார்த்ததும் முதியவர் குழப்பமுற்றார்.

அவரை நெருங்கிய எமன், "பெரியவரே! நான் எமன் வந்திருக்கிறேன்!" என்றார்.

முதியவர் திடுக்கிட்டார். எமன் எதற்காக வந்திருக்கிறான் என்பது அவருக்கு புரிந்து போயிற்று.

உடனே அவருக்கு தன் உயிரின் மேல் என்றுமில்லாதவாறு ஆசை வந்துவிட்டது.

அவர் எமனைக் கும்பிட்டபடி, "யப்பா! எமனே! ஏதோ சாவு வந்தால் நன்றாக இருக்குமென்று வாய் தவறிச் சொல்லி விட்டேன். என்னை மன்னித்து விடு. இந்த விறகு கட்டைத் தூக்கி என் தலை மேலே வை. உனக்கு புண்ணியமாய் போகும்!"என்று பரபரத்தார்.

எமன் சிரித்துக் கொண்டே மறைந்தான்.





இந்தக் கரடி தனது இருப்பிடமான கீழேயுள்ள குகைக்குப் போக வழிதெரியாமல் தடுமாறுகிறது. நீங்களாவது அதற்குச் சரியான வழி காட்டக் கூடாதா?

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **11.11.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **367**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 365

பரிசுக்குரியவர்:
ஜோயல் சாள்ஸ் சற்குணசிங்கம்,
இராம கிருஸ்ண வித்தியாலயம், கருவாஞ்சிக்குடி.

பாராட்டுக்குரியவர்கள்:

ந.வடிவுக்கரசி, லோவர் கிரன்லி த.வி. அக்கரப்பத்தனை.	யோகினி திருக்கணேசன், ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை.
பி.அனுஷன், தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை.	செ.ருக்சியா அம்சமன், பதியுதீன் மகளிர் முஸ்லிம் கல்லூரி, கண்டி.
கு.அபிலாசினி, சென்.பிரிட்ஜெட் கொன்வேர்ன்ட், கொழும்பு-07.	எம்.மகுசுளா, வாழைச்சேனை இந்துக் கல்லூரி,மட்டக்களப்பு.
பிரதாப் கிருபாஹரன், நு/புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி,ஹட்டன்.	ஏ.ஏ.அஸ்றினா பானு, மஹ்முட் மகளிர் கல்லூரி, கல்முனை.
ச.ரேவதி, பசறை தமிழ் மகா வித்தியாலயம், பதுளை.	பத்மநாதன் ஷாலினி, தேசிய பாடசாலை,பசறை.

கம்பளிப்பூச்சிகளின் அணிவகுப்பு

லார்வா நிலையில் இருக்கும் கம்பளிப்பூச்சிகள் என்ன செய்யும் தெரியுமா? வேல மரங்கள் இருக்கும் இடங்களைப் பார்க்கும். பார்த்தவுடன் வரிசையாக ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்துச் செல்லும்.

அங்கு போய் பெரிய கூடுகட்டி வாழும். அப்படியே இருந்து கொண்டே அந்த மரத்தின் கிளைகளில் உள்ள இலைகளைச் சாப்பிட்டு முடித்து விடும்.

அந்த மரத்தில் உள்ள இலைகளை எல்லாம் தின்று தீர்த்தவுடன் அந்த மரத்தில் இருந்து இன்னொரு மரத்திற்கு அணிவகுத்துச் செல்லும். இப்படி அணிவகுத்தபடி ஊர்வலமாகச் செல்வது இரவில் தான்.

இந்தக் கம்பளிப்பூச்சிகளுக்கு ஊர்வலம் போகும் கம்பளிப்பூச்சிகள் என்ற ஒரு பெயரும் உண்டு.







நகைச்சுவை வந்தது எப்படி?

நம்மைச் சிரிக்க வைக்கும் திரைப்படங்கள் மற்றும் நாடகங்கள் பார்க்கும்போது நல்ல கொமெடி என்று நாம் சொல்வதுண்டு.

'கொமெடி' (நகைச்சுவை) என்ற வார்த்தை வந்தது எப்படி என்று தெரியுமா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டில் 'கொமோஸ்' என்ற ஒரு பண்டிகை இருந்தது. நெருப்பு மூட்டி அதைச் சுற்றி அமர்ந்து ஆடிப்பாடி இரசிப்பது தான் அப்பண்டிகையின் சிறப்பு. மக்களைச் சிரிக்க வைத்து ஆடிப்பாடுவார் ஒரு பாடகர். இவரை 'கொமோய்டோஸ்' என்று அழைத்தனர்.

இந்த 'கொமோய்டோஸ்' என்ற வார்த்தையில் இருந்துதான் 'கொமெடி' (நகைச்சுவை) உண்டாயிற்று.

செய்து பாருங்கள்

தேவையான பொருட்கள் :

வெற்றுத்தாள் ஒன்று, வெள்ளை நிற பொலித்தீன் தாள் ஒன்று, போஸ்டர் கலர் மற்றும் பிரஷ்.

செய்முறை :

1. வெள்ளைத்தாளை நன்றாகக் கசக்குங்கள், தாளைப் பிரியுங்கள். இப்போது தாளில் கசங்கிய மடிப்புக்கள் நிறையக் காணப்படும்.

2. இந்தத் தாளில் ஆங்காங்கே சில வர்ணங்களைத் தடவுங்கள்.

3. இந்தக் தாளை அப்படியே பொலித்தீன் தாளின் மீது அமுத்துங்கள்.

4. இப்போது பொலித்தீன் தாளின் அழகிய டிசைன்கள் காணப்படுகிற தல்லவா? இந்தத்தாளைக் கொண்டு பரிசுப் பொருட்களை சுற்றிக் கொள்ள அழகாக இருக்கும்.

சீக்கிரம் சீக்கிரம்

20

விறு விறு தொடர்

சுரேகா தவித்தாள்.

"இதோ பாருங்க, நான் உடனடியாக அந்தக் கல்யாண மண்டபத்துக்குப் போகணும். இன்னிக்கு ராத்திரி வேணும்னா நான் உங்க வீட்டுக்கு வர்றேன்!" என்றாள்.

சாலையில் எந்தப் போக்குவரத்தும் இல்லாததால் அதிவேகமாக காரைச் செலுத்தின அந்த இளைஞன் சதீஷ் அவளின் கெஞ்சலை காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

"உங்களைத்தான் சொல்றேன், காரைத் திருப்புங்க, ப்ளீஸ்...."

"ஏய்! ஒரு மணி நேரத்தில நான் கொண்டு போய் டிராப் பண்றேன்ல? ரொம்பதான் பிகு பண்றியே...."

"உங்களுக்கு நிலமை புரியலை!"

"என்ன நிலமை? நீதான் கல்யாணப் பொண்ணா?"

"இல்லை, அந்த கல்யாணப் பொண்ணோட மஞ்சள், குங்குமத்தைக் காப்பாத்தணும். ஒரு கொலை வெறி பிடிச்சவனை போலிசிலை பிடிச்சுக் கொடுக்கணும்."

"இப்ப என்னோட வர்றத்துக்கு உனக்கு இஷ்டமில்லை. அதுக்கு என்னென்னவோ கற்பனை பண்ணிச் சொல்றே..."

"அய்யோ! நான் சொல்றது நிஜம்!"

"நான் இப்போ செம மூடுல இருக்கேன். உன்னைப் பார்த்ததும் உடம்பு இன்னும் சூடாயிடுச்சி. அதையும் இதையும் சொல்லி நழுவப்பார்க்காதே! அன்னிக்கு ஒரு நாள் முழுக்க எங்ககூட இருந்ததுக்கு அஞ்சாயிரம் கொடுத்தோம். இப்ப ஒரு மணி நேரத்துக்கு அந்த அஞ்சாயிரம் தர்றேன். தொண தொணன்னு எதுவும் பேசாம சும்மா இரு. நான் உன்னை இப்போ விடறதா இல்லை!" என்றான் சண்டிப்புடன்.

சுரேகா இதுவே வேற ஒரு சமயமாக இருந்திருந்தால், ஒரு மணிநேரத்திற்கு ஐந்தாயிரமா என்று வாய் பிளந்திருப்பாள். அவன் தோளோடு சாய்ந்து சில்மிஷம் துவங்கியிருப்பாள்.

இப்போது அவன் மேல் எரிச்சல் தான் ஏற்பட்டது.

'ஓடிக் கொண்டிருக்கும் காரில் இருந்து கதவைத் திறந்து கொண்டு குதிக்கவா முடியும்?

என்ன சொல்லியும், கெஞ்சியும் மசியமாட்டேன் என்கிறான்.

தெரியாத்தனமாக இவன் காருக்குள் ஏறி உட்கார்ந்து விட்டேன். இவன் காரை நிறுத்தும் வரை நான் எதுவும் செய்ய முடியாது,

சுரேகா வாயை முடிக்கொண்டு பேசாமலிருந்தாள்.

அதிகாலை மணி ஐந்து.

வானம் சாயமிழக்கத் துவங்கியிருந்தது. பறவைகள் சோம்பல் முறித்தன. அடி பம்புகள் அவசரமாக இயங்கின. நியூஸ் பேப்பர் சுமந்த சைக்கிள்கள் விரைந்தன. பால் பூத்களில் வரிசையாய் நின்றார்கள். ஜாகிங் சூட் அணிந்தவர்கள் எல்லாசாலைகளிலும் வியர்க்க நடந்தார்கள்.

ஒரு தோழி வந்து உறங்கிக் கொண்டிருந்த தீபிகாவின் தோளில் கை வைத்தாள்.

"தீபிகா! எந்திரி!"

கண் விழித்தாள் தீபிகா.

"ஏய்! என்னாச்சு? உன் கண்ணு ஏன் இப்படி சிவந்திருக்கு?"

மௌனமாக இருந்தாள்.

"ராத்திரி பூராத் தூங்கலையா?"

"ம்...."

"சரி, எந்திரி. சீக்கிரம் குளிச்சிட்டு ரெடியாகணும் நீ!"

எழுந்து கொள்ளாமல் அமைதியாக இருந்தாள்.

"எந்திரிம்மா!"

"எனக்கொரு உதவி பண்ணுவியா?"

"என்ன?"

"ஆகாஷ்கிட்டே நான் பேசணும். அவரை இங்கே உடனே வரச்சொல்றியா?"

"இப்பவா?"

"இப்பத்தான் ப்ளீஸ்.... போய் கூட்டிட்டு வா!"

"சரி" என்று சென்றாள் தோழி.

தன் விரல் நகங்களைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்தாள் தீபிகா.

சில நிமிடங்களில் அறைக்குள் வந்தான் ஆகாஷ்.

"குட் மார்னிங் தீபிகா!" என்றான் உற்சாகமாக.

"குட்மார்னிங்!" என்றாள் உற்சாகமில்லாமல்.

"என்ன விஷயம்?"

"கொஞ்சம் கதவை முடிட்டு வாங்க ஆகாஷ்."

ஆகாஷ் அறைக் கதவை முடி விட்டு வந்தான்.

"என்ன சொல்லு?"

"ஆகாஷ், நான் உங்களை எவ்வளவு தூரம் நேசிக்கிறேன்னு உங்களுக்கே நல்லா தெரியுமில்லையா?"

"அதுக்கென்ன இப்போ?"

"இந்தக் கல்யாணம்...."

"இந்தக் கல்யாணம்?"

"வேணாம். ஆகாஷ் நிறுத்திடலாம்."

"ஏய்! என்ன அசட்டுத்தனமாப் பேசறே?"

"என்னதான் பிரமாதமான ஏற்பாடுகளை போலீஸ் செஞ்சாலும் எனக்கு திக்குதிக்குன்னு அடிச்சுக்குது. இந்த நிமிஷம் வரைக்கும் ரஞ்சித்தை போலீஸ் பிடிக்கலைதானே?"

"பிடிச்சுடுவாங்க!"

"இப்போதைக்குப் பிடிக்கலை இல்லையா?"

"அவனால எதுவும் செய்ய முடியாது தீபிகா."

"இது நம்பிக்கை! ஏதாவது செய்துட்டா என்ன பண்றதுங்கறது என் கவலை! எனக்கு நீங்க முக்கியம் ஆகாஷ்! என்னைக் காதலிச்சதுக்காக நீங்க பாதிக்கப்படக் கூடாது."

"அதனால?"

"நிறுத்திடலாம்."

"நிறுத்திட்டு?"

"நீங்க வேற யாரையாவது."

"ச்சீ! பேசாதே! பயம் இருக்க வேண்டியது தான். அதுக்காக என்ன வேணும்னாலும் உளறாதே! தீபிகா, நான் இந்தக் கல்யாணம் நடக்கணுங்கிறதுல நூறு சதவீதம் உறுதியா இருக்கேன். எனக்கு எதுவும் ஆகாது. அந்த ராஸ்கலைப் பிடிச்சிடுவாங்க. எனக்கு நம்பிக்கை இருக்கு. நீயும் அதே நம்பிக்கையோட இரு. சீக்கிரம் ரெடியாமிடு!

மறுபடி ஏதாச்சும் நீ உளறிக்கிட்டே இருப்பே. அதனால நான் போறேன், நானும் ரெடியாகணும்."

ஆகாஷ் அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டிவிட்டுச் சென்றான். கலக்கமான மனதுடன் மெதுவாக எழுந்தாள் தீபிகா.

சதீஷ், வீட்டு வாசலில் காரை நிறுத்தி இறங்கினான்.

சுரேகாவும் இறங்கினாள்.

சதீஷ் முதல் காரியமாக காம்பவுண்ட் கேட்டின் பூட்டைப் பூட்டினான்.

சட்டென்று ஓடி விடவும் முடியாது! 'ச்சே!' சாவி போட்டு வீட்டின் கதவைத் திறந்தான்.

அவனைத் தொடர்வதைத் தவிர வேறு வழியில்லை அவளுக்கு.

வீட்டுக்குள் வந்து கதவை முடியதும் உடனே அவளைக் கட்டியணைத்தான்.

"இதபாருங்க, இப்ப என்னைப் போக விட்டீங்கன்னா கண்டிப்பாக நான் ராத்திரி வர்றேன்."

"பார்த்தாயா மறுபடியும் ஆரம்பிச்சுட்டே....."

அவள் இடுப்பில் கைபோட்டு படுக்கையறைக்கு நடத்திச் சென்றான்.

அங்கே தொலைபேசியைப் பார்த்தாள் சுரேகா.

'நேரில் போய்தான் விபரங்களைச் சொல்ல வேண்டுமா?

ஃபோனில் சொன்னாலும் தகவல் ஒன்று தானே?'

முடிவெடுத்த சுரேகா தன்னை அணைத்து கன்னத்தோடு கன்னம் வைத்து உஷ்ண மூச்சு விட்ட சதீஷை தள்ளிப் பிடித்து, "சரி, நான் இங்க இருந்துட்டுப் போறன். ஒரே ஒரு ஃபோன் பண்ணிக்கிறேன்" என்றாள்.

"அது தாராளமாக பண்ணிக்கோ"

டெலிஃபோனை அவள் பக்கமாக நகர்த்தி வைத்தான்.

"டைரக்ட்ரி வேணும்."

எடுத்துக் கொடுத்தான்.

புரட்டிக் கல்யாண மண்டபத்தின் எண் தேடி தனியாக எழுதிக் கொண்ட பின் டயல் செய்தாள்.

எதிர் முனை எடுக்கப்பட்டு, "ஹலோ!" என்று குரல் வந்தது.

"ஹலோ, என் பேர் சுரேகா. அங்கே உங்க கல்யாணமண்டபத்தில போலீஸ் காரங்க யாராச்சும் இருக்காங்களா?

"ஆமாம்"

"அதில முக்கியமானவங்களைப் பேசச் சொல்லுங்க. நான் ஒரு முக்கியமான தகவல் சொல்லணும்."

"கொஞ்சம் லைன்ல இருங்க."

காத்திருந்தாள். அவன் விரல்கள் அவள் இடுப்பில் நண்டு பிடித்தன.

"ஹலோ. நான் பரத் பேசறேன். யாரு?"

"நீங்க போலீஸ் தானே?"

"ஆமாம் யாரு? சொல்லுங்க."

"கல்யாண மாப்பிள்ளை ஆகாஷை கொலை செய்யப்போற ஒரு பொறுக்கி ராஸ்கலை நீங்க தேடிக்கிட்டிருக்கீங்கதானே?"

"ஆமாம்."

"அவன் இப்போதைக்கு இந்த நிமிஷம் எங்கே இருக்கான்னு எனக்குத் தெரியும். அட்ரஸ் சொல்றேன். குறிச்சுக்கறீங்களா?"

இப்போது சதீஷ் சட்டென்று லைனைக் கட் செய்தான்.

(தொடர்ந்து வரும்)

மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

ஒளிப்பதிவு அனுபவங்கள் 03

திரைப்படங்களில் நடிக, நடிகையரை வைத்து இயக்குநர் அமைக்கும் காட்சிகளை திரையில் வடிவமைப்பவர் ஒளிப்பதிவாளர். தமிழ்த்திரைப் பட ஒளிப்பதிவாளர்களில் குறிப்பிடத்தக்க சிலரில் ஒளிப்பதிவாளர் வி.ராமமூர்த்தியும் ஒருவர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடித்த 23 படங்களை ஒளிப்பதிவு செய்திருக்கிறார் இவர்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி என 5 மொழிகளில்-1951 முதல் 1991 வரை 40 வருடங்களில் - 96 படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். 76 வயதான ராமமூர்த்தியின் திரையுலக அனுபவங்களைத் தொகுத்துத்தருகிறார் எஸ்.விஜயன்.

'மாட்டுக்கார வேலன்' படப்பிடிப்பு வைகை அணையில் நடந்தபோது, அந்தப் பகுதியில் நடைபெறும் முதல் எம்.ஜி. ஆர்., படஷூட்டிங் என்பதாலோ என்னவோ மிகப் பெரிய அளவில் இரசிகர்கள் கூட்டம் திரண்டு விட்டது. கேமராவை எந்தப் பக்கம் வைத்தாலும் மனித தலைகளே தென்பட்டன. படப்பிடிப்பை நடத்த முடியாத நிலை ஏற்படுமோ என்று பயந்து போனோம்.

உதவிக்கு போலிஸ் வந்திருந்தாலும் அவர்களைப் பயன்படுத்த எம்.ஜி.ஆர். இடம் கொடுக்கவில்லை. கேமராவின் பார்வையில் நின்றிருக்கும் இரசிகர்களை எந்த இடத்திலிருந்து விலகி இருக்கச் சொல்ல வேண்டுமோ, அந்தப் பகுதியை நோக்கி எம்.ஜி.ஆர்., இப்படியும் அப்படியுமாக கைகளை விரித்து அசைப்பார்.

அடுத்த ஒரு சில நொடிகளில் அந்த இடத்திலிருந்து கூட்டம் காணாமல் போகும். கேமரா இடம், கோணம் மாறும் போதெல்லாம் எம்.ஜி.ஆர்., சைகை செய்தே கூட்டத்தை இடம் பெயரச்செய்தார். ஆனால், நாங்கள் திட்டமிட்ட நேரத்திற்குள் படப்பிடிப்பை நடத்தி முடித்தோம்.

'ஆயிரத்தில் ஒருவன்' படத்திற்காக கோவா மாநிலம் கார்வாரில் 45 நாட்கள் தங்கி படப்பிடிப்பு நடத்தினோம். அவுட்டோரில் அதிகபட்சமாக அத்தனை நாட்கள் தங்கி படமாக்கப்பட்ட முதல் எம்.ஜி. ஆர். படம் அதுதான்னென்று நினைக்கிறேன்.

இங்கே மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத தீவுகளில் பாறைகள் சூழ்ந்த பகுதிகளில் படப்பிடிப்பு நடத்தியதால் பிரச்சனை ஏதுமில்லை.

ஆனால், 'சங்கே முழங்கு' படத்திற்கு நேர்மாறான அனுபவம் கிடைத்தது. பெங்களூர் லால்பாக்கில் எம்.ஜி.ஆரோடு, லட்சுமி ஆடிப்பாடும் ஒரு காட்சியை படமாக்க முயன்றோம். கட்டுப்படுத்த முடியாத அளவில் கூட்டம் பெருகிவிட்டது. பிறமொழிகள் பேசும் சுற்றுலாப் பயணிகளுக்கு படப்பிடிப்பு இடையூறாக இருக்கக்கூடாதென்று கருதிய எம்.ஜி.ஆர்., 'எடுத்த வரைக்கும் போதும்' என்று கூறியதால் வேறு இடத்திற்கு போய் விட்டோம்.

ஒகேனக்கலில் 'அடிமைப்பெண்' படப்பிடிப்பு நடந்த போது 40 ஆயிரம் ரசிகர்கள் திரண்டு விட்டனர். அங்கு 'மாட்டுக்கார வேலன்' உயம் கை கொடுத்தது. 'நின்றால் பொதுக்கூட்டம் நடந்தால் ஊர்வலம்' என்பார்கள் அரசியல் வட்டாரத்தில்; அது நான் பார்த்தவரையில எம்.ஜி.ஆருக்கு மட்டுமே பொருந்தக்கூடிய வார்த்தைகள்.

'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் பிரபலமான ஒரு பாடல், 'ஓடும் மேகங்களே ஒரு சொல் கேளீரோ?' இந்த பாடலில் மேகங்கள் நகர்ந்து செல்வது போல் படமாக்க வேண்டும் என்று எம்.ஜி.ஆர்., விரும்பினார். அதற்காக காத்திருக்கவும் செய்தார். ஆனால் மேகங்கள் வருவதாகவே தெரியவில்லை. அதனால் வேறொரு இடத்தில் படமாக்கி கார்வாரில் படமாக்கிய தோடு இணைத்து விட்டோம். என்றாலும், எம்.ஜி.ஆருக்கு அதில் திருப்தி இல்லை தான்.

கார்வாரில் நடந்த பெரும் பகுதி படப்பிடிப்பை நடத்தி இயக்கியது எம்.ஜி.ஆரே, 'அடிமைப்பெண்' படத்தின் ஆரம்ப காட்சிகளில் அடிமையாக, கூனல் விழுந்தவராக வரும் எம்.ஜி.ஆர்., முன்றரை அடி உயரச்சிறைக்கள் இருப்பார். அந்த அறைக்குள் குனிந்து நடித்து சிரமப்பட்டார். காற்று இல்லாத அந்த அறைக்குள் புழுக்கமாக இருக்கும். சாக்குத் துணியால் ஆடை அணிந்திருப்பார் என்பதால் உடலெல்லாம் எரியும். படப்பிடிப்பு நடக்கும்போது லைட்டிங் ஒளி பட்டாலும் உடலில் எரிச்சலாக இருக்கும். அதையெல்லாம் சகித்துக் கொண்டு நடித்தார் எம்.ஜி.ஆர்.

படப்பிடிப்பிற்காக என்ன செலவு ஏற்பட்டாலும் அதை எம்.ஜி.ஆர்., பொருட்படுத்த மாட்டார். 'கர்ணன்' படத்திற்காக ஜெய்ப்பூரில் குடி தண்ணீருக்கு கஷ்டப்பட்டோம். அன்றைய நிலை அப்படி.

அந்த துன்பம் எங்களுக்கு நேரக் கூடாதென்பதற்காக 'அடி மைப்பெண்' படப்பிடிப்பு பாலை வனப் பகுதியில் நடந்த போது குடிப்பதற்கு தண்ணீர் கிடைப்பது அரிதென்று, கோகோ கோலா பாட்டில்களை லாரி நிறைய கொண்டு வந்து நிறுத்தி விட்டார்.

'அடிமைப்பெண்' படத்தில் எம்.ஜி.ஆர்.

—எஸ். விஜயன்—

அதெல்லாம் பட்ஜெட்டுக்குள் அடங்காத விஷயம் என்று தெரிந்தாலும் எம்.ஜி.ஆர்., அதைப் பொருட்படுத்த வில்லை. எம்.ஜி.ஆர்., சொந்தப் படமெடுக்கிறார் என்றாலே இது தான் பட்ஜெட் என்று நிர்ணயம் செய்யவே முடியாது.

ஜெய்ப்பூர் அரண்மனைக்குள் கிரேன் எடுத்துச் சென்று படப்பிடிப்பு நடத்த வேண்டும். அதற்கு சுற்றுப்புற சுவர் தடையாக இருந்தது. அதனால் உரிய அனுமதி வாங்கி சுவரை இடித்து கிரேனை உள்ளே எடுத்துச் சென்று படப்பிடிப்பு நடத்தி வெளியே வந்த பின் சுவரை பழையபடி கட்டிக் கொடுக்கச் செய்தார். எம்.ஜி.ஆர். 'காம்ப்ரமைஸ்' என்ற ஒரு வார்த்தை திரையுலகில் செல்லுப்படியாகதென்றால் அது எம்.ஜி.ஆரிடத்தில்...

'அடிமைப்பெண்' படத்தின் கிளைமாக்ஸ் சிங்கத்தோடு எம்.ஜி.ஆர்., சண்டை போடும் காட்சி மட்டும் ஒரு மாதம் படமாக்கப்பட்டதாகும். சத்யாஸ் டூடியோ வளாகத்தில் திறந்த வெளியில் அமைக்கப்பட்ட அரங்கில் அந்த காட்சி படமாக்கப்பட்டது.

[அடுத்துவாரமும் வரும்]

ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 27

கலைவாணருடன் பயணம்

இரா.பத்மநாதன்

"கலைவாணர் மது அருந்துவாரா?" என்று கடந்த வாரம் எழுதப்பட்ட கட்டுரைக்குத் தலைப்பிட்டிருந்தோம். அதனைப் பார்த்த வாசகர்கள் பலர்-பெரும்பாலான எனது நண்பர்கள்-தொலைபேசியில் அழைத்து என்னைத் திட்டித்தீர்த்தார்கள்.

திரைப்படங்களிலும் மேடைகளிலும் கலைவாணர் ஓரங்க நாடகங்களின் மூலம் மது விலக்குப் பிரச்சாரம் செய்து வந்தவர். அப்படிப்பட்டவர் மது அருந்துவார் என்ற ரீதியில் நான் கட்டுரை எழுதியமைக்காக என்னைத் திட்டித்தீர்த்திருந்தனர். போதை ஏற்றுவதற்காக கலைவாணர் மது அருந்துவதில்லை. 'இரவினில் ஆட்டமும் பகலினில் தூக்கமும்' என்பதுபோல் உடலையும் மூளையையும் வருத்தி மற்றவர்களைக் களிப்பூட்டும் நிலையில் உள்ள அவர் போன்ற கலைஞர்கள், நரம்புத்தளர்ச்சியால் பாதிப்புறுகிறார்கள். இவர்களுடையகளைப்பைத் தீர்த்து இவர்களை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்திருப்இதற்கு 'டச்சுவேஜ்' அவசியம் தேவைப்படுகிறது.

கலைவாணரின் ஓரங்க நாடகமொன்றில் மதுவிலக்குப் பிரசாரகராக கலைவாணர் தோன்றுகிறார். தமிழ் நாட்டில் பல பாகங்களிலுமுள்ள மேடைகளில் இந்நாடகம் அரங்கேறியிருக்கிறது. தவிர ஒரு திரைப்படத்திலும் இடம் பெற்றிருக்கிறது.

தமிழ் நாட்டில் காமராஜர் ஆட்சிக் காலத்தில் மதுவிலக்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. மகாத்மா காந்தி அடிகளின் பிறந்த நாள் தினமான ஒக்டோபர் மாதம் 2ம் திகதி முதல் மதுவிலக்குத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனை அடிப்படையாகக் கொண்டு மதுரம் அம்மையாருடன் இணைந்து

"நாட்டுக்குச் சேவை செய்ய
நாகரீகக் கோமாளி வந்தானய்யா!
ஆட்டமாடிப் பாட்டுப்பாடி
அழகான ஜதையோடு வந்தானய்யா!

என்று இந்த நாடகத்தின் தொடக்கத்தில் கலைவாணர் பாடுவார் இந்நாடகத்தில் இடம் பெற்ற மற்றுமொரு பாடல்.....

"மனுசனாகிப் போனேன்-நான்
-இப்போ
மனிசனாகிப் போனேன்
ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி
வருவதற்கு முன்னே
என் கண்ணுக்குன்னை
இரண்டாளாகத் தெரிந்த பெண்ணே....!"

இவ்வாறு ஆரம்பமாகும் கலைவாணரின் பாடலில் நகைச்சுவை ததும்ப மதுவினால் ஏற்படும் தீய விளைவுகளையெல்லாம் எடுத்துக் கூறுவார்.

இவ்வாறு பாடும் கலைவாணர் இடையில் மற்றுமொரு பாடல் வரியைத் தொடங்குவார். அதில்.....

"குடிச்சுப் பழகணும் நன்றாக
குடிச்சுப் பழகணும்...."

என்று கலைவாணர் பாடியதும் இந்தப் பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த அனைவரும் திகைத்துப் போவார்கள். அப்போது மதுரம் அம்மையார் "என்னங்க இப்பத்தானே குடிக்கக் கூடாது என்று கூறி, மதுவால் வரும் தீங்குகளையெல்லாம் எடுத்துச் சொன்னீங்க இப்போ மறுபடியும் குடிச்சுப் பழகணும் என்று சொல்றீங்களே.... என்று கேட்பார்.

அதற்குக் கலைவாணர்.

"ஆமா குடிச்சுப்பழகணும், ஆமா குடிச்சுப்பழகணும், காலையிலெழுந்தவுடன் கண்டிப்பாக நீராகாரம் குடிச்சுப்பழகணும்....." என்று பாடுவார். சபையோர்கள் இதனைக் கேட்டு மகிழ்ச்சியாரவாரம் செய்வார்கள்.

கடுமையாக உழைக்கும் தொழிலாளர்களும் தங்களுடைய களைப்பையும் அசதியையும் போக்கடிப்பதற்கு மது பானத்தை மருந்து போல சிறிதளவு பாவிப்பதில் குற்றமில்லை.

மருந்தாக நினைத்து மதுபானத்தை ஆரம்பத்தில் அளவோடு குடிப்பவர்கள், படிப்படியாக குடிக்கும் அளவினை அதிகரித்து, இறுதியில் மது இல்லாமல் வாழ முடியாத நிலைக்குத்தள்ளப்பட்டு விடுகிறார்கள். மதுவை அவர்கள் குடித்ததுபோக, மது அவர்களையே குடிக்க ஆரம்பித்து விடுகிறது.



இந்தப் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள பல்லாயிரக் கணக்கானோரை நாம் காண்கிறோம்.

மதுவைச் சிறிதளவாவது பாவிக்காதவர்களை இன்று நாம் பார்க்க முடியாது. 'அளவுக்கு மீறினால் அமுத மும் நஞ்சு' என்ற முதுமொழிக்கு ஏற்ப, மதுவை மருந்தாக-அளவோடு பாவிப்பதில் தப்பில்லை. இதே கருத்துப்பட பல அறிவுரைகளை அன்று காலையில் தலவாக்கலை வாடி வீட்டில் வைத்து கலைவாணர் அவர்கள் எங்களிடம் கூறினார்.

மேசையில் நான்கு பியர் போத்தல்கள் வைக்கப்பட்டிருந்தன. போத்தலிலுள்ள பியரை ஏனைய பானங்களைப் போல் கிளாசில் ஊற்ற முடியாது. அதற்கென்று உள்ள முறையில், போத்தல்களை கொண்டு வைத்த சிப்பந்தி, ஒவ்வொரு போத்தலையும் அதன் முடி யைக் கழற்றி பத்திரமாக கிளாசில் ஊற்றினார். இரண்டு கிளாஸ்களில் ஊற்றி கலைவாணரின் எதிரில் ஒன்றையும் திரு. இராசரெத்தினம் அவர்கள் முன் ஒன்றை யும் நகர்த்தினார் சிப்பந்தி. அடுத்து சிப் பந்தி எனக்காக திறக்க முயற்சித்தபோது 'எனக்கு இந்தப் பழக்கம் இல்லை, என்று அம்முவரிடம் கூறினேன். அந்தப் போத்தலில் முடி கழற்றப்பட்டு கிளாசில் அரைவாசிக்குச் சற்றுக் குறைவாக பியர் ஊற்றப்படும் போது, மதுரம் அம்மையார் "போதும்" என்ற சைகை காட்டினார். தொடர்ந்து முவரும் பருகினார்கள்.

"தம்பி அம்மா (மதுரம் அம்மையார் கலைவாணரை 'அம்மா' என்று தான் அழைப்பார்) சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள்தானே. பீர்.... தானே.... ஒன்றுமே ஆகாது. கொஞ்சமாகச் சாப்பிடுங்கள்... எதுவுமே ஆகாது", என்று மதுரம் அம்மையார் என்னைப்பார்த்துச் சொன்னார். நான் மறுத்துவிட்டேன். இதனை நான் பெருமையாகக் கூறவில்லை. "எந்த மதுபானத்தையும் நான் பாவிப்பதில்லை என்று பள்ளியில் படிக்கும் போதே நான் சத்தியம் செய்திருக்கிறேன்!" என்று அவர்களிடம் கூறி ஒதுங்கிக்கொண்டேன்.

மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கும்போது, அங்கு ஆசிரியராக இருந்த திரு.ஆர்.என். சேதுகாவலர் அவர்களும் அரசாங்க உயர் அதிகாரியாகவிருந்த திரு. காசிநாதர் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. பிரின்ஸ் காசிநாதர் அவர்களின் தந்தையார் அவர்களும் மாணவர்களாகிய எங்களிடம் சமயபாடநேரத்தில் வந்து மதுபானத்தால் ஏற்படும் தீமைகளைப்பற்றி பல கதைகளைக் கூறினார்கள். மதுபானத்தைப் பாவிப்பதில்லை என்று எங்களுக்கு அறிவுறுத்தியதுடன் வேதாகம நூலின் மீது கைவைத்து சத்தியமும் செய்யும் படியும் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொண்டார்கள். அப்போது அவ்விரு பெரியார்களிடமும் நான் எனது எட்டாவது வயதில் செய்து கொடுத்த சத்தியத்தை இன்றுவரை கடைப்பிடித்து வருகிறேன்.

என் குடும்பத்திலும் மதுப்பழக்கம் உள்ளவர்கள் இருந்துள்ளனர். அப்பழக்கத்தால் எனது இளமைக்காலத்தில், எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட துயரமான சம்பவங்கள், நான் செய்து கொண்ட சத்தியத்திலிருந்து மீறிவிடாமல் பாதுகாத்து வருகிறது என்பதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.

மத்திய மலையகத்தில் வளைந்து நெழிந்து சென்ற பாதையின் ஊடாக நாங்கள் பயணம் செய்த வண்டி நுவரெலியா நகரை அண்மித்துக்கொண்டிருந்தபோது, சைக்கிளில் சென்ற ஒருவர் தற்செயலாக எமது வண்டிக்குள் இருந்த கலைவாணரையும் மதுரம் அம்மையாரையும் கண்டுவிட்டார்.....

"கிருஷ்ண கட்டிய" என்று உற்சாகமாகக் கத்தினார். அத்துடன் மட்டுமல்லாமல் தனது சைக்கிள் வண்டியில் ஏறிக்கொண்டு கனவேகமாக எங்களுடைய வண்டிக்கு முன்புறமாக, "கிருஷ்ண கட் டிய எனவா" என்று பலத்தசத்தமாகக் கத்திக் கொண்டே போனார். அவர் கொடுத்த விளம்பரத்தினால் வீதியின் ஒரு மருங்கிலும் பெரும் தொகையான மக்கள் வரிசையாக நின்று தங்கள் கைகளை அசைத்து மகிழ்ச்சியான வரவேற்பழித்தனர். சில இடங்களில் மக்கள் கூட்டம் அதிகமாக நின்ற இடங்களில் தமிழ் தோட்டத் தொழி லாளர்கள் நின்று கைகளை அசைத்ததைக் கண்ட கலைவாணர், வண்டியை ஓர் ஒதுக்குப் புறமாக நிறுத்தும்படி இராசரெத்தினம் அவர்களைக் கேட்டுக் கொண்டார். வண்டி நின்றதும் வண்டியைச் சூழ்ந்து கொண்டு நூற்றுக் கணக்கில் மக்கள் குழுமினர். வண்டிக்குள் இருந்த வண்ணமே கலைவானரும் மதுரமும் அவர்களும் ஒரு சில வார்த்தைகளை பேசினார்கள். வெளியே இறங்கி வந்து தங்களுடன் பேசும்படி கோரினார்கள் மக்கள். இந்த வேளையில் வண்டிக்குள் கையை விட்ட ஒருவர் கலைவாணரின் கையை இறுக்கமாகப்பிடித்துக் கொண்டார். அவர் கள் கேட்டுக்கொண்டது போல் வண்டியை விட்டு இறங்கி தொழிலாளர்களுடன் உரையாட கலைவாணர் விரும்பினார். எனினும் நான் தடுத்து விட்டேன். இரசிகர்களின் ரசனை கட்டுக்கு மீறிவிடும் என்பதனால் வண்டியை நகர்த்துமாறு இராஜரெத்தினம் அவர்களிடம் கூறினேன். அவர்களை விட்டு பிரிய முடியாமல் கைகளை அசைத்தவண்ணம் இருவரும் மக்களிடம் இருந்து பிரியவேண்டியதாயிற்று வேகமாக நுவரெலியா நகரைச் சென்றடைந்தோம். நுவரெலியா நகரின் பிரதான வீதியில் உள்ள ஒரு கடையில் இறங்கி சில பொருட்களை வாங்கிக்கொண்டு எமது பயணம் பதுளை நகரை நோக்கி ஆரம்பமானது.

அன்று மாலையே பதுளை நகரை வந்தடைந்தோம். திரு.சான்சி இராசரெத்தினம் அவர்களுடைய இல்லத்தில் திரு.சாம் தம்பிமுத்து, கலைஞர் குமார் மற்றும் எஸ்.எம்.கோபாலரெத்தினம் (மட்டக்களப்பு 'தினக்கதி'ரின் ஆசியராகவுள்ளவர்) ஆகியோர் காத்திருந்தனர். அவர்களுடைய முகங்களில் கலவரம் படர்ந்திருந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது.

சைவ பரிபாலன சபையைச் சேர்ந்த சிலர், நாங்கள் ஏற்பாடு செய் திருந்த நாடகத்திற்கு "கலைவாணர் வரமாட்டார்," என்று பிரசாரம் செய்திருந்தனர். இதனால் பல்வேறு ஊர்களிலும் தோட்டங்களிலும் விற்பனைக்காகக் கொடுக்கப்பட்டிருந்த நாடக நுழைவுச் சீட்டுக்களை விற்பனை செய்யாமல் திரும்பிக் கொடுத்துவிட்டார்கள், என்று தகவல்கள் கூறப்பட்டன. கலைவாணர் வரமாட்டார் என்று பிரச்சாரம் வலுப் பெற்று இருந்தமையால் எமது நண்பர்கள் உண்மையில் பயந்து விட்டார்கள். இதுதான் அவர்களுடைய கலவரத்துக்குக் காரணம். கலைவாணருடன் நான் வந்து சேர்ந்ததும் அவர்களை வாட்டிய வேதனை அகன்று விட்டது.

"பைத்தியக்காரன்" திரைப் படத்தைப் பற்றி கூறியிருந்தேன் அல்லவா? இந்தப் படத்தை கொழும்பில் மருதானையிலுள்ள 'எல்ஃ பின்ஸ்ரன்' திரையரங்கில் திரையிடப்பட்ட முதல் நாள் அன்று முதல் காட்சியைப்பார்த்தவன் நான். தவிர வேறு பல தடவைகளிலும் இப்படத்தைத் திரும்பத்திரும்பப் பார்த்திருக்கிறேன். பொதுவாக சினிமாப் பைத்தியமான நான் கலைவாணர் மீது அதிகமான பற்றுதல் வைத்திருந்தேன் என்பதுதான் பைத்தியகாரனை பல தடவைகள் நான் பார்ப்பதற்குக் காரணம்.

பல தடவைகள் இப்படத்தைப் பார்த்தமையினால் அப்படத்தில் கையாளப்பட்டிருந்த பல நுணுக்கங்களை அவதானித்து வைத்திருந்தேன். கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் நோக்கோடு அப்படத்தைப் பற்றிய சில சம்பவங்களையிட்டு வண்டியில் வைத்தே விவாதித்துக் கொண்டிருந்தேன்.

(இன்னும் வரும்)

திரை உலகில் 07 மேனாநித்

ஆர்.சி.சம்பத்

'மந்திரிகுமாரி'க்கு எம்.ஜி.ஆரை 'ரெகமண்ட்' செய்தார் மு.க.,

கே.சோமு சொல்கிறார்: 'மந்திரிகுமாரியிலும் எப்படியாவது ராமச்சந்திரனை நுழைத்து விட வேண்டும். என்ன செய்வீர்களோ தெரியாது. டி.ஆர். எஸ்.சிடம் சொல்லிவிட்டேன். டைரக்டர் உங்களை சரி சொல்ல வைக்க வேண்டியது உங்கள் கடமை. இது என் அன்புக் கட் டளை,' என்றார் கருணாநிதி. அத்தோடு 'எம்.ஜி.ஆர்., கொஞ்சம் கோபக்காரர். அதையும் நீங்கள் தான் அனுசரித்துப் போக வேண்டும்,' என்று சொல்லி போய்விட்டார்.

'அன்று அங்குள்ள (ஸ்டூடியோ) நிலைமை-யார்யாருக்கோ தினமும் மேக்கப் டெஸ்ட் எடுத்துக் கொண்டிருந்தோம். அன்றைய பிரபல பாடகர் ஏ.டி.சுல்தானும் (கும்பகோணம்) ஒருவர். டங்கனுக்கு என்.என். கண்ணப்பாவை மிகவும் பிடித்தது. எங்களுக்கு உசிதமில்லை என்று சொல்லி ராமச்சந்திரனை ஏற்பாடு செய்ய முயன்றோம். எம்.ஜி.ராமச்சந்திரன் வந்தார். நெற்றி நிறைய திருநீறு; கழுத்தில் ருத்திராட்ச மாலை, வலது கையில் தங்கத் தாயத்து ஒன்று, கருப்புக் கயிற்றில் கட்டப்பட்டிருந்தது. தூய வெண்மையான கதர் ஜிப்பா; கரை வத்ததகதர் வேட்டி.

'மேக்கப் டெஸ்ட்டிற்கு ஸ்டுடியோவிற்கு அழைத்துச் சென்றேன். மேக்கப் போடப்பட்டது. மேக்கப் முடிந்த உடன் அன்றைய மேக்கப் தலைவர் கோடீஸ்வரராவ் (இவர் ஆர்ட் டைரக்டரும் கூட) எடுத்தார் பெரிய தாடியை! ராமச்சந்திரன் முகத்தில் வைக்கப் போனார்.

'இது என்ன ஆண்டவனே,' என்று துள்ளிக் குதித்தார் மேக்கப் ரூமுக்கு வெளியே ராமச்சந்திரன்.

'நான் ஓடி அவரைப் பிடித்தேன். 'நான் சொல்வதைக் கேளுங்கள்,' என்றேன். ஒரு சிறு உதறல். நான் காரைத் தரையில் விழுந்ததுதான் மிச்சம். நொண்டிக் கொண்டே எழுந்தேன். 'கோபக்காரர். நீங்கள்தான் பொறுமையாய் இருந்து காரியத்தை சாதிக்க வேண்டும்,' என்று கருணாநிதி சென்னது நினைவுக்கு வந்தது.

'ஆண்டவனே! ஆண்டவனே! என்று ஓடினேன். (அன்று ராமச்சந்திரன் எல்லாரையும் அப்படித்தான் அழைப்பார். நாங்களும் அவரை அப்படியே அழைத்தோம்) 'என்ன?' என்று முறைத்தார். "கொஞ்சம் நிதானமாக நான் சொல்வதைக் கேளுங்கள். தங்களுக்குத் தாடி ஒட்டுவதில் எங்களுக்கு என்ன அக்கறை இருக்கிறது?" என்றேன். உடனே அவர் கோடீஸ்வரராவ் சொல்கிறார்: எனக்கு 'டபுள் சின்'னாம். (மேவாயில் ஒரு பள்ளம் இருக்கும்) அதை மறைக்கத்தான் தாடி என்கிறாரே? என்றார்.

"அவர் கிடக்கிறார். அவருக்கு தமிழே தெரியாது. தெலுங்கில் ஏதாவது சொல்லி இருப்பார்" என்று சொல்லி டிரஸ் டிபார்ட்மெண்டிலுள்ள நாற்காலியில் அவரை உட்கார வைத்து ஆடைகளுக்கு எழுதிய டிசைன்களைப் புரட்டினேன். அதில் ஒன்று (சிறிய) தாடியுடன் இருந்தது.

"இதைப் பாருங்கள் ஆண்டவனே! இதப் பார்த்துத்தான் மேக்-அப் சீப் கோடீஸ்வரராவ் வொல்லி இருப்பார்" என்றேன். வாங்கிப் பார்த்தார். "இந்த தலைஅணிக்கும், உடைகளுக்கும் சிறிய தாடி பொருத்தம்தான். ஆனால் அவர் வால்மீகி தாடியை அல்லவோ எடுத்து வருகிறார்" என்றார். இல்லை வாருங்கள் என்று அழைத்து வந்து, அந்த ஸ்கெட்சையும் கோடீஸ்வரராவிடம் காண்பித்து "அவ்வளவு பெரிய தாடி போதும். (மேவாயிலுள்ள) தாடையிலுள்ள பள்ளம் தெரியாதவாறு மறைக்க வேண்டும்" என்றேன். அவருக்கு மகிழ்ச்சி.

'எனக்கு நேரமாகி விட்டது செட்டிற்கு அழைத்துச் செல்ல. எம்.என். நம்பியார்வேடம் முடிந்து, முரட்டுக் குரலில் பேசி வெற்றி பெற்று விட்டார். அடுத்து எம்.ஜி.ராமச்சந்திரன் தான் போக வேண்டும். கருணாநிதி விருப்பத்தை நிறைவேற்றியே தீருவது என்று அவரை அழைத்துக் கொண்டு செட்டிற்குள் நுழைந்தேன். வென்றேன். டி.ஆர்.எஸ்., டங்கன் எல்லோருக்குமே மகாதிருப்தி.'

கே.பாலசந்தரின் 'புதுப்புது அர்த்தங்கள்' படம் 1989ம் ஆண்டு வெளியாயிற்று. அப்போது கருணாநிதி முதலமைச்சராக இருந்தார். படத்தின் நூறாவது நாள் விழாவை சென்னை நாரத கான சபாவில் நடத்தினார் பாலசந்தர். அதில் கலந்து கொண்டு சிறப்பு உரை ஆற்றிய கருணாநிதி: "பாலசந்தருக்கும் எனக்கும் நெடு நாளைய நட்பு. எனது 'பராசக்தி' படத்தின் வசனச் செறிவை எல்லாம் பத்திரிகைகளும் பாராட்டி எழுதியபோது அந்நாளைய 'தினமணிக்கதிர்' என் வசனத்தைத் தாக்கிய எழுதியது. 'கூலாங்கற்களை தகர டப்பாவில் போட்டு ஆட்டுவது போல் இருக்கிறது எனது வசனம்,' என்று எழுதியது. அன்று கூழாங்கற்கள் என்று இகழப்பட்ட வசனம்தான் இன்று வைரக்கற்களாக பாராட்டிப் பேசப்படுகிறது.

'மந்திரிக்குமாரி' படத்தில் எம்.ஜி.ஆர். தான் நடிக்க வேண்டும் என்று நான் சொன்னபோது, மாடர்ன் தியேட்டர்ஸ்காரர்கள் மறுத்தார்கள். அவர்கள் சொன்ன காரணம்: எம்.ஜி.ஆர்., தாடையிலே ஒரு கோடு இருக்கிறது. மடிப்பு இருக்கிறது. குளோசப் 'ஷாட்டு'களில் அது தெரிந்தால் அழகாக இருக்காது என்றார்கள். அதற்காகவே 'மந்திரிக்குமாரி' படத்தில் எம்.ஜி.ஆர். நடித்த வீரமோகன் பாத்திரத் திற்கு தாடையை மறைக்கும் வகையில் சிறு தாடி வைக்கப்பட்டது. பின்னாளில் அந்தத் தாடை மடிப்பே அவருக்கு ஒரு அழகைத் தந்தது. இரசிகர்களைப் பெற்றுத் தந்தது,' என்றார்.

இதே விழாவில் பாலச்சந்தர் பேசும் போது, 'நான் நன்னிலத்தில் நான்காம் வகுப்பு படிக்கும் போது, கருணாநிதி திருவாரூரில் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். அப்போதே எங்கள் பள்ளிக் கூடத்தில், 'திருவாரூரில் கருணாநிதி என்று ஒரு மாணவர் இருக்கிறாராம். அவர் அங்கு எல்லா மாணவர்களுக்கும் தலைவராக இருக்கிறாராம். என்று பேசிக் கொள்வார்கள். நான் படித்த நன்னிலத்திற்கும், அவர் படித்த திருவாரூருக்கும் இடைப்பட்ட தூரம் ஆறு மைல்தான். கருணாநிதியின் 'திரும்பிப் பார்' படத்தைப் பல முறைபார்த்திருக்கிறேன். அதன் வசனத்துக்காகவே! சிவாஜி பேசுவதைக் கேட்டு மனப்பாடம் செய்து கொண்டு, வீட்டிலே போய் அதுபோலவே பேசி நடிப்பேன். வீட்டில் உள்ளவர்கள் எல்லாரும் 'இவன் இவ்வளவு ஜோராக தமிழ் பேசுகிறானே, எப்படி?' என்று அதிசயிப்பார்கள். அந்த அளவிற்கு நான் கருணாநிதியின் ரசிகன். அவரது முனை, நிர்வாகத் திறன், எழுத்தாற்றல்- இதனைக் கண்டு நான் பயந்திருக்கிறேன். உலகில் வேறு எவனுக்கும் யாருக்கும் நான் பயந்தது கிடையாது,' என்றார்.

'மந்திரிகுமாரி' படத்திற்கு முன்னதாக 'மருதநாட்டு இளவரசி' படம் திரைக்கு வந்தது.

(வருவார்)

செத்தும் கொடை கொடுத்தவர்

வீணை வேந்தன்

"மகன்! மகன்... அம்மா எங்கடி? மணி பதினொன்றாச்சு இன்னமும் வெளிக்கிட இல்ல."

"இவ்வளவு நேரமும் இங்கதான் நிண்டவ ஐயா. அதுக்குள்ள எங்க போனாவெண்டு தெரியல்ல!"

"எங்கயாவது வெளிக்கிட்டுப் போற நேரம் பார்த்துத்தான் உங்கம்மாவுக்கு வெளியில வேலை இருக்கும். சரி சரி நீயாவது போய் குளிச்சிற்று வெளிக்கிடு!"

"எங்க போறதுக்கு அவசரப்படுறீங்க ஐயா?"

"மகன் உங்கட மாமா வரதன்ர முப்பத்தொண்டுக்குத்தான். பதினொரு மணிக்கே போகவேணும் எண்டு உன்ர அம்மாட்ட இரண்டு நாளைக்கு முன்னமே சொன்னனான். இவ்வளவு நாளும் சும்மா இருந்திற்று இப்பதான் அவளுக்கு வெளிவேலை வந்திற்று. எப்பப்பார் இப்படித்தான். கொஞ்சம் முந்திப்போவம் எண்டால். எங்க..... சரியா இலைபோடயிக்கதான் நாங்க போவம். ஏதோ சாப்பாட்டுக்கு மட்டும் போன மாதிரி, போனமா, சாப்பிட்டமா, வந்தமா எண்ட மாதிரித்தான் இருக்கப் போகுது!"

"ஐயா! யாரைய்யா இந்தப் புதிய மாமா?"

"இவரை உனக்குத் தெரியாது மகன். அவர் எப்பவோ செத்திற்றார் எண்டுதான் நாங்க இருந்தம். ஆனால் அவர் கிட்டடியில் தான் செத்திருக்கிறார் என்று இப்பதான் தெரிஞ்சிது.

இவர் உன்ர அம்மாட அண்ணன். தொன்னூற்றியோராம் ஆண்டு-அப்ப உனக்கு இரண்டு வயது. அப்ப நடந்த கலவரத்தின் போது எல்லோருமே சிதறுண்டு போயிற்றம். கையில கிடைச்ச சாமான்களோட வீடுவாசல விட்டு இரவோட இரவாக ஊரைவிட்டு கிளம்பினம். நடந்தே நிலாவெளிக்குப்போய், அங்கிருந்து திரியாய், புல்மோட்டை அப்படியே யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தோம். அங்கயும் எங்களால இருக்கமுடியாமல் போயிற்று மகன். எல்லாருக்கும் இப்படித்தான் அனுபவமோ, இல்ல எங்களுக்கு மட்டும்தான் இந்த அனுபவமோ, இல்ல நாங்க போய்ச் சேர்ந்த பகுதி அப்படியோ தெரியாது. தண்ணீர்குடிக்கிறதே கஸ்ரமாகப் போச்சு. அது மட்டுமில்ல மகன், எங்களால தங்களுக்குப் பெரிய கஸ்ரமெண்டும் சிலர் சாடைமாடையாகப் பேசத்தொடங்கிற்றாங்க. அந்தவேதனையைத் தாங்க முடியாம, அம்மாட நகை எல்லாவற்றையும் விற்று எடுத்துக் கொண்டு இந்தியாவுக்குப் போயிற்றம். ஆனா உங்க மாமா எங்க போனார் என்ன ஆனார் என்றே எங்களுக்குத் தெரிய இல்ல.

உங்கட மாமா ஒரு காலத்தில இந்த ஊரில கொடிகட்டிப்பறந்த மனுசன். நகரசபைத் தேர்தல்ல, அவரோட போட்டி போட்ட இரண்டு பேரையும் கட்டுக்காக இல்லாமல் செய்தவர். அவர் மிதிச்ச இடத்தில புல்லுச்சாகாது. அவர் எல்லோருக்கும் நன்மை செய்தாரே தவிர ஒருத்தருக்கும் ஒரு கெடுதியும் நினைத்திருக்கமாட்டார்.

இது கோணேசப்பூமி அடிக்கொரு லிங்கம் இருக்கு என்ற நம்பிக்கையில கால்ல செருப்பு அணியாமலே இருந்த மனுசன் கொஞ்சங்கூடச்சாதிபாகுபாடு பார்க்க மாட்டார் எல்லோரையும் அன்பாக 'மக்கள்' என்றுதான் கூப்பிடுவார். சமூக சேவையில அவருக்கு நிகர் அவரேதான். எத்தனையோ ஏழைக் குழந்தைகளின் கல்விக் கண்களைத் திறந்து வைச்ச மனுசன்.

நீ போட்டிருக்கிறியே சங்கிலி, இது உங்கமாமா உன்னைத் தொட்டில்ல போடையுக்க போட்ட சங்கிலி.

நாங்க இந்தியாவில இருந்தபோது நம்ம ஊரில இருந்து வாறவங்களிட்ட எல்லாம் விசாரிச்சுப்பார்த்தம். சிலர் அவர்ர குடும்பத்தை அழிகொண்டு போயிற்று எண்டாங்க. வேறு சிலர் அவர்ற பெடியங்கள் இரண்டு பேரும் இயக்கத்தில சேர்ந்திற்றாங்க எண்டாங்க. இன்னும் சிலர் அவங்க வெளிநாட்டுக்கே போயிற்றாங்க எண்டாங்க. அதன் பிறகு நாங்க யாரிட்டயும் எதையும் கேட்கிறதில்லை என்று முடிவெடுத்திற்றம்.

1999 மார்கழி. நாங்கள் ஊருக்கு திரும்பிவந்தம். உனக்குத்தான் தெரியுமே வெறுந்தரைதான் மிச்சமாக இருந்திது. கையிலை இருந்த காசைக் கொண்டு இந்த வீட்டைக் கட்டினம். அதன் பிறகு உன்ர மாமாவைப்பற்றி விசாரிச்சம். அவர் இந்தப் பிரச்சனைக்கு மத்தியிலும் எங்கும் போகாம இங்கதான் இருந்தாராம். ஆனால் வயதுக்கு வந்த இரண்டு மக்களையும் வெளியே அனுப்பிற்றாராம். இங்க இருந்து நிறையப் பேருக்கு உதவி இருக்கிறார். எத்தனையோ பிடிபட்ட பெடியன்களை இராணுவத்தாருடன்பேசி விடுதலை செய்திருக்கிறாராம். எத்தனையோ அகதிகளுக்கு அரசாங்கத்திடமிருந்து உதவிகள் பெற்றுக் கொடுத்திருந்தாராம். நாங்க இங்க வாறதுக்கு கொஞ்ச நாளைக்கு முன்புதான் அவரும் மனிசியும் எங்கே போனாங்க எண்டு யாருக்கும் தெரியஇல்லையாம்!"

"அது சரி இப்ப எப்படி ஐயா உங்களுக்கு, அவருக்கு முப்பத்தொன்று எண்டு தெரியும்?"

"மகன் இரண்டு நாளைக்கு முன் சின்னக் கடையில அவற்றை மூத்த மகனை எதிர்பாராத விதமாகச் சந்தித்தன். இரண்டு பேரும் திகைச்சுப் போயிற்றம். என்னைக் கண்டதும் சூழலைமறந்து என்னைக் கட்டிப்பிடிச்சு அழத்தொடங்கிற்றான். அவனை தேத்துறதே பெரும் படாப்போச்சு பிறகு சொன்னான்,

"தாங்க கனடாவில செற்றிலாகிற்றாங்களாம். ஆறுமாதத்துக்கு முன்புதான் அவங்கட அப்பாவையும் அம்மாவையும் கனடாவுக்கு எடுப்பிச்சாங்களாம். எங்களைப் பற்றி அவங்க அப்பாட்ட விசாரிச்சபோது, நீங்க இந்தியாவுக்குப் போகயுக்க, உங்கட படகு கவுண்டு அதிலேபோன எல்லாரும் செத்திற்றாங்க என்றும் அதில நீங்களும் செத்ததாக யாரோ சொன்னாங்க என்று சொன்னார்.

கனடாவில அப்பரால இருக்கமுடிய இல்ல. அங்கத்தைய சீதோஷணம் ஒத்துக் கொள்ள இல்ல. சரி ஊருக்கு வாறதுக்கு ஏற்பாடெல்லாம் செய்தாச்சு. ஆனால் திடீரென்று போயிற்றார். இங்க கொண்டு வர முடியல்ல. எல்லாக்காரியங்களையும் அங்கேயே செய்திற்றம்.ஆனால் முப்பத்தொண்டை அவர் வாழ்ந்த வீட்டிலதான் செய்யவேணுமென்று அம்மா பிடிவாதம் பிடிச்சா. சரி எண்டு இரண்டு நாளைக்கு முன்புதான் வந்தம், என்று சொன்னான். அப்பதான் எனக்கும் தெரிய வந்தது!" என்றார்.

"இந்தாங்க பத்திரிகை இதைப்படியுங்க இரண்டு நிமிசத்தில வெளிக்கிடுறன். டேய் நீ போய் குளி!" என்று மகனை அதட்டிவிட்டு, உள்ளே வந்தாள் அவர் மனைவி. அவளுக்குத் தெரியும் தன் கணவனுக்கு பத்திரிகையைக் கண்டால் போதும். நேரம் போறதே தெரியாது என்று.

"எங்கயப்பா போய் தொலைஞ்சனீ!" என்று சினந்தபடி பத்திரிகையை வாங்கிக் கொண்டார்.

"சத்தம்போடாதயுங்கோ, பக்கத்துத் தெருவில பேபியிற்ற ஒரு அட்டியல் வாங்கப் போனனான். எனக்குத் தெரியும் நீங்க கோபத்தோடதான் இருப்பீங்க எண்டு!" அவருடைய பதிலுக்குக் காத்திராமல் உள்ளே சென்றாள்.

பத்திரிகையைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவர், திடீரென்று மகனை அழைத்தார். அந்தப் பத்திரிகையில் 31ம் நாள் அந்தியெட்டி விளம்பரத்தில் உள்ள படத்தை காண்பித்து "இதுதான் உன்ர மாமா!" என்றார்.

இவர்கள் மூவரும் அங்கு சென்றபோது, இலைபோட்டுப் பரிமாறிக் கொண்டிருந்தார்கள்.

"என்ன மாமா நீங்களுமா பிந்திவாறது. ஏன்மாமி நீங்களாவது கொஞ்சம் முந்தி வரக்கூடாதா!" செல்லமாகக் கோபித்துக் கொண்டு அவர்களை உள்ளே அழைத்துச் சென்றான் மூத்தமருமகன்.

"எங்க உன்ற மாமி வெளிக்கிட்டா தானே!" என்று கூறியவர் "பேப்பரில உங்கட அப்பாட படமும் விளம்பரமும் வந்திருக்கே!" என்றார்.

அப்போது தான் அவனுக்கு ஞாபகம் வந்தது. உடனே ஒருவரை அழைத்து மூன்று பத்திரிகை வாங்கிவரும்படி அனுப்பி வைத்தான்.

அனைவரும் பந்தியில் அமர்ந்து, உணவு உண்டுகொண்டிருந்தார்கள்.

பத்திரிகையை வாங்கிப் பார்த்துக் கொண்டு வந்தவன் "ஐயா இந்த வேடிக்கையைப் பார்த்தீங்களா?" என்றான்.

மூத்தமருமகன் பத்திரிகையை வாங்கி அவன் சுட்டிக் காட்டிய செய்தியைப் பார்த்தான் அங்கே.

"திருகோணமலை மாவட்டத்தில் இம்முறை போட்டியிடும் சுயேச்சைக் குழுப் பட்டியலுக்கு, சமூகத்தொண்டரும் முன்னாள் நகரசபை உறுப்பினருமான திரு.வரதராயன் அவர்கள் முதன்மைவேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்."

கனடா மாப்பிள்ளை

இணுவில் உத்திரன்

சிவபாலன் கனடாவில் இருந்து வந்திட்டான் என்றால் சும்மாவா? வீடே அமர்க்களப்பட்டுக் கொண்டு இருந்தது. "பிள்ளை அப்படியே இருக்கிறான்!" என்றாள் சின்னமணி அக்கா. "ஏன் தம்பி கனடாவிலை கோயில் குளம் இருக்குதோ?" என்று கேட்டார் சுப்பையாண்ணை. "தம்பி மற்றதுகளும் கொண்டு வந்தனீரோ?" என்று காதுக்குள் இரகசியமாக கேட்டுவிட்டு நெளிந்து கொண்டு நின்றார் கந்தையாண்ணை.

"அண்ணை மகனுக்கு ஒரு பொம்புளை பாருங்கோ!"

"ஏன் அக்கா உங்கடை அண்ணாரின்ரை மகளைத்தானே செய்யிறதாய் இருந்தீங்கள்!"

"ஓம்! அது முந்தி. அப்படித்தான் நினைச்ச நாங்கள். ஆனால் அது இப்ப தோதுப்பட்டுவராது, ரவுண்பக்கமாய் படிச்ச பெட்டையாய் பாருங்கோ. பெட்டை இங்கிலீசு பேசவேணும். சும்மா கிளிப்பிள்ளை மாதிரி இருக்க வேணும்!"

"அப்ப கொஞ்சம் கஷ்ரம் அக்கா. பச்சை கலரிலை எல்லாம் பொம்பிளை எடுக்கேலாது."

"முதலிக்கு எப்பவும் பகிடிதான்!" என்றாள் சிவாவின் அம்மா பூமணி.

சிவா ஊருக்கு வருவதாகக் கடிதம் போட்டதுமே வீட்டில் தடல்புடலாக பல மாற்றங்கள் ஏற்பட்டன. வீட்டுக்கு பெயின்ட் அடிக்கப்பட்டது. காத்தாடி பொருத்தப்பட்டது. புதிதாக ஒரு பாத்ரூம் கட்டப்பட்டது. அதற்கு "மாபிள் பதிக்கவேணும்" என்று நின்று கொண்டாள் பூமணி. "இதெல்லாம் வீண் செலவப்பா!" என்றார் கனகசபையார். "நீங்கள் சும்மாய் இருங்கோ. அவன் கனடாவிலை எவ்வளவு வசதியோட இருந்தவன். இங்கே வந்து கஷ்டபடுறதே!" "கனடாவென்றால் சும்மாவே பூமணி. இரவு பகல் கண் விழிச்சு குளிருக்கை கஸ்ரப்பட்டுதான் அதுகள் சம்பாதிச்சு இங்கை அனுப்புதுகள். அதை சும்மா சிலவளிக்கிறதே. அந்தக்காசை பக்குவப்பண்ணி அதுகளிட்டையே கொடுத்திட வேணும்!" என்று அடிக்கடி கூறுவார் கனகசபை. இதெல்லாம் பூமணியின் காதில் விழுந்தால் தானே. நேற்றுத்தான் ரவுணுக்கு போய் பஞ்சுமெத்தை கட்டில், ரேபிள் ஃபேன், ஜூஸ் போத்தல்கள் என்று பெரிய ஒரு தொகையே செலவாகி இருந்தது.

ஒருவாறு எல்லாருமே விடைபெற்று சென்ற பின்பு, "தம்பி குடிக்க ஏதாவது அப்பிள் ஜூஸ் கலந்து தாறதே!" என்று பூமணி கேட்டபோது, "உதெல்லாம் வேண்டாம் அம்மா. கொஞ்சம் மோர் இருந்தால் வெங்காயம், மிளகாயிலை வெட்டிப்போட்டு தாணை. இஞ்சை இருக்கிற காலத்திலைதான் ஏதாவது விருப்பமானதை திண்டு குடிக்க வேணும்." என்று கூறியபடி கிணற்றடியை நோக்கி போனான் சிவா! "தம்பி நாங்கள் புதுசாய் பாத்ரூம் எல்லாம் கட்டிப்போட்டம். எல்லாம் உனக்காகத்தான்!" என்று மீண்டும் பூமணி கூறியபோது, "இல்லையம்மா நான் கிணத்தீலைதான் குளிக்கப்போறன். அந்த ஆடுகால் ஒதிய மரத்திலை முதுகு தேச்சு துலாவாலை அள்ளி குளிக்கிற சுகம் வேறை எங்கைதான் வரும்?" என்று கூறியபடியே கிணற்றடிக்கு போய்க் கொண்டு இருந்தான் அவன்.

அன்று மாலையே நண்பர்களைக்காண வாசிகசாலை முன்றலுக்கு போனான் சிவா. சம்பிரதாயத்துக்கு நலம் விசாரித்ததோடுசரி. மற்றும்படி பழைய ஈடுபாட்டோடு எவருமே கதைக்க முன்வரவில்லை. பழைய நட்பு சந்தோசங்களை தேடிவந்த அவனுக்கு, தான் தனிமைப்படுத்தப்பட்டதைப் போன்ற ஓர் உணர்ச்சி தோன்றியது. 'இவர்கள் எல்லாம் ஏன் என்னை ஓர் அன்னியன் மாதிரியே நினைக்க வேணும். ஒரு மனுசன்ரை இயல்புகளை வெறும் வருசங்களாலையோ சூழ்நிலைகளாலையோ மாற்ற முடியுமா? ஒரு வேளை இதற்கு முன்பு வெளிநாட்டிலை இருந்து வந்தவர்கள் எல்லாம் வேசம் போட்டிருந்து இருப்பார்களோ?'

"மச்சான் ரூபன் நான் ஒன்றும் புதுப் பிறவி எடுத்துவரேல்லை. அதே சிவாதான். உங்களோடை சேர்ந்து அடிபட்டு, சாப்பிட்டு, படம் பார்த்து, விசிலடித்து, ரோட்டு ரோமியோக்களாய் அலைந்த அதே சிவாதான். இங்கை தொழில் இல்லை. அதாலை வெளிநாட்டுக்கு உழைக்கப் போனன். அவ்வளவுதான். ஏன்? ஐங்கரன் நீயும் போகலாம். ஜெயா நீயும் போகலாம். இரவு பகலாய் வேலை செய்ய தயாராக இருந்தால் சரி. வேறை எந்தத் தகுதியும் தேவை இல்லை. வீணாக உங்களை நீங்களே தாழ்த்தியோ, என்னை உயர்த்திக் கொண்டோ எங்கடை சினேகிதத்தை கொச்சைப்படுத்திக் கொள்ளாதையுங்கோ. நான் இஞ்சை வந்ததே சந்தோசத்தைத் தேடித்தான். சொந்த மண்ணிலை இருக்கிற சந்தோசம், பெருமை இந்த உலகத்திலை எந்த மூலையிலை இருந்தாலும் வராது. நான் இங்கை நிற்கப் போகிற இந்த கொஞ்ச நாளும் உங்களோடை பழைய சினேகிதனாகத்தான் பழக விரும்பிறன். எனி உங்கடை விருப்பம்" என்று கூறிவிட்டு. சென்று கொண்டு இருந்தான் சிவா. அவனுடைய நண்பர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்! டேய் எங்கடை பழைய சிவாதான்டா இவன்!" என்றான் சிறீமான். "டேய் ஆராட்சி வாடா!" என்று அகிலன் கூப்பிட்டபோது திரும்பிப்பார்த்தான் சிவா, என்கிற அந்த ஆராட்சிச் சிவா. அந்த ஆராட்சி என்கிற பட்டத்தில் இருக்கிற உரிமை பழைய நட்பின் வெளிப்பாடாய் அமைந்த சந்தோசம். மீண்டும் வந்து நண்பர்களோடு ஒட்டிக் கொண்டான் சிவா.

சிவா வந்தநேரம் தொடக்கம் அவனது நடவடிக்கைகளை காண பூமணிக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. "ஏன் வேலிக்கதியால் எல்லாம் வளர்ந்து போய்க்கிடக்கு அப்பா." என்று கேட்டான். மண்வெட்டியை எடுத்துக் கொண்டுபோய் தென்னைக்கு போன வாய்க்கால் தண்ணீரை எலுமிச்சைக்கு மாற்றிவிட்டான். முன்னரை போலவே சோறுவடித்த கஞ்சிக்குள் தேங்காய்ப்பூவை போட்டு கலக்கிக் குடித்தான். "ஏன் பூமணி இந்த வீட்டிலை, ஊருலையெல்லாம் ஆடி ஓடித்திரிஞ்சவன் கொஞ்ச நாளைக்கு எங்கையாவது போட்டு வந்திட்டால் ஆள் மாறிவிடுவான் என்று நினைச்சாயோ?" என்று கேட்டார் கனகசபை. எல்லாவற்றையும் விட மாமாவின் மகளைத் தான் கலியாணம் செய்யப் போவதாகக் கூட கூறிவிட்டான். "உனக்கு விருப்பம் என்றால் அது எங்களுக்கும் விருப்பம்தான்!" என்று அவர்களும் கூறியிருந்தார்கள்.

அன்று இரவு மாமா வீட்டுக்கு போனான் சிவா. அங்கு தடல்புடலாக வரவேற்பு, சாப்பிட பிஸ்கட் முதல் குளிர்பானம் வரை. சிரிப்பாக இருந்தது. 'என்னை நானாகவே இருக்க விடமாட்டார்கள் போலை கிடக்கு!' என்று நினைத்துக் கொண்டான். அங்கு மாமி, விந்தன், சிவனியா எல்லோருமே நின்றார்கள். ஆனால் அபிராமியைக் காணவில்லை. "ஏன் மாமி அபிராமி தொடர்ந்தும் குசினிக்கை நின்றால் புகை பிடித்து கறுத்தெல்லவோ போவாள்." என்று விளையாட்டாகக் கூறிய போதும் அவர்கள் முகங்களில் சந்தோச ரேகை விலகியே இருந்தது அவனுக்கு புரிந்தது. நிச்சயமாக நான் இல்லாத இந்தக்காலப் பகுதியில் இரு குடும்பங்களுக்குமிடையே பனிப்போர் மூண்டு இருக்கலாம். அபிராமி அவளோடு முன்பெல் லாம் சீண்டுவான். சண்டைப்பிடிப்பான். ஆனாலும் அவள் எதையுமே பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டாள். சிரித்த முகம், இரட்டைப்பின்னல், சிவப்பு றிபன், ஒற்றை மல்லிகைப்பூ, அவளைப்பத்து வருசங்களுக்கு பிறகு பார்க்கப்போறன். ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாக நேராக எழுந்து குசினிக்குப் போய் அவளின் கையைப்பிடித்து முன் ஹோலுக்கு இழுத்துக் கொண்டு வந்தான்.

"மாமா ஏன் எல்லாருமே என்னை ஒரு அன்னியன் மாதிரி பார்க்கிறீங்கள்? நான் இங்கை வந்து இவ்வளவு நேரத்துக்கும் ஏன் இவள் கூட என்னோடை ஒரு ஒரே ஒரு வார்த்தை கூட பேசவில்லைத்தானே!" அவளின் கண்கள் கலங்கி இருந்தன.

"மாமா இவளை நான் திருமணம் செய்யிறது உங்களுக்கு விருப்பம் தானே?"

"இல் லைத்தம்பி உங்கடை வசதிக்கும், தராதரத்துக்கும் ஏற்ற இடமாய் செய்யிறது தான் நல்லது." அவரின் வருத்தத்தை அவனும் புரிந்து இருந்தான். அதற்கு நேரடியாகவே பதில் சொல்லாது. "மாமா எங்களுக்கு முன்னாலை ஒரு திறந்த பெட்டியும், ஒரு பூட்டியபெட்டியும் இருக்கு. திறந்த பெட்டிக்குள்ளை தங்கம், வைரம், பணம், எல்லாம் இருந்தாலும் எங்கடை மனம் திறந்தபெட்டியிலை உள்ளதிலை திருப்தி அடையாமல் பூட்டிய பெட்டியை உடைப்பதிலை தான் மும்முரமாகி விடுகிறதாம் என்று ஒரு புத்தகத்திலை படிச்சன். அதாவது எங்களை உண்மையாக நேசிப்பவர்களை எல்லாம் ஓரம் கட்டிப் போட்டு, எங்களை நேசிக்காதவர்களைத்தான் சுற்றிச்சுற்றி வந்து கொண்டு இருக்கிறம். இந்தத்தவறை நிச்சயமாய் நான் செய்யப் போவதில்லை. எனக்கு தராதரத் தைப் பற்றி எல்லாம் தெரியாது. ஆனால் உங்களைத் தெரியும். அபிராமியை தெரியும். அவ்வளவுதான். என்ரை முடிவுலை எந்த விதமாற்றமும் இல்லை!" என்று கூறிவிட்டு போய்க்கொண்டு இருந்தான். அவனை பெருமையோடு பார்த்தார்கள் அவர்கள்.

'நல்லதோர் வீணை செய்தே-அதை
நலங்கெட புழுதியிலெறிவதுண்டோ?'

இலக்கிய நயம்

இளமையை வீணடிக்க விரும்பவில்லை!

மிளகாய்க் கண்டுகளைச் சுற்றி கிண்டியால் வட்டம் வரைந்து கொண்டே சென்றான் மிதிலன்.

கிண்டிய வட்டத்தினுள் அடியுரத்தைப் போட்டு மண்ணை முடியபடியே தொடர்ந்தான் செல்வம்.

"இந்தமுறை மழையால் கொஞ்சம் பிந்திவிட்டது. மழைக்கு முந்தி அடியுரத்தைப் போட்டிருக்கு வேணும். இப்ப சில கண்டுகள் தறுக்கணிச்சப் போகுங்கள்..."

"இனி மழையில்லை. இப்ப எல்லாத்துக்கும் பசளையைப் போட்டு நல்ல தண்ணி பாய்ச்சிவிட்டால் போதும்: அதுகள் எழும்பியிடுங்கள்...." என்று மிதிலனைப் பார்த்துச் சொல்லியபடியே கிண்டியை ஓரமாக எறிந்து விட்டு தண்ணீர்ப் பம்பை நோக்கி நடந்தான் செல்வம்.

இருவருமாக மிளகாய்ப் பாத்திகளுக்குள் தண்ணீரை நிறைய நிறைய விட்டுக் கட்டினார்கள். எல்லாப் பாத்திகளும் நிறைந்தபின் பம்பை நிறுத்திவிட்டு, இருவரும் காவல் கொட்டிலின் தாழ்வாரத்தில் போய் அமர்ந்துகொண்டார்கள்.

சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. வியர்வையைத் துடைத்துவிட்டுக் கொண்டிருந்தார்கள். உடலின் உஷ்ணம் சற்றுத் தணிந்ததும், மாலைத் தென்றல் பட்டுத்துணியாக மேனியில் தவழ்வதை உணர்ந்தார்கள்.

"களைத்த மேனியில் வந்து ஊர்கிற தென்றலின் சேவைக்கு தனியாக ஒரு விருது வழங்க வேண்டும்," என்று சிரித்துக் கொண்டே சொன்னான் மிதிலன்.

"அலை போனதும் வயலைகளுக்குள்ளிருந்து வெளியே ஊடி வருகிற நண்டுகள் போல, சூரியக் கதிர்கள் போனதும் தென்றல் எப்படித்தான் முளைக்கிறதோ தெரியவில்லை."

"தென்றல் எப்போதும் உள்ளதுதான். சூரியக் கதிர்களின் வீரியம் இருக்கும் மட்டும் அவற்றை நம்மால் உணர்ந்து கொள்ள முடிவதில்லை. இதோ பார்! இந்தப் பொழுது, அருமையான நிகழ்வுகளின் சங்கமம். தன்னை மென்மையாக உணர்த்துகிற காற்று, வானில் கோலம் வரைந்து கூடு திரும்புகிற பறவைகள், பாரதி சொன்னதுபோல 'கணந்தோறும் வியப்புக்கள் புதிது புதிதாய்க் காட்டும்' அடிவானத்து வண்ணக் களஞ்சியம் உவமை செய்யும் கவிதை.... எல்லாவற்றுக்கும் மேலாய் நமக்கு இருக்கும் வேலை முடித்த திருப்தி... இதெல்லாம்தான் இன்பம்! இதை விடவும் வேறென்ன வேண்டும்?" அரைக்கண் சொருகிய நிலையில் மயக்கத்திலிருப்பவன் போல் பேசினான் மிதிலன்.

செல்வம் அவனை வினோதமாகப் பார்த்தான்; முறுவிலத்தான்.

"இப்படியே சௌந்தர்ய உபாசகனாய் இருந்துவிட்டால் போதுமா? சாப்பாட்டுக்கு இது வழி செய்யுமா? அழகை, மெல்லிய உணர்வுகளைச் சிதைத்து அழித்துவிடும் குரூரம் நிரம்பியதாய் புற உலகம் இருக்கையில், நீ இன்பக் கனவுகளில் மிதந்தால் பாரதியை அவன் வாழ்ந்த காலம் கசக்கி புழுதியில் எறிந்தது போலத்தான் உனக்கு நடக்கும்!"

"எறிந்து விட்டுப் போகட்டும். இந்த உலகையும், வாழ்வையும் முடிந்தவரை ரசிப்பதே பிறப்பின் பயன். வாழ்க்கை நமக்கு எதற்குத் தரப்பட்டிருக்கிறது? கொண்டாடத்தான்! தேவையே இல்லாத அவலைகளை வரவழைத்துத் திண்டாடுவதற்கு இல்லை.."

"சரி சரி. கொண்டாடு! சூழல் அதற்கு இடம் விட்டால் உன்னைக் கொண்டாட வேண்டாமென்று யார் சொன்னது? உன் கனடாப் பயண ஒழுங்குள் என்ன மாதிரி இருக்கு? விசா வந்திடுமா?"

"செல்வா! அதோ பார் வானச் சிவப்பை. இளம் பெண் நாணப்படுவது போல இல்லையா? சிறிது நேரத்தில் அவள் நாணம் மீதுர தலை கவிழ்ந்து விடுவாள். உலகம் இருட்டாகி விடும். முகத்தைக் கவிழ்த்து விட்ட பெண்ணின் தலைக் கறுப்பைத்தான் நாம் காணப்போகிறோம். உடனேயே எல்லாம் இருண்டுவிட்டதாய் நாம் சோர்ந்துவிட வேண்டுமா? சற்று நேரத்தில் அவள் முகம் நிமிர்த்துவாள். உலகைத் தங்கமயமாக்கும் ஒளியுடன் நிலவும் வரும்..."

"இன்ப லாகிரியில் என்னவெல்லாமோ சொல்கிறாய். நான் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லையே, மிதிலா! உன் கனடா போகும் வேலைகள் எந்தளவில் இருக்கிறது?"

"கனடாவா? நான் எதுக்குப் போக வேணும்? அதெல்லாம் முடியாது என்று சொல்லிவிட்டேன்."

"ஏய். இப்படி மண்ணைக் கிளறிக் கிளறி ஒருவாய் கஞ்சிக்குத் தவண்டையடித்துக் கொண்டிருக்கிறதை விட்டிட்டு, குபேரனாய் வாழக் கிடைச்ச சந்தர்ப்பத்தை வேண்டாம் என்கிறாய்? கனடா போனால் நல்லா சம்பாதிக்கலாம் தானே! நீ போய்க் காசனுப்பினால் கௌரியும் நகை நட்டென்று சந்தோஷமாய் இருப்பாள்தானே?"

"போடா! நகை நட்டிலா சந்தோஷம்? எப்படியும் ஐம்பதிலோ அறுபதிலோ யமன் வந்துவிடுவான். அதுவும் இந்த நாட்டில் எந்தநேரத்திலும் அவன் நம்மிடம் வந்துவிடக் கூடும். அதற்குள் இந்த இளமைக்காலத்தை கண்காணா தேசத்தில் போய் எதற்குக் கழிக்க வேணும்? இப்ப போய் உழைச்சு, ஐம்பது வயதில் வந்தா வாழ்க்கையை அனுபவிக்கப் போகிறேன்? என் காதல் மனையாளை விட்டு நான் எங்கும் போகமுடியாது. எத்தனை பெரிய செல்வத்தைக் கொட்டுவதாக இருந்தாலும் சரி"

"சரி, இரண்டொரு வருஷத்திலேயே திரும்பி வந்துவிடேன். எதற்காகக் கிடைக்கிற வாய்ப்பை நழுவ விடுகிறாய்?"

"போடா, பேருக்கேற்ற மாதிரி நீ செல்வத்தில் தான் குறியாயிருக்கிறாய்.

தருவது முழுடில்யன்

இந்தப் பருவத்தில் அனுபவிக்க வேண்டிய இன்பத்தைப் பிற்காலப் பாதுகாப்பான ஆடம்பர வாழ்வுக்காக இழந்துவிடச் சொல்கிறாய். எனக்கு என் இளமைப் பருவ இன்பங்கள் முக்கியம். எதன் பொருட்டும் அதை நான் இழந்து விடச் சம்மதியேன்."

"இழந்துவிடவா சொல்கிறேன்? சிறிது காலத்துக்கு உன் இன்ப நாட்டத்தை ஒத்திவைத்துக் கொள், பணத்தைத் தேடு என்று சொல்கிறன்."

"உனக்குக் கல்யாணம் ஆகவில்லை. அதுதான் இளமையின் சுவையை அறியாதவனாக இருக்கிறாய். கரும்பின் அடிக் கரணைச் சுவைபோல இதழ் நீரும், காதினூடாகப் புகுந்து இதயத்தினுள் தேன் பெய்யும் அந்த வளையல் கொலுசு ஒலிகளும், காதல் மொழிகளும் சுவைத்தறியாதவன் நீ. இவ்வுலகில் கிடைத்தற்கரிய செல்வமெல்லாம் கிடைப்பதாக இருந்தாலும், இந்த இளமைப் பருவ இன்பனத்தை இழக்க யாரும் விரும்புவார்களா? மெல்ல மெல்ல முதுமையினால் நேரும் இயலாமையையும், கூற்றுவனது வருகையையும் முன்கூட்டியே தெரிந்து வைத்திருப்பவர்கள் ஒரு போதும் இளமையை வீணடிக்க ஒப்புக்கொள்ளார். இந்த வாழ்க்கையின் தலைமையின்பம் காதல் ஒன்றுதான். அதை உடலாலும் அனுபவிக்கக் கிடைத்த பருவத்தை எதன் பொருட்டும் நிராகரிப்பது இந்த வாழ்க்கைக்குச் செய்யும் நியாயம் அல்ல. "காதலினால் மானுடர்க்குக் கலவி உண்டாம், இன்பமுதற் கலைகளுண்டாம்....

ஆறுதலானால் அவள் கையைப் பற்றி
அற்புதம் என்றிரு கண்ணிடை ஒற்றி
வேதனை இன்றி இருப்பேன்.....
வேறெதும் செல்வம் எனக்கிங்கு
வேண்டாம்.... என்னளவில்,
இன்புறுவதே இப்பிறப்பின் பயன்.
எல்லோரும் இன்புறுக!"

இரும் கண் ஞாலத்து ஈண்டு பயம் பெருவளம்
ஒருங்குடன் இயைவது ஆயினும், கரும்பின்
கால் எறி கடிகைக் கண் அயின்று அன்ன,
வால் எயிறு ஊறிய வசை இல் தீ நீர்க்
கோல் அமை குறும் தாடிக் குறமகள் ஒழிய
ஆள்வினை மருங்கின் பிரியார் நாளும்
உறன்முறை மரபின் கூற்றத்து
அறன் இல் கோள் நற்கு
அறிந்திசினோரே.

(குறுந்தொகை : 267)

ஸ்போர்ட்ஸ்

வோர்ன் இடம்பெற மாட்டார்



அவுஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் தொடரில் இடம்பெற மாட்டார் எனத் தெரிய வருகிறது.

பந்து வீசும் விரலில் ஏற்பட்ட காயத்தினால் அறுவைச்சிகிச்சை செய்த ஷேன் வோர்ன் குறைந்தது ஆறு வார காலமாவது ஓய்வு எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப் பட்டிருக்கிறார்.

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி அங்கு அவுஸ்திரேலியாவுடன் 5 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கெதிரான 4வது டெஸ்ட் போட்டி வருகின்ற டிசம்பர் 26ம் திகதி மெல்போர்ன் நகரில் நடைபெறுகிறது. முதல் 3 டெஸ்ட் போட்டிகளில், ஓய்வெடுப்பதால் கலந்து கொள்ள முடியாத வோர்ன் 4வது மற்றும் 5வது டெஸ்ட்களில் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஷேன் வோர்னின் விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவரது விரலில் 2 உலோக ஊசிகள் பொருத்தப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டன.

ஷேன் வோர்னுக்குப் பதிலாக சுழற்பந்து வீச்சாளர் ஸ்ரூவேர்ட் மக்கில் அவுஸ்திரேலிய அணியில் இடம் பெறுகிறார். அவுஸ்திரேலியா-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி வருகின்ற நவம்பர் 23 ஆரம்பமாகவுள்ளது.

தொடரை வென்ற பாகிஸ்தான்

பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி பாகிஸ்தானிடம் 1-2 என்ற கணக்கில் ஒரு நாள் போட்டித் தொடரில் தோல்வியைச் தழுவியுள்ளது.

கராச்சியில் நடந்த முதல் போட்டியில் 5 விக்கெட்டுகளால் இங்கிலாந்து அணி வெற்றியீட்டியது. (பாகிஸ்தான் 9 விக்கெட் இழப்பிற்கு 302 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு இங்கிலாந்து 5 விக்கெட்டுக்களை இழந்து 304 ஓட்டங்களை எடுத்தது.)

லாகூரில் நடந்த 2வது போட்டியில் பாகிஸ்தான் 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. (இங்கிலாந்து 211 ஓட்டங்கள் எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 214 ஓட்டங்களை எடுத்தது.)

ராவல் பிண்டியில் நடந்த 3வது போட்டியிலும் பாகிஸ்தான் 6 விக்கட்டுக்களால் வெற்றி பெற்றது. (42.5 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 158 ஓட்டங்களை எடுத்தது இங்கிலாந்து. பாகிஸ்தான் 43.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களை எடுத்தது)

இந்திய விசிறி மரணம்

ஷார்ஜாவில் நடந்த முத்தரப்புப் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா 245 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இந்தியாவின் தோல்வியால் மன முடைந்த இந்திய கிரிக்கெட் விசிறி ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்துள்ளார்.

இறுதிப் போட்டியில் இந்திய அணி 54 ஓட்டங்களுக்குள் அவுட்டானதைத் தொலைக் காட்சியில் பார்த்த புதுடில்லியைச் சேர்ந்த 54 வயதான ஜியா ராம் அதிர்ச்சியடைந்தார்.

இதனால் இவருக்கு மாரடைப்பு ஏற்பட, இவரது மனைவி இவரை உள்ளூர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் போது மரண மடைந்தார்.

சிந்தியா பதில்கள்

★ **அரசாங்கத்திற்கு ஜே.வி.பி. நிபந்தனையற்ற ஆதரவு தருவதற்கு முன்வந்திருக்கிறதே?**

வீ.கலைமன்னன், கொழும்பு 06.

அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் தான் நெருடுகிறது. சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த எம்.பி.க்கள் அரசின் பங்காளிகளாவதன் மூலம் அமைச்சுப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதை அவர்கள் விரும்பவில்லை. தமிழ், முஸ்லிம் கட்சிகள் அரசை மிரட்டி அமைச்சுப் பொறுப்புக்களை எடுத்துக் கொள்வதாக ஜே.வி.பி., எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல ஆளுங்கட்சியிலுள்ள சிலரும் பொருமுகிறார்கள். மொத்தம் 45 அமைச்சர்களில் தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள் ஆக 7 பேர்கள்தான். சனத்தொகை விகிதாசாரப்படி பார்த்தாலும் குறைந்தது 12 அமைச்சர்களாவது சிறுபான்மையினருக்கு இருக்க வேண்டுமே! இதையே பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் இன ஐக்கியத்தைப் பேசுவதுதான் வேடிக்கை!

★ **கலக்கல் ஜோடி வடிவேலு-சரளா பற்றி?**

எஸ்.எம்.ஏ.மனோ, ஹற்றன்.

சமீபத்தில் 'மாயி' படம் பார்த்தேன். சரளாவிடம் அநியாயத்துக்கு அடிவாங்குகிறார் வடிவேலு. இன்னொருத்தர் அடி வாங்குவதையே பார்த்துச் சிரிக்கும் நம் ரசிகர்களுக்காக.... பாவம் இன்னொரு செந்தில்.

★ **என் அபிமான இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானின் முகவரியைத் தருவீர்களா?**

வே. நிரஞ்ஜன், பூனாகலை.

இல. 5, 4வது தெரு, சுப்பராயன் நகர், கோடம்பாக்கம், சென்னை 600024.

★ **சிந்தியா! உங்கள் மரணம் எப்படி வரவேண்டும் என விரும்புகிறீர்கள்?**

சி.துஷ்யந்தன், மண்டூர்.

அவ்வளவு அக்கறையா உங்களுக்கு? அப்படி வருவதாக இருந்தால்.... ம்... பதிலைச் சொல்வதற்கு முன் உங்களுக்கும் தெரிந்திருக்கக்கூடிய ஒரு துணுக்கை ஞாபகப்படுத்தி விடுகிறேன். யுத்தகளத்தில் தன் படை வீரர்களிடம் குறை, நிறைகளை விசாரித்து வந்த ஹிட்லர், உற்சாக மிகுதியில் ஒரு வீரரிடம் இப்படிக் கேட்டாராம்: "களத்தில் உன்னருகே எதிரியின் குண்டொன்று வந்து விழும்போது உன் கடைசி ஆசை என்னவாக இருக்கும் வீரனே?" அந்த சிப்பாயின் பதில்: "பிரதம தளபதியவர்களே! அப்போதும் தாங்கள் என்னுடன் இருக்க வேண்டும்!"

மரணத்தையே விரும்பாதபோது, எப்படி வரவேண்டும் என்று என்ன கேள்வி துஷ்யந்தரே!

★ **தற்போதைய இளைஞர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

எச்.எம்.நிபாஜி. திருகோணமலை.

மிகவும் மோசமான ஒரு சூழலில் வாழ விதிக்கப்பட்டிருக்கிறது அவர்களுக்கு. இளைய கவிஞர் அஸ்வகோஸ் அவர்களின் 'என் வசந்தம் வராமலே போய்விட்டது' கவிதைத் தொகுப்பிலிருந்து ஒரு சிறிய பகுதியை தருகிறேன்:

அள்ளப்படுவதற்கு முன்
எளிமையான ஒரு பாதை
பிரியமான வழித்துணை
முடியுமா
எங்கிருந்து தொடங்குவது நண்பா?

★ **கவலையை மறக்க ஏதாவது மருந்துண்டா?**

எட்வேட் நிஷாந்தன், பெரிய நீலாவணை-01.

ஆம்! அதைவிடப் பெரிய கவலையை வரவழைத்துக் கொள்வது!

★ **காதலிப்பது தப்பு என்றால், அதற்குத் தண்டனை?**

ஆ.கௌரீசன், மண்டூர்.

கல்யாணம்தான்!

'தெனாலி'யில் கமல்-ஜோதிகா

★ **சிந்தியா! கோடம்பாக்கத்தில் இன்றைய நம்பர் 1 நடிகை சிம்ரன் தானே?**

கே.லவன், வவுனியா.

அதெல்லாம் நேற்றைய கதை. குண்டுத் தோற்றமும் குறும்பு கொப்பளிக்கும் முகமுமாக வந்து 'குஷி'ப்படுத்திக் கொண்டிருக்கும் நக்மா தங்கைதான் இன்றைய நம்பர் 1.

★ **எல்லாப் பத்திரிகைகளிலும் குறுக்கெழுத்துப் போட்டி வருகின்றது. நீங்கள் குறுக்கெழுத்துப் போட்டி வைப்பதில்லை. என்ன காரணம்?**

டி.ஏ.ஜீவன், கொழும்பு-13.

எல்லாப் பத்திரிகைகளிலும் வருவதினால்தான்.

★ **சகுனம் பார்ப்பது ஆண்களா? பெண்களா?**

சுப்ராஷா, கொழும்பு-12.

ஆணா பெண்ணா என்பதற்கு ஏதேனும் ஒரு காரணத்தைச் சொல்லி பதிலளிக்கலாம் தான். ஆனால், அடுத்து 'உடம்பில் அரித்தால் உடனே சொறிவது ஆண்களா பெண்களா?', 'சாப்பிடும் போதே தண்ணீரும் குடிப்பது ஆண்களா பெண்களா?', 'அதிக தடவை பூனையைக் குறுக்கிடுவது ஆண்களா பெண்களா?' என்றெல்லாம் கேட்டு வைப்பீர்களோ என்று பயமாக இருக்கிறது! இதோ, இமாம் ஹஸனின் கேள்வியையும் பாருங்கள்.

★ **மன்னிக்கும் குணம் ஆண்களுக்கு அதிகமா? பெண்களுக்கு அதிகமா?**

எம்.எம்.இமாம் ஹஸன், ஹெம்மாத்தகம.

மன்னிப்பதில் அதிகம், குறைவு என்பதெல்லாம் ஆணா, பெண்ணா என்பதைப் பொறுத்ததில்லை; நீங்கள் செய்த தப்பைப் பொறுத்தது.

★ **அறியாமை கண்டு சிரிப்பு வருமா?**

பா.பாலேந்திரன், லிந்துல.

அது ஜோக் உருவெடுக்கும்போது சிரிக்கலாம். நகரத்துப் பணக்கார இளைஞன் ஒருவன் கிராமத்துக்குச் சென்றான். ஒரு புதிய பென்ஸ் கார் வாங்கி அதில் பயணம் செய்து கொண்டிருந்தான். ஓரிடத்தில் தெருவில் நின்றய தண்ணீர் தேங்கியிருப்பதைக் கண்டான். காரை நிறுத்தி, கண்ணாடியை இறக்கிவிட்டு வெளியே பார்த்தபோது ஒருவன் நின்று கொண்டிருப்பதைக் கண்டான். அவனிடம், "ஆழமொன்றும் அதிகமில்லையே" என்று கேட்டான். தெருவில் நின்றவன் "ஆமாம்" என்றான்.

இளைஞன் கண்ணாடியை ஏற்றிவிட்டு, காரை மேலே ஓட்டினான். கார் மெல்ல மெல்ல பள்ளத்து நீரில் மூழ்க ஆரம்பித்தது.

கிடுகலங்கிப்போன இளைஞன் வெளியே நின்றவனைப் பார்த்து "மடையா! ஆழம் இல்லையென்று சொன்னாயே!" என்று சுத்தினான்.

வெளியே நின்றவன் தலையைச் சொறிந்து கொண்டு "எனக்குப் புரியவில்லை. என் வாத்துக்கள் இதைக் கடந்து வந்தபோது, பாதிதானே நனைந்தன!" என்றான்.

★ **காதல் என்பது-கண் வரைந்த ஓவியமா?**

எம்.றிஸ்வான், பொகவந்தலாவ.

ஆமாம்! கண்களில் தொடங்குவதால் தான் காதலோடு கண்ணீரும் கூடவே இருக்கிறது போலும்.

பாம்புப் புற்றில் கிடந்த குழந்தை!

தலையணை சொன்னகதை

காந்தரூபி வந்து சேர்ந்த இடம் சந்திரபுரிச் சுடுகாடு. எரிந்து கொண்டிருந்த பிணத்தின் அருகே தலைவிரி கோலமாக அழுது கொண்டிருந்தவள் சந்திரபுரியைச் சேர்ந்த விலை மாதான சௌந்தரவல்லி. அவளுடைய மகளான சித்திரவல்லி நிறை மாதக்கர்ப்பிணியாக இருந்து குழந்தை பெறமுடியாமல் இறந்து போனாள்.

சௌந்தரவல்லியை ஒரு பேயாக இருக்க வேண்டும் என்று காந்தரூபி கருதிப் பயந்தாள். அந்தப் பிசாசு தன்னைப் பிடித்து விழுங்குவதற்கு முன்னர் தன் உயிரைப் போக்கி விடுவதே நல்லது என நினைத்த காந்தரூபி, எரிந்து கொண்டிருந்த பிணத்தின் தீயில் பாய்ந்து உயிரைவிடத்துணிந்தாள். சிதையை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணான காந்தரூபியைக் கண்ட சௌந்தரவல்லி, தனது மகள் தான் உயிர்பெற்று விட்டாளோ என்று ஒரு கணம் திகைப்புற்றாள். ஓடிச் சென்று காந்தரூபி தீயினுள் விழுந்து விடாமல் தடுத்தாள்.

காந்தரூபியை அருகில் போய்ப்பார்த்ததும், அவள் தனது மகளல்ல என்று கண்டு கொண்டாள் சௌந்தரல்லி. அவளை ஆசுவாசப் படுத்தி தன்மடியில் கிடத்திய சௌந்தரவல்லி, விடுதலை கிடைத்துவிட்டது. மீதிக்கதையை நீ சொல்லு பாக்கலாம்!" என்றார்.

அப்போது, தலையணைக்குள் புகுந்திருந்த வேதாளம் கதை சொல்லத் தொடங்கியது.

கானகத்திலுள்ள பாம்புப் புற்றினருகே காந்தரூபியின் குழந்தையை வைத்துவிட்டு மருத்துவச்சி போய் விட்டாள். அந்த புற்றில் ஐந்து தலை நாகம் ஒன்று வசித்து வந்தது. குழந்தை அழுது கொண்டிருந்தது. குழந்தை அழுது கொண்டிருந்ததைக் கேட்ட அந்த நாகப் பாம்பு புற்றிலிருந்து வெளியே வந்து பார்த்தது. அந்தக் குழந்தை யாருடையதாக இருக்க வேண்டும் என்று தனது ஞானதிருஷ்டியினால் பார்த்தது. காந்தரூபனின் முன்னோர்கள் அந்த நாக பாம்புக்கு பாலூட்டி வளர்த்து வந்தவர்கள் என்பதை அப்பாம்பு அறிந்து கொண்டது. எனவே அக்குழந்தையை மிகவும் பாதுகாப்பாக வளர்க்க வேண்டுமென்று கருதி, குழந்தையை அக்கானத்தி லிருந்த காளிகாம்பாள் கோயிலுக்கு தூக்கிச் சென்றது. அம்மனின் காலடியில் குழந்தையைக் கிடத்திவிட்டுத் திரும்பியது.

இந்தக் கோயிலுக்கு மன்னன் காந்தநாதன் காலை வேளையில் வந்து வணங்குவது வழக்கமாக இருந்தது. அன்று காலை வேளையில் கோயிலுக்குச் சென்றபோது அம்மன் சந்நிதியில் ஓர் அழகான ஆண்குழந்தை தன் கால்களை அசைத்து விளையாடிக் கொண்டிருப்பதைக் காந்தநாதன் கண்டான்.

தனது காவலர்களை அக்கானகத்தில் பல திக்குகளுக்கும் அனுப்பி, அக்குழந்தையின் சொந்தக்காரர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்து வருமாறு சொன்னான். காவலர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று தேடிப் பார்த்தனர். எவரையும் காண முடியவில்லை. இதனால் அக்குழந்தையை தானே எடுத்து வளர்ப்பதற்கு காளிகாதேவியின் ஒப்புதலை மன்னன் கேட்டான். அம்பாளின் உத்தரவாக அவளுடைய உச்சந்தலையில் வைக்கப்பட்டுள்ள வெள்ளை மலரொன்று அக்குழந்தையின் மீது வந்து விழுந்தது. இதனைக் கண்ட மன்னன் பெருமகிழ்ச்சி அடைந்து அக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான். அக்குழந்தையின் முகத்தில் ராஜகளையும் தேகம் முழுவதும் தேஜசும் காணப்பட்டமையினால், அக்குழந்தையை தன்னுடைய சொந்தமகனாக வளர்க்க வேண்டுமென்று மன்னன் காந்தநாதன் திட்டமிட்டான்.

மதனசிம்மன் என்ற பெயர் சூட்டி ஓர் அரசகுமாரனுக்கு வேண்டிய கசல கலைகளையும் பயிற்றுவித்தான். கானகத்தில் கிடந்தனாலோ என்னவோ, மதனசிம்மனுக்கு பறவைகள், மிருகங்கள் ஆகியவற்றுடன் அதிக தொடர்பு ஏற்பட்டது. அவ்வுயிரினங்கள் பேசும் மொழியையும் மதனசிம்மன் இயல்பாகவே கற்றுக் கொண்டான்.

அரண்மனையில் இராஜகுமாரனைப் போல் வளர்ந்து வாலிபனான மதனசிம்மன், ஒரு நாள் பட்டத்துயானையின் மேலேறி வீதிவலம் புறப்பட்டான். அந்த யானை விலைமகளான சௌந்தரவல்லி வாழ்ந்துவந்த வீட்டின் முன்புறமாக வந்தது. யானைமீது இராஜகுமாரன் மதனசிம்மன் வருகிறான் என்று கேள்விப்பட்டதும் ஊர்மக்கள் திரண்டு நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

சௌந்தரவல்லியின் வீட்டினுள்ளிருந்த காந்தரூபியும் வீட்டின் வெளிவாசலுக்கு வந்து நின்ற போது இளவரசனைக் கண்டாள். மதனசிம்மன் காந்தரூபியைக் கண்டதும் அவளுடைய பேரழகில் சொக்கிவிட்டான். இளவரசன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட காந்தரூபி உடனடியாக வீட்டினுள் சென்று மறைந்து கொண்டாள். இருப்பினும் அரசகுமாரனின் தோற்றம் தன்னுடைய கணவன் காந்தரூபனை ஒத்ததாக இருக்கிறதே என்று வியந்தவண்ணமிருந்தாள்.

மதனசிம்மன் தான் பார்த்த பெண் யார் என்பதை அறிய உடன்வந்த காவலர்களை விசாரித்தான். அப்பெண் விலைமகளான சௌந்தரவல்லியின் உறவுப் பெண்ணாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

அரண்மனை திரும்பியதும் தன்னுடைய அந்தரங்க உதவியாளரை அழைத்து, சிறிதளவு பொன் கொடுத்து சௌந்தரவல்லியின் வீட்டில் தான் கண்ட இந்த அழகியுடன் அன்றிரவுப் பொழுதை உல்லாசமாகக் கழிப்பதற்கு தான் விருப்புவதாகக் கூறி பொன் முடிப்பையும் சௌந்தரவல்லியிடம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டான்.

மதனசிம்மனால் அனுப்பப்பட்டவன் அன்று மாலையே சௌந்தரவல்லியிடம் சென்று, அன்றிரவு இராஜகுமாரன் வர விருப்பதாகக் கூறி, பொன் முடிப்பையும் கொடுத்தான். அளவற்ற மகிழ்ச்சியடைந்த சௌந்தரவல்லி, காந்தரூபியிடம் சென்று இராஜகுமாரன் வரவிருப்பதாகவும் அதனால் தங்கள் அனைவருக்கும் பெரிய அதிஷ்டம் அடிக்கப் போவதாகவும் கூறி, இராஜகுமாரனை வரவேற்க ஆயத்தமாக இருக்கும்படி கேட்டுக் கொண்டாள்.

இதுவரை தான் அறியாத புதுவித உபசரணைகள் தனக்கு நடப்பதைக் கண்டு காந்தரூபி திகைப்படைந்தாள். வருவது இராஜகுமாரனாக இருப்பதனால் அவனை எவ்வாறு வரவேற்று உபசரிக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லம் தோழிப் பெண்கள் பலவாறாக விளக்கங்களைக் கொடுத்தனர். இவற்றையெல்லாம் கேள்விப்பட்டதும். 'காந்தரூபி தனக்கேற்பட்ட நிலையை எண்ணி துன்பப்பட்டு துடித்து அழுதாள். சௌந்தரவல்லியும் காந்தரூபியிடம் மிகவும் கண்டிப்பாக அன்று காணப்பட்டாள்.

மாலையானதும் மதனசிம்மன் தன்னுடைய அந்தரங்க உதவியாளனுடன் அங்கு வந்து சேர்ந்தான். அவனை ஆடம்பரமாக வரவேற்ற சௌந்தரவல்லி அவனை அழைத்துக் கொண்டு போய் காந்தரூபி இருந்த அறைக்குள் விட்டு வெளியே கதவைப் பூட்டி விட்டாள். செய்வதறியாது தவித்த காந்தரூபி கட்டிலில் கிடந்து அழுதாள். அவளருகே சென்ற மதனசிம்மன் அவளுடைய இரு தோள்களையும் பற்றி நிமிர்த்தினான்.

அப்போது காந்த ரூபியின் மார்பகத்திலிருந்து பால் சுரந்து மதனசிம்மனுடைய முகத்தில் பீச்சியது. அவன் துணுக்குற்றான். உடன் அங்கிருந்து வெளியேறி நேராகத் தன் அரமனிக்குக் சென்றான்.

(மன்னன் வருவான்..)

மன்னாதி மன்னன் 30

"மகளே, ஏனம்மா தீயில்விழுந்து உன் உயிரை மட்டுமல்லாமல், உன்வயிற்றில் வளரும் மற்றுமோர் உயிரையும் மாய்க்கப் பார்க்கிறாய்? 'இதோ எரிந்து கொண்டிருக்கும் பெண் என்னுடைய மகள் சித்திரவல்லிதான், நிறை மாதக்கர்ப்பிணி; குழந்தைபெறமுடியாமல் இறந்து போனாள். என் மகளுக்குப் பதிலாக உன்னை என் மகளாக வைத்துக் காப்பாற்றுகிறேன். என்னுடன் வா!" என்று பலவாறாக ஆறுதல் கூறி காந்தரூபியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சந்திரபுரியிலுள்ள தனது இல்லத்துக்கு அழைத்துச் சென்றாள்.

சௌந்தரவல்லியின் வீட்டில் தங்கியிருந்த காந்தரூபிக்குச் சில நாட்களில் பிரசவவலி ஏற்பட்டது. சௌந்தரவல்லி ஒரு மருத்துவச்சியை ஏற்பாடு செய்தாள். காந்தரூபிக்கு ஆண்குழந்தை பிறந்தால் அதனைக் கொன்று விடுமாறும் பெண் குழந்தை பிறந்தால் மட்டும் அதனை வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்றும் மருத்துவச்சியிடம் கூறினாள்.

காந்தரூபிக்கு அழகான ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் அழகில் மயங்கிய மருத்துவச்சி, சௌந்தரவல்லி கூறியது போல் குழந்தையைக் கொல்ல விரும்பாமல், அதனை ஒரு துணியில் சுற்றி மறைத்து வைத்தாள். மரத்தாலான குழந்தைப் பொம்மை ஒன்றை தாயின் அருகில் வைத்து விட்டாள். பிரசவத்தின் போது காந்தரூபியின் கண்களை முன்னெச்சரிக்கையாக மறைத்து வைத்துவிட்டனர். பின்னர் அவளுடைய கண்களைக் கட்டியிருந்த துணியை அவிழ்த்துவிட்டு, மரப்பாச்சிதான் காந்தரூபிக்குப் பிறந்ததாகக் கூறி விட்டாள். இதனால் காந்தரூபி பெரும் கவலை அடைந்தாள்.

ஆண்குழந்தையை மருத்துவச்சி எடுத்துச் சென்று நடுக்காட்டிலுள்ள ஒரு பாம்புப் புற்றின் அருகில் கிடத்தி விட்டுத்திரும்பினாள்.

இதுவரை சரவிளக்கு கதையைக் கூறி நிறுத்திக் கொண்டது. மேற்கொண்டு இதனைத் தொடர்வதற்குத் தன்னால் முடியாது என்றும், தொடர்ந்து இக்கதையைக் கூற இளவசியின் தலையணையால் தான் முடியும் என்று கூறிவிட்டது. இதனைக் கேட்ட விக்கிரமாதித்தன். சரவிளக்கிலிருந்த வேதாளத்தை தலையணையிடம் ஏவிவிட்டார்.

"தலையணையே, முக்கியமான கட்டத்தில் சரவிளக்கு கதையை நிறுத்திக் கொண்டது. இக்கதையை நீயாவது தொடர்ந்து கூறமாட்டாயா?" என்று கேட்டார். இளவரசி அணைத்திருந்த தலையணை அப்போது "ஐயா! நான் அனுபவிக்கும் துன்பத்தை நீங்கள் அறியமாட்டீர்கள். நான் பல பக்கத்தாலும் இறுக்கித் தைக்கப்பட்டுள்ளேன். அதுமட்டுமல்லாமல், இளவரசி என்னை அழுத்தமாக அமுக்கி வைத்துள்ளார். எனக்கு மூச்சுவிடவே முடியாதிருக்கிறதே! நான் எவ்வாறு கதை கூறுவேன்!" என்றது தலையணை.

தலையணை கூறியதைக் கேட்டதும் இளவரசி ஏலக்கரம்பை தனது தலையணையை எடுத்துத் தரையில் வீசினாள். அப்போது விக்கிரமாதித்தன் தலையணையிடம், "தலையணையே, இப்போது உனக்கு ஓரளவு

சிலிர்ப்பு

ஒரு நாட்டில் சர்வாதிகார ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது, அதை எதிர்த்து மக்கள் அவ்வப்போது கலகம் செய்தனர். ஒரு நாள் முடி திருத்துபவர் ஒருவர் அந்நாட்டை ஆட்சி செய்த சர்வாதிகாரிக்கு மீசையை சீர் செய்யும்போது கேட்டான்,

"ஜனநாயகம் வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்களே, அதைப்பற்றி உங்கள் நிலை என்ன?" என்றான்.

அந்தச் சர்வாதிகாரிக்குக் கடும் கோபம் வந்தது. அடக்கிக் கொண்டார். ஆனால் மறுநாள் முகச்சவரம் செய்யும் போது,

"எப்போது தேர்தல் வைக்கப்போகிறீர்கள்?" என்று கேட்டான். சர்வாதிகாரி பல்லைக் கடித்தபடி பொறுமையாக இருந்தார்.

மறுமுறை மீசை திருத்தும்போதும் அவன்,

"எப்போது மக்களுக்குச் சுதந்திரம் தரப்போகிறீர்கள்?" என்று கேட்க,

சர்வாதிகாரியின் பொறுமை அடியோடு தொலைந்தது.

"அடேய் உனக்கு எவ்வளவு திமிர்? என்னிடமே என்னுடைய ஆட்சியை எதிர்த்துப் பேசுகிறாயா? இவனை இழுத்துச் சென்று சிறையில் அடையுங்கள்!" என்று காவலர்களுக்கு ஆணையிட்டார்.

முடி திருத்துபவர் அலறியபடி அவருடைய கால்களில் விழுந்தார்.

"தலைவரே! என்னை மன்னித்து விடுங்கள். என்னுடைய வசதிக்காகத்தான் நான் உங்களிடம் கேட்டேன்!" என்றான்.

சர்வாதிகாரி ஏதும் விளங்காமல்,

"என்ன சொல்கிறாய் நீ?" என்று வினவ, அவன்,

"ஒவ்வொரு முறை நான் உங்களிடம் கேள்வி கேட்கும் போதும், உங்கள் முகத்தில் உள்ள ரோமங்கள் கோபத்தால் சிலிர்த்து நிற்கின்றன. அது எனக்கு வெட்டுவதற்கு வசதியாக இருந்தது. எனவே தான் அடிக்கடி உங்களுக்கு கோபமூட்டினேன். என்னை மன்னித்து விடுங்கள்!" என்றான்.

மந்திரம் கால் மதி முக்கால்

ஜோதிடர் ஒருவர் தன் மகனைக் கூப்பிட்டு,

"இன்று நம் வீட்டுக்கு வருகிறவர்களைக் கவனித்து ஜோதிடம் சொல். கெட்டிக்காரத்தனமாக ஜோதிடம் சொன்னால், உன்னையும் என் தொழிலில் இறக்கி விடுகிறேன்!" என்றார்.

அன்று மாலை திடீரென்று பலத்த மழை, மின்னலும் இடியுமாக இருந்தது. அப்போது ஒருவர் ஜோதிடம் பார்க்க வந்தார். அவரிடம் ஜோதிடர் மகன்,

"நீங்கள் தென்மேற்குத் திசையில் இருந்து வருகிறீர்கள். அப்படித்தானே?" என்று கேட்க, வந்தவர் "ஆம்!" என்றார்.

"உங்கள் பெயர் மாணிக்கம் சரிதானே?" என்றபோது, வந்தவருக்கு ஒரே ஆச்சரியம் "ஆம்!" என்றார்.

"உங்கள் மனைவிதானே உங்களை ஜோதிடம் பார்க்க அனுப்பினார்!" என்று கேட்க, அதற்கும் "ஆமாம்" என்றார்.

வந்தவருக்கு ஜோதிடரின் மகன் மீது அபார நம்பிக்கை பிறந்தது.

ஜோதிடர் மகனும் சில நம்பிக்கையூட்டும் பலன்களைச் சொல்லவே, அவர் திருப்தியாகச் சென்றார்.

ஜோதிடருக்குப் பெரும் ஆச்சரியம். மகனைக் கூப்பிட்டு,

"எப்படி இப்படி நெத்தியடியாக ஜோதிடம் சொன்னாய்?" என்று கேட்டார்.

"அப்பா! வந்தவரின் பின் பக்க முடி கலைந்து முன்பக்கம் விழுந்திருந்தது. இப்போது தென்மேற்குத் திசையில் இருந்துதான் காற்று அடிக்கிறது. காற்றிற்குப் பின்பக்கமாக அவர் தலையைக் காட்டிக் கொண்டு வந்திருக்க வேண்டும். அதனால் தான் தென்மேற்குத் திசையில் இருந்து வந்திருந்ததாகச் சொன்னேன்.

விளக்கு வெளிச்சத்தில் அவர் குடைபிடியில் 'மாணிக்கம்' என்று பெயர் இருந்தால், பெயரைச் சொன்னேன்.

கடும் இடி முழக்கத்தோடு மழைபெய்யும்போது, இதைப் பொருட்படுத்தாமல் ஒருவர் ஜோதிடம் பார்க்க வருகிறார் என்றால், நிச்சயம் அவர் மனைவி விரட்டித்தான் வந்திருக்க வேண்டும்!" என்று சொன்னான் ஜோதிடரின் மகன்.

பெண்களின் அழகோ இலக்கியம் அதை
எங்களது வண்ண நகைகள்பின்னிப்பேசுகின்றன.
கிளை:
மட. காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.triple-comfort

இன்று எந்த வர்த்தகத் துறையினை எடுத்துக் கொண்டாலும் மொடல் அழகிகளைப் பயன்படுத்தி விளம்பரம் செய்யாமலிருக்க முடியாத அழகிகளைத் தேர்ந்தெடுத்து மொடலிங் முறையினைப் பயிற்றுவித்து விளம்பர நிறுவனங்களுடன் பேரம்பேசி மொடல் அழகிகளுக்கு மாதாந்தம் கொடுத்துவருவதுடன் தாராளமாகவும் கணிசமான தொகையினைப் பெற்று வரும் நிறுவனங்கள் மேலை நாடுகளில் இயங்குகின்றன.

இத்தகைய மொடல் முகவர் நிலையங்களில் மிகப் பிரசித்திபெற்று விளங்குவது அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் கசவனகா உலகளாவிய ரீதியில் நிறுவிய எலைட் நிறுவனமாகும். 1971ம் ஆண்டில் பின்நகரில் நிறுவப்பட்ட எலைட் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் தான் தொடர் இத்துறையில் கொடிகட்டிப் பறக்கும் சுப்பர் மொடல் அழகிகளான கான் ஹாட் யூட்தில் காணப்படுபவர்கள் சேலியா லாரியோ, சிண்டி கிராவுபோட் மற்றும் அம்பர் வல்லெட்டா ஆகியோர்.

எலைட் நிறுவனம் வருடத்துக்கு 10 கோடி டொலர் வரை தாராளமாக ஈட்டும் பெறுகிறது.

அவுஸ்திரேலியாவின் வட பிராந்தியத்தில் முதலைப் பண்ணைகள் பல இருக்கின்றன. இங்கு முதலைகளை வளர்த்து உரிய காலம் வந்ததும் அவற்றின் தோல்களை உரித்து பதப்படுத்தி பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். பெரும்பாலும் பிரான்ஸ் நாட்டில் முதலைத் தோல்களுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. இங்கு முதலைத் தோலாலான பெண்கள் பயன்படுத்தும் பையொன்று பத்தாயிரம் டொலர் வரை விற்கப்படுகிறதாம்.

SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

அழகிகள்

கண்காட்சி

வட பிராந்தியத்தில் இப்பொழுது 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முதலைகள் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றனவாம். குஞ்சுகளாக இருந்து 3 வருடங்களில் 6 அடி நீளம் வரை முதலைகள் வளர்ச்சியடைந்து தோல் பிடிக்கத் தகுதியாகி விடுகின்றன. இந்த வர்த்தகத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது.

குதிப்பு

கனேடிய சகோதரர்களைப் பொருத்தமட்டில் சறுக்கி செல்லும் முறையில் அதிக தூரம் பாய்ந்த சாதனை நிலை நாட்டி உலக சம்பியன் விருதினைப்பெற்றார். டோனி அவர் 17 இப்பாக்களை வைத்து சுமார் 17 அடி தூரமாகப் பாய்ந்து இச்சாதனையை அவர் நிலைநாட்டினார். 1972 ஒலிம்பிக் நகரில் கலிபோர்னியாவில் கோல் பீச்சில் இப்போட்டி நடைபெற்றது.

உச்சி வீடு

வெளிச்சம்

வானியல் ஆராச்சிகளுக்குத் தேவையான விளக்குகளை மகமன் என்ற நிறுவனம் 1963ம் ஆண்டில் இருந்து தயாரித்து வருகிறது.

வானில் ஆராச்சியாளர்கள் பயன்படுத்த இந்நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட விளக்குகளில் மிகவும் விலையுயர்ந்த விளக்கு இதுதான். இரண்டு வாரங்களைக் கொண்டதும் அலுமினிய குழாய்களை கொண்டதுமான இந்த விளக்கின் உயரம் 40 சென்டி மீட்டர் ஆகும்.

இந்த விளக்கு ஒன்றின் விலை சுமார் 28 ஆயிரம் ரூபா.

இந்தோனேஷியத் தீவுக் கூட்டங்களில் பலதரப்பட்ட இன மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் பல இனத்தவர்கள் இன்றும் துளிகூட நாகரிகமற்ற காட்டு மிராண்டி வாழ்க்கையே வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் நரமாமிச பட்சிணிகளும் இன்றும் வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

ரியன் ஜாயா என்ற பிரதேசத்தில் கோரோவை மற்றும் கோரோலை ஆகிய இரு இனங்களும் வாழ்ந்த மரங்களில் உச்சாரக் கொம்புகளில் தங்கள் இருப்பிடங்களை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

படத்தில் காணப்படுவது கோரோலை இனத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தவர் அமைத்த வீடு. தரையிலிருந்து 190 அடியுயரத்தில் இந்த வீட்டினை அமைத்துள்ளனர். அங்கிருந்த வண்ணம், வானிலை, பறவைகளின் வண்ணங்கள் ஆகியவற்றில் நடமாட்டங்களை அவதானிப்பதற்காகவும் இத்தகைய உயரத்தில் இந்த மக்கள் வீடுகளை அமைக்கின்றார்கள். மிருகங்களையும் பறவைகளையும் வேட்டையாடி உணவும் இவர்கள் பெரும்பாலும் உட்கொள்வதாகவும் அறியவருகிறது.

பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் சயன் 31.10.2000

இத்தாலி Bolognaவில் வசிக்கும் சிவகுமார்-சிவநந்தினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சயன் தனது முதலாவது பிறந்தநாளை 31.10.2000 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

சாமிக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, இத்தாலியிலுள்ள அப்பப்பா-அப்பம்மா, அம்மப்பா-அம்மம்மா, பெரியமாமா-மாமி, சுகிமச்சான், ஆதிமச்சான் திமோ, கனடா மாமா-மாமி,லிலிமச்சாள்-சாமினி-சிவாணி மச்சான்மார்,சுவிஸ்மாமா-மாமி-லவி-ஆரணி மச்சான்மார்,இத்தாலி பெரியப்பா-பெரியம்மா, அருமைச்சித்தி ஜனனி, மாறு/ கலியல்காடு புட்டன்-புட்டி, மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் சாமி பகவானின் அருளால் சகல வளங்களும் பெற்று பல்லாண்டு காலம் அன்புடனே வாழக வாழக என்று வாழ்த்துகிறார்கள்.

தகவல்: சிவகுமார் (இத்தாலி)